# தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்

ரா. சீனிவாசன். எம்.ஏ., எம். லிட்.
தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு—ஜுன் 1964
வெளியிடுவோர் :
R. ஆண்டாளம்மாள்
சென்னை-30,

ரூ. 2-00.

ஜெனரல் பிரிண்டர்ஸ், பெரியமேடு, சென்னை-3.

# முன்னுரை

சந்தனப் பொதியில் தவழ்ந்த நற்றமிழாம்
செந்தமிழ் இலக்கிய வளம்பல உளவாம்
அந்தமில் அழகு அதிற்சில உணர்த்தும்
நந்தலில் வரலாறு நவின்றனர் ஒருசிலர்
தொகைநூல் மிகுநூல் எனவகைப் பலநூல்
எனைநூல் எழுந்தன அனைநல் நூலுள்
பீ. ஏ; பி.எஸ்.சி என்னும் தேர்வுக்கு
எளிதிற் பயில எழுந்தது இந்நூல்;

கருத்துச் செறிவும் கட்டுரைத் தெளிவும்
பொருத்து நடையும் பொருந்திய வடிவும்
கலந்து அமைந்தன கட்டுரை பத்தே
அலந்து எடுத்தன அழகுறு முத்தே
செய்திச் சுமையை மிகுதியும் குறைத்துச்
சுருங்கக் கூறி விளங்கவும் வைத்தேன்
அழகிய தமிழில் ஆக்கித் தந்தேன்
பழகிப் படிக்கப் பத்தும் தேர்ந்தேன்;

ஏதோ எழுதி ஏதோ படைத்தேன்
ஈதோ இதனைப் படித்துப் பாரீர்
கன்னல் கரும்பு தின்ன விரும்பும்
சின்னஞ் சிறுவர் சீவித் துணித்து
இனிப்பும் சுவைப்பும் கசப்பும் கரிப்பும்
நுனியும் முடியும் நுகர்ந்தே நுவல்வர்
படித்து முடித்துத் தேர்வை முடிப்பீர்;
பெறுவீர் வெற்றி இதனைப் பின்பற்றி.

'ராசீ'

# உள்ளுறை

| | | | |
|---|---|---|---|
| 1. | சங்க இலக்கியங்கள் | ... | 1 |
| 2. | கீழ்க்கணக்கு நூல்கள் | ... | 41 |
| 3. | இரட்டைக் காவியங்கள் | ... | 57 |
| 4. | பல்லவர்காலத்துச் சமய நூல்கள் | ... | 68 |
| 5. | சோழர்காலமும் காவியவளர்ச்சியும் | ... | 81 |
| 6. | சிற்றிலக்கியங்கள் | ... | 91 |
| 7. | இலக்கண நூல்கள் | ... | 106 |
| 8. | உரையாசிரியர்கள் | ... | 111 |
| 9. | சமயச்சார்பும் இலக்கியவளர்ச்சியும் | ... | 115 |
| 10. | தற்கால இலக்கியங்கள் | ... | 120 |

# 1. சங்க இலக்கியங்கள்

தமிழ் இலக்கியம் தொன்மை வரலாறு பெற்று விளங்குவது; மிகப் பழைய இலக்கியமாக நமக்குக் கிடைத்திருப்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும். இவற்ரோடு தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும் தொன்று தொட்டு இன்றுவரை நடைமுறையில் பயின்று வருகிறது.

சங்ககால நூல்கள் பல மறைந்து விட்டன; அவற்றின் பெயர்கள் சில அறியப்படுகின்றன. எஞ்சி நின்றவற்றைப் பிற்காலத்தோர் தொகுத்துத் திரட்டி வகைப்படுத்திப் போற்றத் தொடங்கினர். அவற்றை எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் வழங்கி வருகின்றனர். அவையே சங்க நூல்கள் என்ற பெயரால் இன்றும் வழங்கி வருகின்றன.

**முச்சங்கங்கள்**

வடக்கே வேங்கடமலையும் தெற்கே குமரிமுனையும் தமிழ்நாட்டு எல்லைகளாகக் கருதப்பட்டன. இவ்விரண்டு எல்லைகட்கும் உட்பட்ட நிலப்பகுதியைத் தமிழகம் என்று கூறிவந்தனர். குமரி முனைக்குத் தெற்கே கிடந்த நிலப் பரப்புக் கடல் கோளால் அழிந்துபட்டது என்பர்.

" பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள."

என்று சிலப்பதிகாரம் இக்கடல் கோளைக் குறிக்கும். அந்நிலப் பரப்பில் தென்மதுரை என்ற நகரில் பாண்டிய மன்னர்களின் தலைமையில் தலைச்சங்கம் இருந்தது என்றும், இத்தலைநகர் கடல்கோளால் அழிந்து பட்டது என்றும், பிறகு மீண்டும் கபாடபுரத்தில் இடைச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டது என்றும், அக்கபாடபுரமும் கடல் கோளால் அழிந்துபட இப்பொழுதுள்ள மதுரையில் மூன்றாவது சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர் என்றும் கூறுவர். அகத்தியர், முதல் சங்கத்தைச் சார்ந்தவர் என்றும், தொல்காப்பியர் இடைச் சங்கத்தைச் சார்ந்தவர் என்றும், எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் கடைச் சங்கத்தைச் சார்ந்தவை என்றும் இறையனார் அகப் பொருள் உரையால் அறியக்கிடக்கின்றன.

சங்கங்கள் மூன்று இருந்தன என்றும், சங்கங்களே இருந்ததில்லை என்றும், சங்கம் ஒன்று மட்டும் இருந்திருக்கவேண்டும் என்றும் பல்வகைக் கருத்துக்கள் நிலவுகின்றன. இவை எங்ஙனமாயினும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க நூல்கள் என்ற பெயரால் வழங்கி வருகின்றன. இவை சங்க காலப் புலவர்களால் தனித் தனியே பாடப் பெற்றவை. பிற்காலத்தில் நான்கு ஐந்து நூற்றாண்டுகள் கழிந்த பிறகு இவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்து இவற்றின் பொருள் மரபுக்கும் செய்யுள் மரபுக்கும் ஏற்றவாறு வகைப்படுத்தித் தொகைப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. இந்நூல் முழுமையும் கிடைத்திருக்கிறது.

## சங்கவிலக்கியப் பொருள் மரபு

இச்சங்க நூல்களாகிய எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும், இயற்கையோடு இயைந்த இன்ப அன்புவாழ்க்கையையும் அறத்தோடு பொருந்திய புறவாழ்க்கையை

யும் விளக்குகின்றன. இப் புறவாழ்க்கையில், அரசர்களின் வீரமும் கொடைவளமும் சிறப்பிக்கப்படுகின்றன. அன்பும் பண்பும் பொருந்திய அகவாழ்க்கையை அகம் என்றும், வீரமும் கொடையும் பொருந்திய வெளிவாழ்க்கையைப் புறம் என்றும் மரபு வகுத்தனர். இவ்வாழ்க்கை மரபே அக்கால இலக்கிய மரபும் ஆகியது. அகவாழ்வு களவு கற்பு என இருதிறத்தால் ஆராயப்பட்டது.

இம்மரபின் அடிப்படையில் அக்கால இலக்கியங்களின் அமைப்பும் பிரிவும் அமையலாயின. எட்டுத்தொகை நூல்களுள் அகமே பற்றித் தொகுக்கப் பெற்றவை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பவையாம்; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணைப் பாடல்களாம். பரிபாடல் புறத்திணைப் பகுதிகளும் அகத்துறைப் பகுதிகளும் தன்னகத்தே பெற்று விளங்குகிறது. பத்துப்பாட்டு என்னும் தொகுப்பினுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பவை அகப்பாடல்களாம். ஆற்றுப்படைகள் ஐந்தும், ஏனைய மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை என்பனவும் புறப்பாடல்களாம்.

அகப்பொருள் பற்றிய ஒழுக்கங்களை அன்பின் ஐந்திணை என்பர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன ஐந்திணை எனப்படும். இப்பெயர்கள் முதன்முதலில் செடி கொடிகட்கு மட்டும் வழங்கிப் பின்னர் நிலங்கட்கும், அந்நிலங்களோடு மிகுதியும் தொடர்புடைய ஒழுக்கங்கட்கும் மருவி வழங்கிவரத் தொடங்கின. குறிஞ்சி என்பது, மலைப்பகுதியையும் புணர்தல் ஒழுக்கத்தையும் உணர்த்தியது. காடும் மலையும் திரிந்த கொடிய பாதை வழிகளையும், பிரிதல் ஒழுக்கத்தையும் பாலை எனக் கூறிவந்தனர். காடும் காடு சார்ந்த நிலப்பகுதியும், இருத்தலாகிய கற்பு ஒழுக்கமும் முல்லை எனப்பட்டன.

இவ்வாறே வயற்பகுதியும் ஊடல் ஒழுக்கமும் மருதம் எனவும், கடற்கரைப் பகுதியும் இரங்கல் ஒழுக்கமும் நெய்தல் எனவும் கூறப்பட்டன.

இவ் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களேயன்றிக் குறையுடைய ஒழுக்கங்கள் இரண்டனையும் குறிப்பிட்டு வந்தனர். அவற்றைப் பெருந்திணை, கைக்கிளை என்பர். பொருந்தாத காதல் பற்றி எழும் பேச்சும் உறவும் பெருந்திணை எனப்பட்டன. காதல் முற்றுப்பெறாத நிலையில் ஒரு மருங்கு மட்டும் தோன்றும் காதல் நிகழ்ச்சியைக் கைக்கிளை என்று கூறுவர். காமஞ் சாலா இளமை யோள்வயின் ஏமஞ் சாலாக் காளையோன் ஒருவன் அவள் மனநிலையைப் பொருட்படுத்தாது, காதல் உரைகள் பேசுவதும் கைக்கிளை எனப்பட்டது.

அகத்திணை எழுவகைப் படுமாறு போலப் புறத்திணையும் எழுவகையாகப் பிரிக்கப்படுகின்றது.

அவை, முறையே வெட்சி. வாகை, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, பாடாண் என்பன. பசுநிரைகளைக் கவர்தலை வெட்சி என்றும், வெற்றிச் சிறப்புக்களை வாகை என்றும், பாடிவீடு அமைத்துப் போர்செய்யும் நிகழ்ச்சியை வஞ்சி என்றும், அரண்களைத் தாக்கிப் போர் நிகழ்த்தலை உழிஞை என்றும், களம் குறித்துப் போர் செய்தலைத் தும்பை என்றும் குறித்து வந்தனர். இவை ஐந்தும் புறத்திணைப் பகுதிகள். இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும நிலங்களுக்கு உரிமை கொண்டாடப் பெற்றன. நிலையாமையை உணர்த்தும் செய்திகளைக் காஞ்சி எனவும், கொடைத்திறனைப் பாடாண்டிணை எனவும் கூறிவந்தனர்.

**தொல்காப்பியம்**

இப்பொருள் மரபுகளையும் அக்கால மொழி மரபையும் உணர்த்தும் பழமையான தமிழ்நூல் தொல்காப்பியம்

ஆகும். அகப் பொருள் மரபினை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களிலும், புறப்பொருள் மரபினைப் புறத்திணையியல் என்ற ஒரே இயலிலும், செய்யுள் மரபினைச் செய்யுளியலிலும், பாடற் சுவைகளாகிய மெய்ப்பாடுகளை மெய்ப்பாட்டியலிலும், அணிமரபுகளை உவமவியலிலும், சொல்வழக்கு மரபுகளை மரபியலிலும் விளக்குவர். இவ்வொன்பது இயலும் சேர்ந்து பொருளதிகாரம் எனப்படும். தமிழ் மொழியின் ஒலி நுட்பங்களையும் ஒலித் திரிபுகளையும் எழுத்ததிகாரத்திலும், சொல்லிலக்கணங்களைச் சொல்லதிகாரத்திலும் விளக்குவர். இவ்வாறு மொழிக்கும் பொருளுக்கும் இலக்கணம் வகுத்துச் சிறந்த மொழிவிளக்க நூலாகவும் திறனாய்வு நூலாகவும் தொல்காப்பியம் முழுமை பெற்று விளங்குகிறது. இது முன்னோர் மொழியையும் பொருளையும் விளக்குவதோடு பின்னோர்க்கும் வழிகாட்டியாக விளங்கித் தமிழ் மரபையும் இலக்கிய மரபையும் போற்றி வரும் சிறந்த அரணாக விளங்குகிறது.

சிறப்பாகப் பொருளதிகாரப் பகுதியில் முதல் கரு உரிப் பொருள்களின் விளக்கம் தரப்படுகின்றது. நிலமும் பொழுதும் முதற்பொருளாம்; அவ்வவ்நிலங்களுக்குரிய புள், விலங்கு முதலிய உயிர்வகைகளும், மக்களும், அவர் செயலும் கருப்பொருளாம்; தலைமக்களின் ஒழுக்கச் செய்திகள் உரிப்பொருளாம். இம் முப்பொருளும் அமையச் செய்யுட்கள் அமையவேண்டும் என்பது நியதி. உரிப் பொருள்மட்டும் இயங்கும் செய்யுட்களும் உண்டு. கருப் பொருளும் உரிப்பொருளும் மட்டும் சேர்ந்து வருதலும் உண்டு.

மேலும் கருப்பொருளை உவமையாகக் கொண்டு பெறப்படும் உவமையணியை உள்ளுறை உவமம் என்றும், உவமையாக அன்றிக் குறிப்பால் பொருள் புலப்படுத்துவனவற்றை இறைச்சிப்பொருள் என்றும் குறிப்பிட்டுக்

காட்டுவர். வினை, பயன், மெய், உரு என்ற நான்கு வகைகளில் அமையும் உவமைத் திறங்களும், உவம உருபுகளும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இக்குறிப்புக்கள் எல்லாம் அக்கால இலக்கியத் திறனாய்வுக் கருத்துக்களாக விளங்குகின்றன.

## எட்டுத்தொகை

தமிழர் தம் தொல்பெருமையையும் நனி நாகரிகச் சிறப்பினையும் உலகினர்க்குக் காட்டும் கருத்துக் கருவூலங்களாக மிளிர்வன சங்க இலக்கியங்கள் எனலாம். நந் தமிழ்ப் பெரும் புலவர்கள் ஆழ்ந்த உணர்வுகளையும் வாழ்வின் உண்மைகளையும் தோன்றிய நேரத்திலேயே பாட்டாகத் தீட்டியதால் அவை சிதறிக் கிடக்கும் உதிரிப் பூக்களாகக் காட்சியளித்தன. அவற்றைப் பிற்காலப் பெருமக்களுள் சிலர் பாட்டின் பொருளாலும் யாப்பின் அமைப்பாலும் தெரிந்து எடுத்துத் தொகுத்துத் தொகை நூலாம் மாலைகளாகத் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பட்டனவே எட்டுத்தொகை நூல்களாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை எண்பெருந்தொகை நூல்களாகும்.

அகம், புறமெனப் பாடும் பொருள் கொண்டு முதலில் இரண்டு பிரிவாக்கினர். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, முதலியன அகப்பாடல்களுள் அடங்கின; பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பாடல்களாயின. பரிபாடல் அகமும் புறமும் கலந்த இசைப்பனுவலாகும். அகப்பாடல்களை மேலும் அடிவரையறையால் முப்பிரிவாக்கினர். குறுகிய பாடல்கள் நானூற்றைக் குறுந்தொகை எனப் பெயரிட்டுத் தொகுத்தனர். நீண்ட பாடல்களை நெடுந்தொகை யாக்கினர். இதனை அகநானூறு என்றும் குறிப்பர். இடைப்பட்ட

பாடல்களை நற்றிணை எனப் பெயரிட்டுத் தொகையாக்கினர் புறப்பாடல்களில் சேர மரபு ஒன்றையே பாடிய பதிற்றுப்பத்தைத் தனி நூலாக்கினர்.

இத்தொகை நூல்களில் பரிபாடல் நீங்கிய ஏனைய ஏழு நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் உள்ளன. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பின்னரே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பெரும்பாலோர் முடிபு. பாரதம் பாடிய பெருந்தேவனார், அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய ஐந்திற்கும் வாழ்த்துப் பாக்களை இயற்றியுள்ளார். நல்லந்துவனாரின் இறைவணக்கத்துடன் கலித்தொகை தொடங்குகிறது.

"எரியெள்ளு வன்ன நிறத்தன்" என்ற செய்யுள் பதிற்றுப் பத்தின் கடவுள் வாழ்த்தென்று கொள்ளப்படுகிறது. அச் செய்யுள் பாடிப் போந்த ஆசிரியர் பெயர் தெரிந்திலது.

தொகைநூல்கள் எட்டனுள் சிறப்படை பெற்றுத் திகழ்வன மூன்றும்; 'நல்ல' என்பது குறுந்தொகைக்கும் 'ஓங்கு' என்பது பரிபாடலுக்கும், 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்பது கலித்தொகைக்கும் சிறப்படைகளாக விளங்குகின்றன.

**நற்றிணை**

ஒன்பதடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டடிப் பேரெல்லையும் கொண்ட அகப்பொருள் நுதலும் நானூறு பாடல்களின் தொகுப்பு நற்றிணையாகும். இதனை நற்றிணை நானூறு என்றும் வழங்குவர். பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியால் தொகுக்கப்பட்டது. தொகுத்தார் யாவர் என்பது தெரியவில்லை. திருமால் கடவுள் வாழ்த்தில் பேசப்படும் இறைவன் ஆகும். சில பாடல்களின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 175 புலவர்கள் இப்பாடல்

களைப் பாடியுள்ளனர். இய்ற்பெயர் மறையப் பாடல் தொடரால் சில புலவர்கள் பெயர்பெற்றுள்ளனர்.

" கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கட் பேதையோடு இனன் இரிந்து ஓட "

என்னும் தொடரைப் பாடிய புலவர் 'விழிக்கட் பேதைப் பெருங் கண்ணனார்' எனச் சிறப்புப் பெயர் பெற்றார். தலைவனின் உள்ளப் போராட்டத்திற்குக் களிறுமாறு பற்றிய தேய்புரிப் பழங் கயிற்றை உவமை கூறியதால் தேய்புரிப் பழங் கயிற்றனார் என்று பிறிதொரு புலவர் அழைக்கப் பெற்றுள்ளார்.

அகப்பாடல்கள் பல சார்த்து வகையில் வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வரலாற்றுச் செய்திகள் பயின்று வருவதை அகநானூற்றில் பலவிடங்களில் காணலாம். நற்றிணையிலும் சிலவிடங்களில் வரலாற்றுக் குறிப்புக்கள் வந்துள்ளன. 'வல்வில் ஓரி' (பா-6) என ஓரியும், 'கொற்றச் சோழர் கொங்கர்' (பா. 10) என்ற தொடரால் கொங்கரும் 'வெண்கோட்டு யானைப் போஓர்க் கிழவோன் பழையன்' எனப் பழையனும் சுட்டப்படுகின்றனர்.

நற்றிணை ஐந்தாம் பாடலில், "ஒருமுலை அறுத்த திருமா உண்ணி" என்ற தொடர் வருகின்றது. இத்தொடர் கற்பின் செல்வி கண்ணகியைக் குறிப்பதாகச் சிலர் கொண்டனர். ஆயினும் இக்கருத்து வலுப்பெறவில்லை.

" நீர்வளர் ஆம்பற் றூம்புடைத் திரள்கால்
நார் உரித்தன்ன மதனில் மாமை "

எனப் பெண்களின் மாமை நிறம் உவமை வாயிலாக விளக்கப்படுகின்றது.

" தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல
புரைய மன்ற பெரியோர் கேண்மை "

என்று உயர்ந்த கேண்மையை விளக்குவது நயம் பயப்பதாக உள்ளது.

" முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் "

என்பது போன்ற அரிய பண்பாட்டு விளக்கங்களும் காணக்கிடக்கின்றன.

இவ்வாறு உயர்ந்த கருத்துக் கொண்ட பல அகப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணையிலும் அமைந்துள்ளன.

'நல்' என்ற அடைமொழி புணர்க்கப்பட்ட திணை யென்னும் பெயரொடு இத்தொகைநூல் குறிக்கப்படுகிறது. இலக்கண நூல்களுள் பிற்காலத்தில் பவணந்தியாரின் நூல் நன்னூல் எனப்பட்டது. திணை என்ற பெயர் பெற்ற முதல் நூலும் இதுவேயாகும். இதனை ஒட்டிச் சங்கம் மருவிய காலத்தில் அகப்பொருள் நூல்கள் திணைமாலை ஐம்பது, திணை நூற்றைம்பது முதலிய பெயர்கள் பெற்று விளங்குகின்றன.

**குறுந்தொகை**

'நல்ல' என்ற சிறப்பு அடைமொழியால் இதன் பெருமை பாராட்டப்படுகிறது. குறுகிய அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகைநூல் என்பது இதன் கருத்தாகும். நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடைய செய்யுட்களைக் கொண்டது இந்நூல். குறுந்தொகையின்கண் இன்று 401 செய்யுட்களும், அவற்றுள் ஒன்பதடி கொண்ட இரண்டு செய்யுட்களும் (307, 391) காணப்படுகின்றன. இருநூற்றைவர் பாடியுள்ளனர்

முருகனைப் பற்றிய கடவுள் வாழ்த்து இதனை அழகு படுத்துகிறது.

இதில் வரும் உவமைகள் மிகச் சிறப்பானவை. தக்க உவமை கொண்டு காதலர்களின் காதல் உள்ளம் கவின் படச் சிறப்பிக்கப்படுகிறது.

'செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே'

என்று, நெஞ்சக்கலப்பும் நீர்க்கலப்பும் ஒன்ருக இணைக் கப்படுகின்றன.

இல்லற வாழ்வின் இனிமை செவிலித் தாயின் கூற்றில் ஒரு சிறந்த அன்பு ஓவியமாகக் காட்டப்படுகிறது.

தானே துழந்து அட்ட தீம்புளிச் சோற்றைத் தலைவன் உண்டு இனிது எனப் பாராட்டிய இன்னுரையைக் கேட்ட தலைவியின் ஒளிபெற்ற முகத்தையும் அன்பைத் தெரிவித்த தலைவனின் அளியையும் கண்டு செவிலி பாராட்டுதல் அன்பு வாழ்வைக் காட்டுகிறது:

'தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள்நுதல் முகனே'

தலைவன் வராத நிலையில் முல்லை மலர்ந்து தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தலைவிக்குத் தோன்றுகிறது. 'பூங்கொடி முல்லை தொகுமுகை இலங் கெயிருக நகுமே தோழி' என்று தோழியைப் பார்த்துக் கார் காலம் வந்து விட்டதே என்று சுட்டிக் காட்டுகிருள் தலைவி.

குறுந்தொகைப் பாடல்களில் சில எளிய சொற்களால் புனையப்பட்டுச் சிறப்பாக அமைந்துள்ளன.

"முகை முற் றினவே முல்லை; முல்லையொடு
தகை முற் றினவே தண்கார் வியன்புலம்"

என்பது போன்ற தொடர்களை எளிமைக்குச் சான்ருகக் காட்டலாம். ஓரோவழி அரிய சொற்களமைந்த பாடலும் இடம் பெறுகின்றன.

"வேதின வெரிநின் ஓதிமுது போத்து" என்பது போன்ற அரிய சொற்கள் அமைந்த தொடர்கள் மிகச் சில பாடல்களில் காணப்படுகின்றன.

'குக்கூ என்றது கோழி அதனெதிர்
துட்கென் றன்று என் தூஉ நெஞ்சம்'

என்பது போன்ற வழக்குச் சொற்கள் பெற்று வரும் பாடல்களும் சில உண்டு.

'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடலை இறையனர் என்னும் புலவர் பாடியுள்ளார். இறைவன் நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறித் தருமியின் பொருட்டுப் பாடியது என வரலாறும் இப்பாடல்பற்றி எழுந்துள்ளது.

இந்நூலில் வரலாற்றுக் குறிப்புக்கள் பல உள்ளன; நாலூர்க் கோசர், எவ்வி, குட்டுவன், பல்வேல் எழினி, குல்லைக் கண்ணி வடுகர், பல்வேல் கட்டி முதலிய பலரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 'குட்டுவன் மாந்தை', 'பெரும் பூண் பொறையன்' 'பேஏ முதிர் கொல்லி' எனச் சிறந்த குறுநில மன்னர்களின் ஊர் கள் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

பலா பூக்காமல் கனியாலே மணம் செய்யும் இயல்பு, கரும்பின் வெண்பூவிற்கு நாற்றமின்மை, யாமைப் பார்ப் புத் தாய்முகம் நோக்கி வளரும் இயல்பு என்பன போன்ற நுண்ணிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. காமத்திற்கு நாணம் பகைப் பண்பு என்பதை "நாணட்டு அழிபடர் உண்ணேய்" எனக் குறிப்பிடுவதும், பெண்கள் முகம் எட்டாம் நாள் திங்களை நிகர்த்தது என்பதும் (126) அரிய செய்திகளாம்.

## ஐங்குறு நூறு

இந்நூல் ஐந்து நல்லிசைப் புலவர்களால் பாடப் பட்ட ஐந்நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. நெய்தல் திணையின் நூறு பாடல்களை அம்மூவனார் தீட்டியுள்ளார். 'குறிஞ்சிக் கபிலன்' எனக் குறிஞ்சித் திணையைப் பாடுவதில் பெயர் பெற்ற கபிலர் நூறு பாடல்களைப் பாடியுள்ளார். ஓதலாந்தையார் பாலைத் திணையையும், பேயனார் முல்லைத் திணையையும், ஓரம்போகியார் மருதத்திணையையும் பாடியுள்ளனர். ஒவ்வொரு திணையிலும் நூறு நூறு பாடல்கள் உள்ளன. இந்நூற் பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடையன ; பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்து இந்நூலுக்கு உள்ளது. சேரமான்யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை தொகுப்பிக்க, புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரால் இந்நூல் தொகுக்கப்பட்டது.

ஒவ்வொரு திணையும் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பிரிவுகளையுடையது. ஒவ்வொரு பத்துப்பாடல்களுக்கும் வேட்கைப்பத்து, வேழப்பத்து, கள்வன்பத்து எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்பாக உள்ளது. பிற்காலத்தில் மணிவாசகரும் இவை போன்று 'பிடித்த பத்து', 'வாழாப் பத்து' எனப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

தலைவன் குறைகளைக் கடிந்து கூறித் திருத்துவதில் தலைவனுடைய தாய் தந்தையரும் தலைவிக்கு ஈடாகார் எனத் தோழி கூறுவது தலைவியின் அஃகிய அறிவினைப் புலப்படுத்துகின்றது.

> ஒண்டொடி மடமகள் இவளினும்
> நுந்தையும் யாயுங் கடியரோ நின்னே

என்கிறாள் தோழி.

இப்பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்து விளங்குகின்றன. பாடலின் அடிகளும் கருத்துக்களும் மீண்டும் மீண்டும் ஒரே பத்தில் பயின்று வருகின்றன. தொண்டிப்பத்து என்பது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. ஐங்குறு நூற்றுப் பாடல்கள் அமைப்பிலும் நடையிலும் சிறிது வேறுபட்டு விளங்குவதால் ஏனைய நூல்களை நோக்க இது பிற்காலத்தது எனக் கருதுவர்.

## பதிற்றுப்பத்து

எட்டுத்தொகையில் புறநானூறும் பதிற்றுப் பத்துமே புறம்பற்றிய நூல்கள். புறநானூற்றுப் பாடல்கள் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டுள்ளன. ஆதலால் அவை கால வரிசைப்படி அமைக்கப்பட வில்லை. பதிற்றுப் பத்துச் செய்யுட்களோ காலமுறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. முதற்பத்தும் பத்தாம்பத்தும் கிடைக்காமல் போயின. ஏனைய எட்டுப் பத்துக்களையுங் கொண்டு, முதற்பத்து உதியஞ் சேரலைப் பற்றியும் பத்தாம் பத்து யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை பற்றியும் இருத்தல் வேண்டுமென அறிஞர்கள் துணிகின்றனர். இந்நூல் சேர மன்னர்களைப் பற்றிய வரலாற்றினை அறிதற்குத் துணை புரிகின்றது. சேரர் வரலாறு இந் நூலினாலேயே ஓரளவு விளக்கம் பெறுகின்றது.

இரண்டாம் பத்தில் குமட்டூர்க் கண்ணனார், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடுகின்றார். மூன்றும் பத்தின் பாட்டுடைத் தலைவன் பல்யானைச் செல்கெழு குட்டுவனாவான். பாலைக்கௌதமனார் அவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியதே நான்காம் பத்து; ஐந்தாம் பத்து, கடல் பிறக்கோட்டிய குட்டுவனைப் பரணர் பாடியது. காக்கை பாடினியார் நச்செள்ளையார்,

நார்முடிச் சேரலின் தம்பியாகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியது ஆறும் பத்து. செல்வக் கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை இருவரும் முறையே ஏழாம் பத்திற்கும் எட்டாம் பத்திற்கும் உரியவர்கள். கபிலர் ஏழாம் பத்தின் ஆசிரியர் ஆவர்; எட்டாம் பத்தைப் பாடியவர் அரிசில்கிழார். ஒன்பதாம் பத்து இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்று காணப்படுகின்றது. பதிற்றுப்பத்துப் பாக்களைத் தொகுத்தவர் எவரேனும் இப்பதிகத்தை எழுதியிருத்தல் வேண்டும். இப்பதிகத்திலிருந்தே சோழர் காலத்தில் மெய்க்கீர்த்திகள் என்னும் வரலாற்றுக் குறிப்புத் தரும் உரைநடைச் செய்யுள் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இப்பதிகங்களில் ஒவ்வொரு பத்துப் பாடல்களைப் பற்றியும் பாடிப் பரிசில் பெற்ற செய்திகளைப் பற்றியும் குறிக்கப்படுகின்றன.

பாட்டின் இறுதியில், துறை, வண்ணம், தூக்கு, பெயர் முதலிய குறிப்புக்கள் உள்ளன. பாட்டின் சிறந்த தொடரே பாட்டின் தலைப்புப் பெயராக அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்நூல், போர்ச்செய்திகளையே மிகுதியாகக் கொண்டுள்ளது; மன்னனின் மனைவி பற்றிய குறிப்புக்கள் சில விடங்களில் வந்துள்ளன. 'ஆன்றோள் கணவ' 'புரையோள் கணவ' என மன்னன் சுட்டப்படுவது பெண்டிர்க்களிக்கப்பட்ட சிறப்பினைப் புலப்படுத்துகின்றது.

இந் நூலுக்குப் பழைய உரைஒன்று உண்டு; இது செய்யுளின் கருத்தை விளக்குகின்றது.

இந் நூலின் கடவுள் வாழ்த்து, நூலைப் போன்று அகவற்பாவில் அமையாமல் மருட்பாவில் அமைந்துள்ளது.

**பரி பாடல்**

'ஓங்கு' என்ற அடைமொழியால் பரிபாடல் சிறப்பிக்கப்படுகின்றது பரிபாடலின் இலக்கணம் தொல்காப்பியத்தில்,

> 'பரிபா டல்லே தொகைநிலை வகையின்
> இதுபா வென்னும் இயல்நெறி இன்றிப்
> பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப'

எனக் கூறப்பட்டுள்ளது.

பரிபாடல் பலவகைப் பாவடிகளையும் ஏற்றுவரும் என்னும் இலக்கணத்தால் இசைநலம் பெற்று இது விளங்குகிறது. பரி என்ற சொல்லுக்கு நடை, ஓட்டம், குதிரை, தாங்குதல், இரங்குதல் எனப் பொருள் பல உண்டு. குதிரையின் நடைபோன்று குதித்தும் அசைந்தும் நடந்தும் ஓடியும் அமையும் காட்சி இதன் பால் உள்ளது என்பர். இப்பாடல் 25 அடிமுதல் 400 அடிவரையும் நிமிர்ந்து நடை பெறும்.

தொல்காப்பியத்தில் பரிபாடலின் இலக்கணம் கூறப்படுவதால் அதற்கு முன்னரே பல பாடல்கள் இருந்திருக்க வேண்டும். கடைச்சங்க காலத்தில் எழுபது பாடல்கள் இருந்தன என்பது தனிப்பாடல் ஒன்றால் அறியக் கிடக்கிறது.

இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் பாடல்கள் 22 ; மேலும் உரைகளில் மேற்கோள்களாக வருவன இரண்டு பாக்கள். ஆக மொத்தம் இருபத்து நான்கு கிடைக்கின்றன : இவற்றுள் திருமாலுக்குரியவை ஏழு, முருகனுக்குரியவை எட்டு. வையைக்குரியவை ஒன்பது. இதற்கும் பரிமேலழகர் எழுதிய சுருக்கஉரை ஒன்று உளது. இந்நூலில் திருமால், முருகன், வையை, மதுரை

முதலியனபற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன; முருகனின் பிறப்புப் பற்றியும் வளர்ச்சி பற்றியும் புராணக் கதைகள் வழங்குகின்றன. இவை பிற்காலச் செய்திகளோடு ஒத்தும் மாறுபட்டும் விளங்குகின்றன. திருமாலைப் பாராட்டும் இவ்வரிகள் நவில் தோறும் சுவையும் நயமும் பயப்பனவாகும்.

**தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;**
**கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மைநீ;**

எனத்திருமால் சிறப்பிக்கப்படுகின்றார்.

அருளும் அன்பும் அறனும் மூன்றும் முருகனாகிய இறைவன் பால் இரந்து நிற்றல் உண்மை வழிபாட்டின் உயர்ந்த குறிக்கோளை விளக்குகின்றது.

யாஅ மிரப்பவை,
பொருளும் பொன்னும் போகமுமல்ல; நின்பால்
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்;**
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே! (பரி. 5.)

'கூந்தன்மா' எனக் குதிரையைக் குறிப்பிடுவதை அழகிய சொல்லாட்சியாகக் கொள்ளலாம்.

சிற்றின்பச் செய்திகள் வையையாற்றின் சிறப்பினைக் கூறுகின்ற பாடல்களிலும், பேரின்பச் செய்திகள் திருமால் முருகன் பற்றிய பாடல்களிலும் அமைந்து இஃது ஓர் அகமும் புறமும் கலந்த நூலாகத் திகழ்கிறது.

**கலித்தொகை**

கலிப்பாவும் பரிபாடல் போல் துள்ளு நடையோடு இயங்கும் இசைப்பாட்டே. கலிப்பாடல்கள் முழுமையும் சிதைவின்றிக் கிடைத்துள்ளன. நல்லந்துவனார் கடவுள் வாழ்த்துடன் 150 பாடல்களைக் கொண்டுள்ளன. இதனை நல்லந்துவனார் தொகுத்திருக்க வேண்டும் என்பர். பாலைத்திணையில் 35 பாடல்களும், குறிஞ்சித் திணையில் 29

பாடல்களும், மருதத்திணையில் 35 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 33 பாடல் களும் இந்நூலில் உள்ளன.

**பெருங்கடுங்கோன் பாலை; கபிலன் குறிஞ்சி;
மருதனிள நாகன் மருதம்;— அருஞ்சோழன
நல்லுருத்தி ரன்முல்லை; நல்லந்துவன் நெய்தல்;
கல்வி வலார் கண்ட கலி.**

என்ற வெண்பா கலித்தொகை ஆசிரியர் ஐவர் எனக் கூறுகின்றது. இவ்வாசிரியர் ஐவருள் இருவர் காவலர்; மூவர் பாவலர்.

கலித்தொகைப் பாடல்கள் நயமிக்கவை என்பது கற்றறிந்தார் ஏத்தும் கலி' என இந்நூல் சிறப்பிக்கப்பட் டிருத்தலாலே நன்கு போதரும் இந்நூலில் பாடல்கள் நாடகப் போக்கின. சிறுமியர் இழைத்த சிற்றில்லைக் கலைத்து நோதக்க செய்து ஓடிய பட்டிமகன், மேலோர் நாள், நீர் கேட்டு வந்து தலைவியின் வளைக்கரம் பற்றிப் பின் கொல்வான் போல் நகைக் கூட்டம் செய்த நிகழ்ச்சி யும், தலைவியின் தனிவருகையைக் கண்டு, 'பறையறைந்து தெருவில் முன்னறிவிப்பாக யானையை விடுவது போல அவள் வருகையை முன்னறிவிக்காது விடுத்த அரசனே தவறுடையன்' என்று கூறும் கைக்கிளைக் கூற்றும் நாடகப் போக்கின. குறிஞ்சிக்குத் துணை செய்யாத ஒருதலைக் கைக்கிளையும் பெருந்திணைக் கூற்றுக்களும் கலித்தொகை யில் உள்ளன. புராணச் செய்திகளும் நூலில் இடம் பெறுகின்றன. ஐயிருதலை அரக்கர் கோமான் இமயம் எடுத்ததும், சிவன் இமயத்தை வில்லாகக் கொண்டதும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

"தண்ணீர் பெறுஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடு"

(ச. இ.2)

என்ற அடிகள் பாலைக் கொடுமை இற்றெனத் தெற்றெனக் காட்டுகின்றன. ஆய மகளின் மனஉறுதியும் ஆய்ச்சியர் திருமண முறையும் காட்டப்பட்டுள்ளன.

" கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் "

என்று வரும் அடிகளின் கருத்துச் சுவைத்து மகிழற்பாலது.

இவ்வாறு கலித்தொகை நாடகப் போக்கினதாகவும் நயம் செறிந்ததாகவும் அமைந்துள்ளது.

**அகநானூறு**

பதின்மூன்றடிச் சிற்றெல்லையை உடையது அகநானூறு; இந்நூலில் நானூறு பாடல்களும் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல் 120 பாடல்களையுடையது களிற்றியானைநிரை; அடுத்த 180 பாடல்களையுடைய பகுதி மணிமிடை பவளம்; இறுதி 100 பாடல்களை யுடைய பகுதி நித்திலக்கோவை எனப்படும். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுப்பிக்க, மதுரை உப்பூரிகுடி மகனார் உருத்திர சன்மனார் தொகுத்தார் எனக் குறிப்பிடப்படுகிறது.

அகப்பாடல்களின் தொகை நூல்களில் காணப்படாத ஓர் ஒழுங்கு முறை இந்நூலில் மட்டும் காணப்படுகிறது. ஒற்றையெண் உள்ளவை பாலைப் பாட்டுகளாகவும், இரண்டு எட்டு என்பவை குறிஞ்சியாகவும், நான்காம் எண் உள்ளவை முல்லையாகவும், ஆறும் எண் உள்ளவை மருதமாகவும், பத்தாம் பாடல்களெல்லாம் நெய்தலாகவும் அமைந்துள்ளமை இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இந்நூலில் வரலாற்றுச் செய்திகள் மண்டிக் கிடக்கின்றன. அரிய பண்பாட்டுக் கூறுகளை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன் (முல்லை-4)

என்ற பாடலடிகள் வண்டின் காதலைக்கூடப் போற்றிய தலைவனின் உயர்ந்த உள்ளத்தைக் காட்டும்.

நீண்ட பாடல்களாக இருப்பதனால், முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் நன்கு விளக்கப்பட்டு ஓவியம் போல் ஒவ்வொரு பாடலும் காட்சி தருகின்றது. முன்னங் காட்டி முகத்தின் உரையா ஓவச் செய்தியின் ஒன்று நினைந்த தலைவியையும், தலைவனின் குழந்தை தெருவில் தமியனாக நிற்க அக்குழந்தையை எடுத்து மார்போடு சேர்த்து நிற்கும் பரத்தையையும் இந்நூலில் காண முடிகின்றது.

"சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம்"
"இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே"

என்பன போன்ற அரிய உவமைகளும் இந்நூலில் நிறைந்துள்ளன.

இந்நூலுக்குப் பழைய உரையொன்றுள்ளது. தமிழில் அகப்பாடல் பல இருப்பினும் "அகம்" என்னும் பெயர் அகநானூற்றைச் சுட்டுவதே இந்நூலின் சிறப்பைக் காட்டும்.

## புறநானூறு

தமிழர்கள் அகவாழ்வில் சிறந்து விளங்கியமை போன்றே புறவாழ்விலும் சிறந்து விளங்கினர் என்பதற்குத் தக்க சான்றாக விளங்குவது புறநானூறு. அறம் பொருள் வீடு என்னும் உறுதிப் பொருளாம் முப்பிரிவின் அடிப்படையில் நானூறு பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழர் தம் போர்முறை இந்நூலில் நன்கு வெளிப்படு கின்றது. பாண்டியன் நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரமான் கணைக் காலிரும் பொறை முதலிய அரசர்களும், பொன் முடியார், காவற் பெண்டு, அவ்வையார் முதலிய மகளிரும் பாடிய பாடல் களும் இந்நூலில் இடம் பெறுகின்றன. மகளிரும் பெரும் புலவர்களாக விளங்கியமையும், காவலரும் பாவல ராக விளங்கியமையும் இதனால் அறியப்படுகின்றன.

நக்கண்ணையார் பாடல்கள் அவருடைய கைக்கிளைக் காதலை விளக்கி அவருடைய சொந்த வரலாருக விளங்கு கின்றன. ஆங்கில நூலில் காணும் இரங்கற்பா (elegy) வகையில் அமைந்தனவே கபிலரின் கையறு நிலைப்பாடல் கள். சேவலைத் தூது விடும் பிசிராந்தையாரின் பாடலை ஆங்கில இலக்கியத்தில் காணப்படும் செய்தியறிவிப்பு (ode) என்ற பாட்டோடு ஒப்பிடலாம்.

"வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி"

"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி" என்பன போன்ற நல்ல அறிவுரைகள் பல இந் நூலில் நிறைந் துள்ளன.

பல்வேறு தெய்வங்களும் சுட்டப்பட்டுள்ளன; நடுகல் வழிபாடு இருந்தமையும் வெளிப்படுகின்றது.

புறநானூறு தமிழரின் படைவளத்தையும், கொடை மடத்தையும், முடிதரித்த வேந்தரின் சிறப்பினையும், பண்போடு வாழ்ந்த மாந்தரின் நன்னீர்மையையும் விளக்கிக் கூறிப் பண்டைக் கால வாழ்வை விளக்கும் காலக் கண்ணுடியாக விளங்குகின்றது.

சிறப்பாகச் சேர சோழ பாண்டிய மன்னர்களின் செங்கோன்மைச் சிறப்பையும், வள்ளல்களாக விளங்கிய குறுநில மன்னர்களின் கொடைச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வையும் அதிகமானும், அன்பும் பண்பும் பொருந்த நட்பும் பெட்பும் கொண்டு பழகிய வரலாறும், பாரியும் கபிலரும் மாரியும் நிலமும் போல நெருங்கிய தொடர்பு கொண்ட வரலாறும் உணர்வுமிக்க சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. வீரர்கள் நாட்டு மன்னனிடம் காட்டிய அன்பும், அவனுக்காக அஞ்சாமல் போர் செய்து உயிர் துறந்த வீர வரலாறும் இதில் பேசப்படுகின்றன. வாழ்க்கையில் அவரவர் கொண்ட கடமையும் பண்புமிக்க வாழ்வும் காட்டப்படுகின்றன. சிறப்பாக அரசர்கள் புலவரோடு நெருங்கிப் பழகிப் புலவர்களின் பண்புமிக்க அறிவுரைகளைக் கேட்டும் மதித்தும் வாழ்ந்த வாழ்வு இதில் சிறப்பிக்கப்படுகிறது. வாழ்க்கையில் அவர்கள் கொண்ட உயர்ந்த குறிக்கோள்கள் இந்நூலில் புலனுகின்றன. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது போன்ற அரிய செய்திகளை இந்நூல் அறிவுறுத்துகிறது.

## பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு என்பது பத்து நீண்ட பாடல்களை உள்ளடக்கிய பெருநூலாகும். நூற்று மூன்று (103) அடிகளை உடைய முல்லைப்பாட்டு அளவில் சிறியது. அளவால் பெரியது எழுநூற்று எண்பத்தி இரண்டு (782) அடிகளைக் கொண்ட மதுரைக் காஞ்சியாகும். இப்பத்துப் பாக்களும் யாப்பு வகையால் பெரிதும் ஒத்துச் சிறிது மட்டும் வேறுபட்டிருக்கின்றன. முழுமையும் ஆசிரியப்பாவால் அமைந்த நூல்கள் ஏழு. அவை, திருமுருகாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, மலை

படுகடாம் என்பன. ஏனைய மூன்றும் ஆசிரியமும் வஞ்சியும் விரவிவருவன.

யாப்பால் வேறுபட்டிருப்பது போல நுவலும் பொருளாலும் இப்பாக்கள் வேறுபடுகின்றன. முல்லைப்பாட்டும், குறிஞ்சிப்பாட்டும், பட்டினப் பாலையும் அகனைந்திணையுள் முறையே முல்லை, குறிஞ்சி, பாலை ஆகிய ஒழுகலாற்றைத் தெரிவிக்கின்றன. நெடுநல்வாடை என்னும் நீள்பாடல் பாலைச்சார்பும் நெய்தல் போக்கும் விரவிய புறத்திணை வாகைப் பாடல் ஆகும். மதுரைக் காஞ்சி நிலையாமையைச் சுட்டும் புறத்திணைப்பா; ஏனைய ஐந்தும், பாடல் சான்றபுலனெறி வழக்கின்பாற்பட்ட ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களுள்ளும் திருமுருகாற்றுப்படை தனித்த மரபைச் சுட்டுகிறது. இவ் ஆற்றுப்படைப் பாக்கள் பிற்காலக் காவியங்களில் வரும் நாட்டுப் படல நகரப்படல வருணனைக்கு அடிக்கல் நாட்டின என எண்ண இடமளிக்கின்றன.

பத்துப்பாட்டினுள், ஆற்றுப்படைகளாக உள்ளவை ஐந்து. அவை, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பன. முருகாற்றுப்படைக்குப் புலவராற்றுப்படை என்ற வேறு பெயரும் உண்டு. 'மலைபடு கடாம்' என்னும் தீஞ்சுவைத் தொடரால் கூத்தராற்றுப்படை குறிக்கப்படுகின்றது.

ஆற்றுப்படை என்பது ஒரு தனி வகையான மரபுடைய இலக்கியம் ஆகும். ஆற்றுப்படை என்ற தொடர், வழிப்படுத்தல் என்னும் பொருளை உணர்த்தும். புரவலரைக் காணாது வறுமையால் உழலும் கலைஞனை வளம் பெற்று உளம் மகிழ்ந்து வரும் வேறு ஒரு கலைஞன் சந்தித்துத் தான் பெற்ற வளனைப் பெறுதானுக்கு உணர்த்தி அவனை வழிப்படுத்துவதாகக் கூறும் பொருள்

மரபுடையது. இவ்வாறு ஆற்றுப்படுத்துவோர் பலரிருப் பினும் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என ஒரு சிலரே தெரிந்து குறிக்கப்படுகின்றனர். இம்மரபினைத் தொல்காப்பியம் இந்நூற்பாவால் விளக்குகிறது (புறத் திணையியல் 36 - ம் நூற்பா):

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்

"ஆடன் மாந்தரும் பாடற் பாணரும் கருவிப் பொரு நரும் இவருட் பெண் பாலராகிய விறலியு மென்னும் நாற் பாலாரும் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்" என்பது இதன் பொருள்.

இவ்வைந்து ஆற்றுப்படைகளுள் திருமுருகாற்றுப் படை நீங்கலாக எஞ்சிய நான்கு பாட்டுக்களும் 'ஆற்றுப் படுத்தப்படுபவர்களது பெயரோடு சார்த்தி வழங்கப் படுகின்றன. திருமுருகாற்றுபடை, பாட்டுடைத் தலைவன் பெயரோடு சார்ந்து வழங்குகிறது.'* முற்கூறிய பாக்க ளனைத்திலும் மண்ணக மன்னர்கள் சிறப்பிக்கப்படுகின்ற னர்; திருமுருகாற்றுப்படை தெய்வ மணம் கமழும் சார் பைக் கொண்டு தெய்வமாகிய வேலவனிடம் ஆற்றுப் படுத்துகிறது; வேலவனின் பெருமையை விளம்புகிறது. நக்கீரர் முருகனிடம் ஆற்றுப்படுத்தும் போக்கைப் பின் வரும் வரிகள் உணர்த்தும்

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்

* டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

## (1) திருமுருகாற்றுப்படை

இது பத்துப்பாட்டின் முதற்பாட்டு; இது 317 அடிகளால் அமைந்த ஆசிரியப்பா. இதன் ஆசிரியர் நக்கீரர். இதன் பாட்டுடைத் தலைவன் முருகவேள். இதனைப் புலவராற்றுப்படை என்று நச்சினார்க்கினியர் விளக்குகின்றார். "வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது" என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

இது வேலவன் எழுந்தருளியிருக்கும் பரங்குன்றம் முதலாகிய ஆறுபடை வீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியில், **திருப்பரங்குன்றில்** முருகன் அமர்ந்துறைதலும், அவனுடைய உருள் பூந்தண்தார் புரளும் மார்பும், சூரரமகளிரின் செயல்களும், காந்தட் கண்ணிமிலைந்த சென்னியும், சூர்முதல் தடிந்த வகையும், பேய் மகளின் துணங்கைக் கூத்தும், பரங்குன்றின் இயற்கை வளனும் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில், ஆறுமுகன் யானைமேல் ஏறி வருதலும் அவருடைய மூவிரு முகங்களின் செயல்களும் இயல்புகளும், பன்னிரு கைகளின் தொழில்களும், **திருச்சீரலைவாயில்** சேர்ந்து நிலைஇய பண்பும் சொல்லப்பட்டுள்ளன. மூன்றாம் பகுதியில், **திருவாவினன்குடியில்** முனிவர்தம் உடையும், நரை முடியும், மாசற இமைக்கும் உருவும், மார்பும்,மனமும் இன்னோரன்ன பலவற்றையும் விளக்குகின்றார். அம்முனிவர்தம் ஒழுக்கமும், தேவருடன் அவரை வழிபட வரும் மகளிர் இயல்புகளும், திருமால் சிவன் இந்திரன் ஆகியவர்களின் இயல்புகளும் அறியலாகும். நான்காவது பகுதியில், **திருவேரகத்தில்** இருபிறப்பாளர் இயல்பும், அவர்கள் ஏரகத்தானை வழிபடும் முறைமையும் கூறப்பட்

டுள்ளன. ஐந்தாவது பகுதியில், குரவைக் கூத்தும் முருகன் **குன்று தோறும் ஆடல்** புரியும் தன்மையும் விளக்கப்பட்டுள்ளன. ஆருவது பகுதி, முருகன் இருப்பிடங்களையும், குறமகளின் வெறியாட்டையும், முருகனை வழிபடும் முறையையும், முருகன்பாற் சென்று அடியவர்கள் அருள் பெறும் வழியையும், அருள் பெறுமாறும், **பழமுதிர் சோலையில்** உள்ள இழுமென இழிதரும் அருவியின் சிறப்பையும் விரித்துக் கூறும்.

'பிற ஆற்றுப்படைகளில் குறிக்கப்படுவனவாகிய ஆற்றுப்படுத்தப்படுபவனை விளித்தலும், அவனது நிலையை விரித்தலும், ஆற்றுப்படுத்துவான் தனது பழைய நிலை பரிசில் பெற்ற முறை முதலான பலவற்றைக் கூறுதலும், இதில் விளக்கப்படாமல் உய்த்துணரவைக்கப் பெற்றிருக்கின்றன'.* ஆற்றுப்படையில் இருந்தவனது வறுமையும் வந்தவனது பெருக்கமும் முரண்பட்டுத் தோன்றும். இப்பாடலில் உலகின் அடிப்படையான இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும் முரண்பட்டுத் தோன்றுவதனைக் காணலாம். வாழ்க்கையின் மெய்யறிவினைப் புலப்படுத்தும் நோக்கத்தோடு இவ்வாற்றுப்படை அமைந்திருக்கிறது.

### (2) பொருநராற்றுப்படை

இது பத்துப்பாட்டின் இரண்டாவது பாட்டு; 248 அடிகள் அமைந்த ஆசிரியப்பாவில் வஞ்சியடிகளும் விரவி வருகின்றன. இப்பாட்டின் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். இதன் பாட்டுடைத் தலைவன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகனை கரிகால் வளவன்; வெண்ணிப் போர்க்களத்தே சேரனையும், பாண்டியனையும் வென்றவன்.

பரிசில் பெற்றுப் பெருமை பெற்ற பொருநன் ஒருவன் வறுமையுற்றுச் சிறுமை பெற்ற மற்றொரு பொருநனைக்

---

* டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாகப் புலவர் பாடியுள்ளார். பொருநர் பலர்; போர்க்களம் பாடுநர், ஏர்க்களம் பாடுநர், பரணிபாடுநர் என்பாருள் இப்பாடற் பொருநன் போர்க்களம் பாடுவோன் ஆவான்.

பாலை யாழ் வருணனையுடன் இப்பாடல் தொடங்குகிறது. பாலை யாழின் அமைப்புப் பற்றியும், அவ் யாழின் இசை பற்றியும் கூறப்படுகின்றது. கள்வர் யாழிசையால் கொடுஞ் செயலை மறத்தலைப் பின்வரும் வருணனை காட்டும்:

> " ஆறு அலை கள்வர் படைவிட, அருளின்
> மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை "

என்ற வரிகள் யாழிசையின் மாண்பைச் சுட்டுகிறது. பாடினியின் முடி முதல் அடிவரை வருணனையும் (கேசாதி பாத வருணனை), பொருநர்கள் விழாவிற் கூடித் தங்கள் இசைத்திறனைக் காட்டி அவ்விழா அயர்ந்தபின் வேற்றூரை நோக்கிச் செல்லும் இயல்பும், கரிகாற் பெருவளத்தானின் விருந்தோம்பற் சிறப்பும், உணவின் வேறுபாடுகளும், பரிசிலர்க்கு வளவன் தேர்யானை முதலியவற்றை வழங்கும் வழக்கமும், ஊருக்குத் திரும்பப் பரிசிலன் விரும்பி மெல்லெனக் கிளத்தலும், பிரிய மனமுமின்றி வேறுவழியுமின்றி இறுதியில் பரிசு வழங்கி அனுப்புதலும், அவ்வளவனது சிறப்புக்களும், வெண்ணிப்போர் வெற்றியும், கொடைச் சிறப்பும், ஆட்சியுயர்வும், சோழநாட்டின் வளமும், வனப்பும், திணை மயக்கமும், காவிரின் நீர்ப் பெருக்கும், அக்காவிரி புரக்கும் வயல் வளமும், இன்னோரன்ன பலவும் இலக்கியச் சுவை தோன்ற விளக்கப்பட்டுள்ளன.

## (3) சிறுபாணாற்றுப்படை

இது மூன்றாவது பாட்டு; 269 அடிகள் கொண்ட ஆசிரியப்பா; இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர்

நத்தத்தனுர்; பாட்டுடைத் தலைவன் ஓய்மானுட்டு நல்லியக் கோடன் என்பான்; பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறுத்தும் முறையில் நல்லியக் கோடனைப் பலவாறு புகழ்கிருர் புலவர்.

இப்பாடல், வேனிற்கால வருணனையோடு தொடங்கி நல்லியக் கோடனது புகழையும் பண்பையும் விளக்கி முடிகின்றது. பாலைநின்ற பாலை நெடுவழியும், சுரனும், வரி நிழலும் வேனிலின் வெம்மையை விளக்குகின்றன. விறலியின் முடிமுதல் அடிவரை வருணனையில் அவள் உறுப்புகளின் வனப்புகளுக்கேற்ற உவமைகளும், வஞ்சிமா நகரின் சிறப்பும், தமிழ்நிலைபெற்ற மதுரையின் மாண்பும், நல் தேர்ச் செம்பியன் ஓடாப்பூட்கை உறந்தையும், உமணர்களுடைய செயல்களும், எழுவள்ளல்களின் அருஞ் சிறப்புகளும், நல்லியக்கோடனது வீரமும், பாணனுடைய அழிபசி வருத்தமும், நெய்தல் நில இயல்பும், அதனைச் சார்ந்த எயிற்பட்டினத்தில் கிடைக்கும் பொருள்களும், அங்குள்ள நுளையர் வாழ்க்கை முறையும். வேலூர் வளமும், எயினர் விருந்தும், ஆமூர் வளமும், உழவர் விருந்தும், 'நல்லியக் கோடனுடைய நற்குணங்களும் வீரச் செயல்களும், வள்ளன்மையும், யாழின் வருணனையும், நல்லியக்கோடனைப் புகழும் முறையும், அவன் பாணன் முதலியோர்க்கு உண்டி முதலியன கொடுத்தலும் இப்பாட்டில் விளக்கப்படுகின்றன.'*

இப்புலவர் நாட்டு வளங்களை வருணிக்கும் முறையில் தம் அறிவாற்றலையும் கலையுணர்வையும் வெளிப்படுத்துகின்ருர். 'எருமை, பூக்களை மேய்ந்து மிளகின் கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலில், மஞ்சளின் இலை, தன்னைத் தடவப் பூப் படுக்கையில் அசைபோடுவதனை

* பத்துப்பாட்டு முகவுரை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

மலையும் காடுமாய்ச் செறிந்த சேரநாட்டின் வளமிகு அழகாகக் காண்கின்ருர். குரங்குகள் சிறுவரைப் போல் கிளிஞ்சலுக்குள் முத்தினை வைத்துக் கிலுகிலுப்பை ஆட்டும் சீர்மையை முத்துத் கொழிக்கும் பாண்டி நாட்டின் அழகாகக் காண்கின்ருர்.'* இவ்வாறே மருதவளஞ் செறிந்த சோழநாட்டின் வளமையையுங் காண்கின்ருர். கடையெழு வள்ளல்கள் இல்லை எனச் சொல்லா ஈகைப் பண்பை விளக்குமிடத்துக் கலைமணம் வீசுகிறது; அம்மணத்திடையே அவர்களின் மறைவுக்காக ஏங்கும் கலக்கமும் உடன் இசைக்கிறது.

## (4) பெரும்பாணுற்றுப்படை

இது, பத்துப் பாட்டுள் நான்காவது பாட்டு. 'இது, 500 அடிகளையுடைய ஆசிரியப் பாவால் ஆகியது. பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் காஞ்சியின் காவலனுக இருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அத்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனுர் பாடியது.'† ஏழு நரம்புள்ள சீறியாழ் கொண்டு பாடுவோரைச் சிறுபாணன் என்றும், 21 நரம்புள்ள பேரியாழ் கொண்டு இசை கூட்டுவோரைப் பெரும்பாணரென்றும் சுட்டல் மரபு. இப்பாணன் பெரும்பாணன் ஆவான்.

பாணனுடைய யாழின் வருணனையோடு பாடல் தொடங்குகிறது. அடுத்துப் பாணனது வறுமையை விளக்கும் அடிகள் இடம் பெறுகின்றன. அவை கற்பாருள்ளத்தை ஈர்க்கும் முறையில் விழுமிய உணர்வாய் உவமை நலத்தோடு இலங்குகின்றன.

'பழுமரம் தேரும பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண !'

* கலைக்களஞ்சியம்—பத்துப்பாட்டு
† டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

—இவ்வடிகள் பசிதின் யாக்கைப் பாணர் சுற்றத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. இப்பாட்டில், பரிசு பெற்ருேன் செல்வ நிலையை எடுத்துரைத்தலும், திரையனது மரபும், அல்லது கடிந்த அவன் அறம்புரி செங்கோல் திறனும், அவனது ஆணையால் வழிப் போவாருக்கு விலங்குகள் முதலியவை ஊறு செய்யாமையும், உப்பு வாணிகர் செல்லும் வழியும், அவர் வாழ்வும், வம்பலர் கழுதைச் சாத்தொடு செல்லும் நெறியும், கவர்த்த வழிகளைக் காப்பவர் தன்மையும் பலவாறு சுவைபட விளக்கப்படுகின்றன. ஐந்திணைகளைப் பற்றிய வருணனைகளும், அவ்வத்திணையில் உள்ள பல்வகைச் சாதியர் இயல்புகளும், அவர்கள் விருந்தோம்பும் திறனும், அந்தணர் முதலியோர் அன்போடு விருந்துபுறந்தரும் தன்மையும் இப்பாட்டில் மிக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன.

நீர்ப்பெயற்று என்னும் ஊரின் சிறப்பையும், திமிலர் முதலியோர் உறையும் பட்டினத்தையும், அப்பட்டினத்து மாந்தரின் விருந்து நலனும், ஓடுகலம் கரையும் துறையையும், தோப்புக் குடிகளின் விருந்தோம்பலையும், ஒதுக்குப்புற நாடுகளின் வளத்தையும், திருவெஃகாவின் சிறப்பொடு திருமால் வழிபாட்டையும், விழவு மேம்பட்ட பழவிறல் மூதூராகிய கச்சியின் சிறப்பையும், திரையனின் வெற்றியையும், அவனது திருவோலக்கச் சிறப்பையும், அவன் பாணர்க்கு உணவளித்துப் பரிசு வழங்குதலையும், அவன் மலையினது பெருமையையும், இப்பா விளக்குகின்றது.

## (5) மலைபடுகடாம்

இது, பத்துப்பாட்டினுள் பத்தாவது பாடல்; ஆற்றுப் படைகளுள் அடிவரையரையால் மிக்கது. ' இது, 583 அடிகளை உடைய ஆசிரியப்பாவால் ஆகியது. பரிசில் பெறவரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்ருனொரு

கூத்தன் செங்கண் மாத்துவேள்நன்னன் சேய் நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அந்நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இது, கூத்தராற்றுப்படை யெனவும் வழங்கும்.

" அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப "

(347–8) என்ற அடிகளால் மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றது கடாம் என்பது ஆகு பெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று.*

இதில், பலவகை இசைக் கருவிகளின் பெயர்களும் கூத்தர் கடந்துவந்த

' படுத்து வைத்தன்ன பாறை மருங்கின்
எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறியும்'

பேரியாழின் இயல்பும், பாணரும் விறலியரும் சூழஇருந்த கூத்தர் தலைவனை விளித்தலும், கூத்தன் தான் கூறப்போகும் செய்திகளை முதற்கண் தொகுத்துக் கூறலும், பின்னர் அவற்றை விரித்து மொழிதலும் வழியினது நன்மையின் அளவு கூறுதலும், கானவர் குடியின் இயல்பும், வழியில் உள்ள சிற்றூர்களில் நிகழும் விருந்தோம்பலும், நன்னனது மலைநாட்டில் பெறும் பொருள்களும், மலைநாட்டு வழியின் அருமையும், கவலைகற்கள் படாமல் தப்பிச் செல்லும் விதமும், காட்டாற்று வழியில் வழுக்கும் இடங்களைக் கடத்தலும், மலைக்காட்சிகளின் பெருமிதமும், இரவில் குகைகளில் தங்கிச் செல்லும் முறையும், நெறிக்கண் மேற்கொள்ள வேண்டிய முன்னறிவிப்புகளும், குன்றத்தில் மயங்கின் குறவர்கள் வந்து உதவி புரிதலும், மலையில்

* டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தோன்றும் பலவித ஒலிகளைக் கேட்டுச் செல்லலும், நன்னன் மலைவழியிற் செல்லும் முறையும், நன்னன் நாட்டில் உள்ள குன்றும், குகையும், அரண்களும், நடுகற்களும், வழி தெரியக் கட்டிய புல் முடிப்பும், கோவலர் இருப்பும், அவருடைய விருந்தோம்பலும், நாடுகாக்கும் வேடர் செய்கையும், உழவர் விருந்துநலனும், சேயாற்றின் இயல்பும், நன்னனது மூதூர் மக்களின் விருந்தெதிர் கொள்ளும் செயலும், அவன் அரண்மனை வாயிலும், ஆங்குள்ள காட்சிகளும், இன்குரல் விறலியர் நன்னனை வாழ்த்தலும் கூத்தர்கள் நன்னனை ஏத்தலும்,

> 'நசை தர வந்தது சாலும்;
> வருத்தமும் பெரிதே'ன

நன்னன் கூறும் முகமனுரையும், நன்னனது உவந்த உள்ளத்தோடு அமர்ந்த நோக்கமும், அவன் கொடைச் சிறப்பும் பலவாறு சுவைபட விளக்கப்படுகின்றன.

'முள்ளம் பன்றியால் இறந்தவனுக்காக அழுதல், புலியால்தாக்கப் பெற்றகணவன் உற்றபுண்கள் தணிய மகளிர் பாடுதல், மலைப் பிளவில் குட்டி விழுந்ததற்காகக் குரங்குகள் வருந்தி ஆரவாரித்தல், தேன் கூட்டை அழிக்கும் ஆரவாரம் என்று பலப்பல ஒலிகள் எழுவதனை வீறுகோளணி ஒரு சிறிதுமின்றி உள்ளது உள்ளவாறே மனம் இனிக்கப் பாடுதலும்' * கூத்தருக்குத் தக்கபடி உவமைகளைக் கையாளுதலும் இப்புலவரின் சிறப்பியல்புகளாம்.

### (6) முல்லைப் பாட்டு

இது, பத்துப்பாட்டுள் ஐந்தாவது பாட்டு; 103 அடிகளை உடைய ஆசிரியப் பாவால் அமைந்தது. இதன் ஆசிரியர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார். இவர் முல்லைக்குரிய முதல் கரு உரி முழுமையும் சிறக்க இப்பாடலை யாத்துள்ளார். எல்லாம்

---

* கலைக்களஞ்சியம்—பத்துப்பாட்டு

இதன் கண் உள என்னுமளவிற்கு முல்லையின் சொல்லோவியமாக இது பாடப்பட்டிருக்கிறது.

'முல்லை என்பது இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வரும் துணையும் ஆற்றியிரு என்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை என்பர் நச்சினார்க்கினியர்.'*

இப்பாட்டு மூன்று பிரிவுகளாகப் பிரிகிறது. முதற் பிரிவில் இல்லிருக்கும் தலைவியின் நிலையும், அவளை ஆற்றுவார் போற்றிப் புரியும் வினைகளும், இரண்டாவது பிரிவில் வினைவயிற் பிரிந்த தலைவன் பாசறையில் போர் வினை நினைந்து துயிலாது வதிவதும், மூன்றாவது பகுதியில் தலைவன் வினைமுற்றி மீளும் செய்தியறிந்து தலைவி நினைந்து மகிழ்தலும் ஆக முத்திறத்தில் இப்பா அமைந்துள்ளது.

இதனால், பெருமுது பெண்டிர்விரிச்சி கேட்டுநிற்றலும், பாசறையின் இயல்பும், யானைப் பாகரது செயலும், படைவீட்டின் அமைப்பும், அரசனுக்குத் தனியாக அமைத்த பாசறையும், அப்பாசறையில் கச்சணிந்த மங்கையர் நெய்யுமிழ் சுரையும் விளக்கும் ஏந்தி அவற்றை அணையாமல் காத்தலும், ஓங்கு நடைப் பெரு மூதாளர் காவல் புரிதலும், நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தலும், அரசன் பகைவரால் துன்புற்ற தன் படைகளின் வருத்தத்தை நினைந்து வருந்தும் அன்பின் திறனும், தலைவி தலைவனைக் காணாது துயர் உறுவதும், கார்காலத்தில் காட்டு வழியில் தோன்றும் அழகுக் காட்சிகளும் அறியப் படுகின்றன. இப்பாட்டில் நப்பூதனார் காட்டும் செந்நிலப் பெருவழிக் காட்சி நெஞ்சையள்ளும் திறன் வாய்ந்தது:

> செறியிலைக் காயா அஞ்சனம் மலர
> முறியிணர்க் கொன்றை நற்பொன் கால

* டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி

## (7) குறிஞ்சிப் பாட்டு

இது, பத்துப் பாட்டினுள் எட்டாவது பாடல்; 261 அடிகளையுடைய ஆசிரியப் பாவால் அமைந்தது. இதன் ஆசிரியர் கபிலர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் இலக்கியத்தின் பொருண்மைப் பேற்றை அறிவுறுத்தும் நோக்கோடு பாடப்பட்டது என்பர். இது, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்று தலைவியின் காதல் உண்மையை வெளிப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது. இதனுள் தலைவியின் உள்கரந்துறையும் காதல் உள்ளமும், அதனால் அவள் நறுந்தோள் நெகிழக் கவின் தொலைந்த மேனியும் சித்திரிக்கப் படுகின்றன. அவள் காதல் உள்ளமும், அதற்குக் காரணமான நிகழ்ச்சிகளும் விளக்கப்படுகின்றன.

தலைவியின் அன்பு மிகுதியும், தலைவிக்கும் தலைவனுக்கும் நிகழ்ந்த களவு மணமும், தலைவி தினைப்புனம் காத்த வகையும், உரவுக்கதிர் தெறூஉம் உருப்பவிர் அமையத்துக் கண்சிவக்கச் சுனைப்புனல் ஆடிய முறையும், பல்வகைப் பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்த செயலும், தழை உடுத்து மாலை சூடி அசோகின் நிழலில் இருத்தலும், தலைவன் வருகையும், தலைவனுடன் வந்த நாய்க்கு நடுங்கி எழுந்து நல்லடி தளர்ந்து இடும்பை கூர்மனத்தோடு மருண்டு வேறிடம் செல்லுதலும், தலைவி தோழி இருவரிடமும் தலைவன் கெடுதி வினாதலும், தலைவியின் சொல்லை எதிர்நோக்கி நிற்றலும், அப்போது கைவல் யானை கடாம் செருக்கி அக்காவிடைப் புகுதலும், அது கண்டு மகளிர் நடுங்குதலும், அவ் யானையைத் தலைவன் அம்பு எய்து துரத்தலும், நீரில் முழ்கிய தலைவியைப்

புனலிடைப் பாய்ந்து காத்தலும், அப்போது இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தலும், அவர் பகற்பொழுதைக் கழித்து மகிழ்தலும், மாலை வரவே தலைவியை அவள் முதூர் வாயில் வரை வந்து விட்டுப் போன அருட்செயலும் இன்னோரன்ன பல இன்பப் புணர்வுக்கு ஏதுவான செயல் களைத் தோழி செவிலிக்குக் கூறுகிறாள். தலைவனுடைய அன்புள்ளத்தையும், வீரத்தையும், தலைவிமீது கொண்டுள்ள காதல் மாட்சியையும், தலைவிக்காக இடுக்கண் நிறைந்த வழியில் இரவுக் காலத்து வருதலையும் சொல்லு வாளாய்த் தலைவியின் நோய்க்குரிய உண்மைக் காரணத் தைத் தோழி வெளிப்படுத்துகிறாள். இவ்வாறு களவினை— களவுண்மையை, வெளிப்படுத்துவதே அறத்தொடு நிற்றலும் ஆகும்.

## 8. பட்டினப்பாலை

இது, பத்துப்பாட்டுள் ஒன்பதாம் பாடல்; 301 அடி களையுடையது; வஞ்சியடிகள் மிக்கு விரவி வருதலின் இதனை வஞ்சி நெடும்பாட்டென்பர். தலைவனும் தலைவி யும் பிரிந்துநின்று, அந்தப் பிரிவை எண்ணுகின்ற பாலை ஒழுக்கத்தைக் குறிப்பது இப்பாட்டு. இதன் ஆசிரியர், கடியலூர் உருத்திரங் கண்ணனார். இதன் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்பர் ஒரு சாரார். 'பாட்டில் வரும் திருமா வளவன் என்ற பெயரைக் கொண்டு கரிகாற் பெருவளத்தானின் பெயரனை திருமா வளவன் என்பர் வேறு சிலர்.' *

புனல் பரந்து பொன் கொழிக்கும் காவிரியின் சிறப் போடு தொடங்கி, காவிரி புரந்தூட்டி வளம் பெருக்கும் சோணாட்டின் செழிப்புப் போல் பாவும் பரந்து விரிந்து இலக்கியச் செழிப்பை வழங்குகிறது. சோழநாட்டின் சிறப்பும், புகார் நகரச் சிறப்பும், அந்நகர மக்களின் விளை யாட்டுக்களும், அவர்கள் துயில் மடிந்துள்ள இரவுக்

* கலைக்களஞ்சியம்—'பத்துப்பாட்டு'

காலமும், ஏற்றுமதி இறக்குமதி நிகழும் பண்டகசாலை முற்றமும், மகளிர் வெறியாடி விழவயரும் ஆவணமும், பல வகைக் கொடிகளின் காட்சியும் இப்பாடலில் விளக்கப் படுகின்றன. வளம் பல நிறைந்த புகார் நகரத்துத் தெருக் களின் மாட்சியை,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கடுங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு

—என்னும் இவ்வரிகள் விளக்கும். அம் மறுகிடை வணிகர் கள் நடத்தும் வணிகமுறை பண்டைத் தமிழர் பண் பாட்டை விளக்குவதாகும். அதனைப் புலவர்,

வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம்
குறை கொடாது

—என விளக்குகிறார்.

இது, பட்டினத்துப் பற்பல மொழிபேசுவோர் வாழ் வதையும், தலைவனது உயரிய அன்புள்ளத்தையும், திருமா வளவன் அரசுரிமை பெற்ற வகையினையும், அவனுடைய பேராற்றலையும், காடு கொன்று நாடாக்கிக் குளந் தொட்டுச் சோணாட்டு வளம் பெருக்கியதையும், உறை யூரைச் சிறப்புறச் செய்ததையும் விளக்கிக் காட்டுகிறது.

'நெஞ்சமே இத்தகைய சிறந்த பட்டினத்தை யான் பெறுவதாயிருந்தாலும் தலைவியை விட்டுப் பிரிந்து வாரேன்' என்று கூறுகிறான் தலைவன் :

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே

'தலைவியைப் பிரிந்த பொழுது துறக்கமே போன்ற பட்டினமும் தலைவனுக்கு இன்பமாகத் தோன்றாது; துன்பமாகத் தோன்றும் என்கிற பிரிவின் கொடுமை இவ்வாறு சுவை படப் பூம்புகார் நகர்ச் சிறப்பின் வழியே பாடப்படுகின்றது. பாலைக்குப் புறமாக உள்ளது வாகை அல்லது வெற்றி. அவ்வெற்றியைப் பாட்டுடைத் தலைவனாகிய சோழனின் வெற்றியாகப் பாட்டின் பிற்பகுதியில் காண்கின்றோம். அவ்வெற்றி வெறுங்கொலையாக முடியாது பழம்பெரும் தமிழ் நாகரிகத்தின் நிலையமாம் பூம்புகாரைப் புரந்து நிற்கும் சிறப்பாக முடிவதனைப் புலவர் காட்டுகின்றார்.'* அப்பெருநகரினையும் புறக்கணிக்கும் காதற் பேருள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**9 நெடுநல்வாடை**

இது, பத்துப்பாட்டுள் ஏழாவதாக உள்ளது; இது 188 அடிகளை உள்ளடக்கிய ஆசிரியப்பா. 'பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ்வருத்தம் தீரும்படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாக என்று கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக அவனை நக்கீரர் பாடியது.'†

தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழி போல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருள் உணர்த்திற்று. மனையகத் தொடுங்கி போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும், அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறானாய்ப் போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவனுக்கு நல்லதாகிய வாடை

* கலைக்களஞ்சியம்—'பத்துப்பாட்டு'

† டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

யாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணையாயிற்று. இப்பாட்டுச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமையின் அகப் பொருளாமேனும் "வேம்பு தலை யாத்த நோன்காழ் எ·கம்' என அடையாளப் பூக் கூறின மையின் அகமாகாதாயிற்று—என்பர் நச்சினார்க்கினியர்.

இதில், கூதிர்க் காலமும், கொடுங்குளிரும், அக் காலத்தில் நடுங்கும் மக்கள், மாக்கள், பறவைகள் முதலிய னவும் வருந்தியிருக்கின்றநிலையும் முதற்கண் கூறப்படுகின் றன. பின்பு தலைவி வாழும் கோநகர் காட்டி, அவள் வதி யும் அரண்மனையின் அமைப்பையும், அதன்வாயில் முதலிய வற்றின் அழகையும் பெருக்கிக் காட்டி, அங்குத் தலைவி பள்ளி கொள்ளும் வினைநலஞ் செறிந்த கட்டில், அதில் இட்டுவைத்த பாயலின் அமைப்பு முதலான புறச் சூழலை விரித்து, அவளுடைய பிரிவுநிலையை மிகுதிப் படுத்து கிறார். ஆவியங் கொழுநன் ஆகத்துஒடுங்கிய பண்டைய நிலையோடு காவியங் கண்ணுளின் தற்போதைய பிரிவினால் வருந்தும் நிலையை மாறுபடச் சுட்டி விரிக்கின்றார். இதனால் தலைவியின் கற்பு நிலையும் அவளுற்ற துயர் மிகுதியும் விளங்குகின்றன. அவளது வருத்தம் தீரச் செவிலியரும் பிற மகளிரும் ஆற்றும் செயல்கள் பின்பு கூறப்படுகின்றன. 'இறுதிப் பகுதியில் அரசன், போர்க்களத்தில் புண்பட்ட வீரர்கள்பால் அன்புபூண்டு நடுயாமம் என்றும் கருதானுகி மழை பெய்தலையும் பாராட்டாது நேரிற் சென்று முக மலர்ந்து அவர்களைக் கண்டு ஆற்றுவிக்கும் செய்தி கூறப் படுகின்றது. இதனால் அரசனுடைய எளிமையும் செய்ந் நன்றியறிவும் புலப்படுகின்றன.* காதலும் வீரமும் கலந்து உறவாடும் பாவாக நக்கீரர் இதனை ஆக்கியுள்ளார்.

## 10. மதுரைக் காஞ்சி

இது, பத்துப்பாட்டுள் ஆறுவது பாடல். இது 782 அடிகளையுடையது; இடையிடையே சில சில விடத்து

---

* டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

வஞ்சியடிகள் வந்த ஆசிரியப் பாவால் இயங்குவது; பாடியவர் மாங்குடி மருதனார்; பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்; வீடுபேறு நிமித்தம் பலவகை நிலையாமையைச் செவியறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் இதனைப் பாடி யுள்ளார்.

'போர் புரிந்து மாற்றாரை வெல்வதையே கருதித் தன் வாழ்நாளிற் பெரும்பகுதியைப் போக்கிய நெடுஞ்செழி யனுக்குப் பல்வேறு நிலையாமையைச் செவியறிவுறுத்தப் புகுந்த ஆசிரியர், முதற்கண் தமது கருத்தை வெளிக்காட் டாமல் அவன் முன்னோர் நல்லியல்புகளையும் அவனுடைய கொடை, வீரம் நற்குணம் முதலியவற்றையும் பாராட்டிப் பின்பு தம் நோக்கைக் குறிப்பாகச் சில அடி களால் வெளிப்படுத்துகின்றார்.

பாண்டிநாட்டைப் புகழுமிடத்து அதன் ஐந்திணை வளங்களையும், அவ்வத்திணைகளில் காணப்படும் காட்சி களையும், நிகழ்ச்சிகளையும், மலிந்த ஓசை வகைகளையும் விளக்குகின்றார் ஆசிரியர். அவை, முதல் கருஉரிப் பொருள் களின் அமைதி பெற மிகச் செவ்வனே கூறப்பட்டுள்ளன. மதுரையின் பெருவளம் பரக்கக் கூறப்பட்டுள்ளது.

நெடுஞ்செழியனுடைய போர் எழுச்சியும், அவன் பகைவர்கள் மேல் படையெடுத்துச் செல்லலும், மாற்றார் அரண்களையும் காவல் மரங்களையும் அழித்தமையும், ஏவல் கேட்பார்க்கு அருளுவதும், கேளாதவரை அழித்து அவர் நாடுகளை வளமறச் செய்த முறைகளும், தலையாலங் கானத்தில் போர் செய்து சேர சோழர்களையும் ஐந்து குறுநில மன்னர்களையும் வென்ற செய்தியும், சாலியூர் முது வெள்ளிலை முதலிய ஊர்களைக் கைகொண்டதும், பரத வரை அடிப்படுத்தியதும், வென்றிப் பொருளை நட்டோர்க் கும் நாடி வந்தோர்க்கும் புலவர்க்கும் வழங்கும் வண்மை

யும், பிறர்க்குப் பணியாப் பெருவிறலும், முந்தையோர் அடிவழிப் பிழையா மூதறிவும், பொய்யின் நீங்கி வாய்மை யறங் காக்கும் பொற்பும், கொடுத்துப் புகழ் கொள்ளும் கொள்கையும், பிற அருங்குணங்களும் இப்பாவில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்பகுதிகள் புறப் பொருட்டுறைகளுக்குரிய சிறந்த இலக்கியங்களாகவும் விளங்குகின்றன.

மக்களுடைய பழக்க வழக்கங்கள், மதுரையிலுள்ளார் மாலை முதல் நாட்காலை வரையிற் பொழுது போக்கும் முறை, இராக் காலத்தில் கள்வர் செயல், காவலர் காக்கும் திறன், விடியற்காலத்தில் அந்தணர் வேதமோதுதல் முத லான பல குறிப்புக்களைக் காணலாம். பல விழாக்கள் குறிக்கப்படுகின்றன.'*

வாழ்க்கையில் நிலையாமையைப் புலவர் அறிவுறுத்து கிறார். 'அரசியல் பிழையாமல் அறம் வளர்த்த பெரியோர் சென்ற வழியிற் சென்று வளர்பிறை போல் வளர்க நின் கொற்றம்' எனக் கூறுவதும். உலக நிலையாமையை அறி வுறுத்துவதும், 'இதற்கு முன் புகழுடன் வாழ்ந்து மாண்ட மன்னர் திரையிடு மணலினும் பலரே என்று சுட்டிக் கூறுவதும்'† புலவர் ஆளும் முறைகள். இவ்வாறு நிலையா மையைக் கூறினும் உலக வாழ்வினைப் புலவர் இகழ்ந்து ஒதுக்கவில்லை. நிலையாத உலகத்தில் நிலைத்த புகழை நிறுத்த வேண்டும் என்பதும், தன்னலங் கருதாது பிறர்க் கென வாழும் நிலை வளர வேண்டும் என்பதும், மலர்தலும் கூம்பலும் இல்லா அறிவையும் அறத்தையும் போற்றி வாழ் தலே தக்கதென்பதும் புலவர் கூற விரும்பிய கொள்கை களாக உள்ளன. உயர்ந்த குறிக்கோளுடைய வாழ்வுக்கா கப் போராடுவதே பிறவியின் நோக்கம் என்பதைக் குறிப்பாகச் சொல்லுகிறார்.

---

* பத்துப்பாட்டு முகவுரை : டாக்டர் உ. வே. சாமிநா தய்யர். † கலைக்களஞ்சியம்—'பத்துப்பாட்டு'

| பாட்டு | வரிகள் | பாடினோர் | பாடப்பட்டோர் | யாப்பு | பொருள் |
|---|---|---|---|---|---|
| திருமுருகு | 317 | நக்கீரனார் | முருகவேள் | ஆசிரியம் | ஆற்றுப்படை |
| பொருநர் | 248 | முடத்தாமக் கண்ணியார் | கரிகாற் பெருவளத்தான் | ஆசிரியமும் வஞ்சியும் | ,, |
| சிறுபாண் | 269 | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் | ஓய்மாநாட்டு நல்லியக் கோடன் | ஆசிரியப்பா | ,, |
| பெரும்பாண் | 500 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் | ,, | ,, |
| முல்லைப்பாட்டு | 103 | நப்பூதனார் | — | ,, | அகம்—முல்லை |
| மதுரைக் காஞ்சி | 782 | மாங்குடிமருதனார் | பாண்டியன் நெடுஞ்செழியன் | ஆசிரியமும் வஞ்சியும் | புறம்—காஞ்சி |
| நெடுநல்வாடை | 188 | நக்கீரனார் | பாண்டியன் நெடுஞ்செழியன் | ஆசிரியப்பா | (அகம்--பாலை) + புறம் |
| குறிஞ்சி | 261 | கபிலர் | — | ,, | அகம்-குறிஞ்சி |
| பட்டினப்பாலை | 301 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | கரிகால் பெருவளத்தான் திருமாவளவன் | ஆசிரியமும் வஞ்சியும் | அகம்—பாலை |
| மலைபடுகடாம் | 583 | பெருங்கௌசிகனார் | நன்னன் | ஆசிரியம் | ஆற்றுப்படை |

# 2. கீழ்க்கணக்கு நூல்கள்

## சங்க மருவிய காலம்

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் மேல் கணக்கு நூல்கள் எனப்படும். சங்க காலம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாகக் கருதப்படு கிறது. அதனை அடுத்துத் தோன்றிய இலக்கியம் ஒரு புதிய மரபினைக் கொண்டு விளங்குகிறது. இக்கால இலக்கியங்களைச் சங்க மருவிய நூல்கள் எனவும் இக் காலத்தைச் சங்கமருவியகாலம் எனவும் கூறுவர். நீதிநூல் கள்சிலவும் திணை நூல்கள் சிலவும் இக்காலத்தில் தோன் றின. இவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்பட் டன. இவற்றோடு சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரு காவியங்களும் இக்காலத்தில் தோன்றின.

## மேல்கணக்கும் கீழ்க்கணக்கும்

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆசிரியத்தாலும், வஞ்சியாலும், கலியாலும், பரிபாடலாலும் இயன்றவை; வெண்பா மிகுதியாக இடம் பெறவில்லை. நிமிர்ந்த அடி களால் ஆகிய இப்பாடல்களை மேல்கணக்கு என்றனர். எட்டும் பத்தும் சேர்ந்து பதினெட்டு ஆயின; பதினெண் மேல்கணக்கு நூல்கள் எனப்பட்டன; சங்கவிலக்கியம் என்ற பெயர் செல்வாக்குப் பெற்ற காரணத்தால் இப் பெயர் வழக்கிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து விட்டது

திருக்குறள், வெண்பாவினால் ஆகியது; அதிலும் குறள் வெண்பாவால் இயன்றது. அதேபோல ஏனைய நீதி நூல்களும், பிற தனி நூல்களும் பெரும்பான்மை வெண்பா யாப்பில் இயன்றவை; சிலம்பும் மேகலையும் ஆசிரியப் பாவால் இயன்றவை. வெண்பா யாப்பில் அமைந்ததும் குறுகிய அடிகளைக் கொண்டதும் ஆகிய பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பட்டன. மேலும் முன் தோன்றியவை என்ற பொருளில் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேல்கணக்கு நூல்கள் எனவும், அவற்றைத் தொடர்ந்து பின் அமைந் தவை என்ற பொருளில் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் இவை பெயர் பெற்றன.

குறைந்த அடிகளில் முப்பொருளை அடுக்கி ஒழுங்கு படுத்திக் கூறுவது கீழ்க்கணக்கு நூல்கள் என்று விளக் கப்படுகின்றது.

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்

என்று பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல் விளக்கம் தருகிறது. கணக்கு என்பது நூல் என்ற பொருளினது; கணக்காயர் என்ற பெயர் ஆசிரியர் என்று உணர்த்தும்.

சங்க கால இலக்கியப் போக்கு வேறு; இக்காலப் போக்கு வேறு. இக்காலத்தில் சமணமும் பௌத்தமும் தலையெடுக்கத் தொடங்கின. வடமொழிச் செல்வாக்கும் ஓரளவு இடம்பெற ஆரம்பித்தது. நீதியும் வாழ்க்கைப் பயனும் இக்காலத்தில் ஆராயப்பட்டன; அவர்கள் கண்ட உண்மைகளை ஒழுங்குபடுத்திக் கூறத் தொடங்கினர். சிலம்பும் மேகலையும் கூட சில உயர்ந்த உண்மைகளுக்கு நீள்கதை மூலம் விளக்கமும் உயர்வும் பெருமையும் தேடித்

தந்தன. இக்காலத்தை அறநூல்கள் எழுந்த காலம் எனச் சுருங்கக் கூறலாம்.

நீதிகள் எடுத்துரைக்கச் சங்கப் பாடல்கள் எழுதவில்லை; செய்யுட் செய்திகளில், செவியறிவுறுத்தல் ஆகவும், பொருண்மொழிக்காஞ்சியாகவும், வாழ்த்தாகவும், சிற்சில அறிவுரைகளும், பொருளுரைகளும், அறவுரைகளும் சங்கப் பாடல்களில் தோன்றி நிலவின. பரவலாகக் கிடந்த அநுபவ உண்மைகள் பிற்காலத்துக் கவிஞர்களுக்கு நீதிக் கருத்துக்களாக அமைந்தன.

சங்கவிலக்கியங்கள் சொற்சுவையும் பொருள் அழகும் பொருந்தியவை. நீதி நூல்கள் இலக்கியச் சுவை குன்றியிருந்தாலும், கற்பனை குறைவாக இருந்தாலும் மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தும் அரிய தொண்டினை இவை செய்துள்ளன. தமிழ் மக்கள் வாழ்விலும் இலக்கிய அமைப்பிலும் பிற்காலத்தில் இக்கருத்துக்களைப் போற்றி, ஒழுக்க மேம்பாட்டிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். வாழ்க்கையின் நியதிகளை அறிந்துகொண்டு நீதிகள் பேசியும் மேற்கொண்டும் வாழ்வதற்கு இவை பெரிதும் துணைசெய்தன.

இந்த நீதிநூல்களுள் ஒரே புலவன் அடுக்கித் தொடுத்துப் பாடியவையும் உள; பல புலவர்கள் பாடித் தொகுத்தவையும் உள. இக்காலக் கட்டுரை எழுதும் போக்கைப் போல ஒரு குறிப்பிட்ட தலைப்பைத் தேர்ந்து பிறகு விளக்கம் தந்து அமைவன இவை; திருக்குறள் குறிப்பிட்ட தலைப்புக் கேற்ற செய்திகளை அடுக்கித் தொகுத்துக் கட்டுரை வடிவில் அமைந்துள்ளது; ஏனைய நூல்களும் இவ்வாறு அமைந்தவையாம். திருக்குறள் ஓர் ஆசிரியரால் பாடப்பெற்றது; நாலடியார் பல ஆசிரியர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். தனிப்பட்ட ஆசிரியர்கள் எழுதிய நூலாயினும், பண்டைக் கருத்துக்களைத்

தொகுத்து அமையும் போக்கைப் பெரிதும் தழுவியுள்ளனர். பழமொழி என்பது பழைய மொழிகளைத் தொகுத்து முன்றுறையார் என்பவர் பாடியதாகும். ஏனைய நூல்கள் தனித்தனிப் புலவர்களால் பாடியவை. எனினும், ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டியிட்டுச் சிறந்த கருத்துக்களை அறிவிப்பதில் முந்திக் கொள்ள முயன்றனர் என்று தெரிகிறது. உடல் நோய் தீர்க்கும் மருத்துவர்களைப் போல மனநோய் தீர்க்கும் மருத்துவர்களாக மாறினர். சுக்கு, மிளகு, திப்பிலியாகிய திரிகடுகமும், கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய பஞ்ச மூலமும் (ஐந்து வேர்களும்), ஏலம் கலந்த மருந்துக் கலவையாம் ஏலாதியும் அவர்கள் நினைவிற்கு வந்தன. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற நூல்கள் உருவாகின. இவற்றின் ஆசிரியர்கள் முறையே நல்லாதனர், காரியாசான், கணிமேதாவியார் எனப்படுவோர்.

தொன்று தொட்டு வரும் நியதிகளே நீதிகள் என்ற கருத்துக்கு மதிப்புக் கொடுத்தவர்கள் ஒரு சில நூல்கள் இயற்றக் காண்கின்றோம். அவை பழமொழி, முதுமொழிக் காஞ்சி, ஆசாரக் கோவை என்பன; பழமைக்கு மதிப்புக் கொடுத்து அவற்றை வற்புறுத்துவனவாக அமைந்துள்ளன. அவற்றின் ஆசிரியர்கள் முறையே முன்றுறையார், மதுரைக் கூடலூர் கிழார், பெருவாயின் முள்ளியார் என்போர்.

மருத்துவன், உடம்புக்கு நல்லது இது, உடம்புக்கு ஆகாதது இது என்று விதித்தும் விலக்கியும் கூறுவது போல எழுந்தவை உள. அவை இனியவைநாற்பது இன்னாநாற்பது என்பன. அவையும் ஒன்றைப் பார்த்து மற்றொன்று அமைந்தது போலக் காணப்படுகின்றன. பூதஞ்சேந்தனர் இனியவை நாற்பதும். கபிலர் ஏனைய நூலும் எழுதினர்.

சொல்லுவதை அளவாகச் சொல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடோடு எழுதியவர்களும் உளர். அதிகமாக வற்புறுத்தினால் நீதிகளும் கசந்துவிடும் என்ற காரணத் தால் அளவாகப் பேசி அதன் காரணமாகப் பெருமை தேடிக் கொண்டார்கள். அவற்றுள் ஒன்று திருக்குறள்; மற்றொன்று நாலடியார். ஈரடிகள் கொண்டு நடப்பது திருக்குறள்; நாலடிகள் கொண்டு விளங்குவது நாலடியார். 'ஆலும்வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல் லுக்கு உறுதி' என்ற பழமொழியும் எழுந்தது; இஃது இந் நூல்களின் பொருள் உறுதிகளை வற்புறுத்துகின்றது. நாலடியார் நிலையாமையைச் சிறிது மிகுதியாக வற்புறுத்து கிறது; ஏனைய வகையில் இது நீதிகளை வற்புறுத்துவதில் திருக்குறளைப் பின்பற்றிச் செல்கிறது. திருக்குறளைப் பின் பற்றிக் காமத்துப்பாலும் இதில் உள்ளது; சமணப்புலவர் கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலடியார் என்பது.

ஓர் ஆசிரியர் நினைத்துப் பார்த்தார்; தம்முடைய கருத்துக்கள் மணிகளால் ஆகிய அணிபோன்று ஒளிவிடக் கூடியன என்று எண்ணினார் போலும்; நான்மணிக் கடிகை என்ற பெயரால் ஓர் நூல் உருவாகிவிட்டது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார்; இதில் ஒவ்வொரு பாட் டிலும் நான்கு கருத்துக்கள் விளம்பப்படுகின்றன.

## நீதிநூல்களுள் ஒரு சில எடுத்துக்காட்டுகள்

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தான் என்றெண்ணப் படும் — நாலடியார் (9)

இன்னாமை வேண்டின் இரவுஎழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசை நடுக; — தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல் — நான்மணிக்கடிகை (17)

ஆவாய வேட்கை அவா அடக்கல் முன்இனிதே
கைவாய்ப் பொருள் பெறினும் கல்லார்கண் தீர்வினிதே
நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது — இனியவை நாற்பது (26)

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி; கொண்டன
செய்வகை செய்வான் தவசி; கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன்; இவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை — திரிகடுகம் (96)
நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே; செய்யின்
அசையாது நிற்கும் பழி — ஆசாரம் (73)

முதுமொழிக்காஞ்சி ஐங்குறுநூறுபோல் பத்துப் பத்தாகப் பாடல்கள் கொண்டு ஒரு தலைப்பைப் பெறுகின்றது: சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப்பத்து, இல்லைப்பத்து, பொய்ப்பத்து முதலியன இதன் தலைப்புக்கள்.

இப்பதினொரு நீதிநூல்களே யன்றித் திணைபற்றி எழுந்த நூல்கள் ஏழு உள்ளன. அகப்பொருள் பற்றியவை ஆறு; புறப்பொருள் பற்றியது ஒன்று. சிதறிய முத்துக்களைச் சேர்த்துக் கட்டிய மாலைகளைப் போல அல்லாமல் தொடர்ந்து அடுக்கி வரிசைப்படுத்திய பூ மாலைகளைப் போலத் தொடர் நிலைச் செய்யுள்களாக இவை விளங்குகின்றன. எடுத்த திணைக்கு ஏற்பத் தொடர்ந்து பாடப்பட்ட பாடல்கள் இவை. நற்றிணை. சங்கப் பாடல்களின் தொகுப்பு; அதற்குப் பிறகு திணை என்ற பெயர் பெற்று விளங்கும் நூல்கள் நான்கு; அவை ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது. இவற்றின் ஆசிரியர்கள் முறையே மாறன் பொறையனார், மூவாதியார், கண்ணன் சேந்தனார், கணிமேதாவியார் என்போர். திணைக்குப்பத்துப் பாடல்களாக ஐம்பது பாடல் கொண்டு விளங்குவன

ஐந்திணை ஐம்பது திணைமொழி ஐம்பது என்பன; திணைக்குப் பதினான்கு பாடல்கள் பெற்று விளங்குவது ஐந்திணை எழுபது; திணைமாலை நூற்றைம்பது திணைக்கு முப்பதும் முப்பத்தியொன்றுமாக 153 பாடல்கள் கொண்டுவிளங்குகிறது. சில 31ம் சில 30ம் பெற்று விளங்குகின்றன. இவை ஒழுங்காக வரையறை செய்து கொண்டு எழுதப் பட்டவை; சங்கப் பாடல்கள் போல் அல்லாமல் செயற்கையாக ஒழுங்கு படுத்திப் பாடப்பட்டவை இவை. கைந்நிலை என்ற நூலும் அகப்பொருள் திணையையே பாடுகிறது; இது, திணைக்குப் பன்னிரண்டு பாடல்கள் பெற்று விளங்குகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளைத் தலைப்புக்களாகக் கொண்டு இவ்வைந்து நூல்களும் எழுந்துள்ளன.

இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள் ஒரு சில பின்வருமாறு:

மஞ்சுஇவர் சோலை வளமலை நன்னுடை!
எஞ்சாது நீ வருதி என்றெண்ணி — அஞ்சித்
திருவொடுங்கும் மென்சாயல் தேங்கோதை மாதர்
உருவொடுங்கும் உள்ளுருகி நின்று.

—ஐந்திணை ஐம்பது (குறிஞ்சி)

செந்தா மரைமலருஞ் செய்வயல் நல்லூர,
நொந்தால் மற்றுஉன்னைச்செயப்படுவது என்றுண்டால்
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீயா பக் கால்

—திணைமொழி ஐம்பது (மருதம்)

இவ்வெண்பாக்கள் நளவெண்பாவுக்கு வழிகாட்டியாக அமைந்தவை போலக் காணப்படுகின்றன.

கார்வழி நாற்பது, கார்காலத்து வருணனையும் தலைவியின் இருத்தலாகிய முல்லை ஒழுக்கமும் கொண்டு விளங்குவது. இதன் ஆசிரியர் கண்ணங் கூத்தனார்

கடுங்கதிர் நல்கூரக், கார்செல்வம் எய்த
நெடுங்காடு நேர்சினை ஈனக் — கொடுங்குழாய்!
இன்னே வருவர் நமரென்று எழில்வானம்
மின்னும் அவர் தூது உரைத்து

இது தோழி கார்காலத்தின் தோற்றத்தையும், தலைவனின் வருகையையும் கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூறுவது.

களவழி நாற்பது, கழுமலம் என்னும் இடத்தில் நிகழ்ந்த போர்க்கள வருணனையைக் கொண்டு விளங்குகிறது. சேரமன்னன் கணைக் காலிரும் பொறையின் விடுதலைக்காகப் பொய்கையார் கோச் செங்கண்ணனைப் பாடியது. போர்க்கள வருணனைத் தொடர்நிலைப்பாடல்களுள் இதுவே முற்பட்டதாகும். பிற்காலப் பரணி நூல்களுக்கு இது கருவூலமாக அமைந்துள்ள புறப்பொருள் பாடலாகும். இது போர்க் கொடுமையின் கடுமையினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

## திருக்குறள்

உலக இலக்கியங்களுள் ஒன்றாக மதிக்கும் சிறப்புப் பெற்ற நூல் திருக்குறள். வள்ளுவரை உலகினுக்குத் தந்த காரணத்தால் தமிழ்நாடு வான்புகழ் பெற்றுவிட்டது. உலகப் பன்மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுத் தமிழனின் உயர்ந்த பண்பாட்டையும் சிந்தனைச் சிறப்புக்களையும் உணர்த்திக்கொண்டு வருகிறது. முப்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் இது மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

சாதிக் கொரு நீதி என்று இல்லாமல் மனித இனத்தின் பொதுவறமாக உணர்த்தும் ஒப்புயர்வற்ற நூலாக இது திகழ்கிறது. அறமும், அறிவும், உணர்வும், உயர்வும், கற்பனையும், கவிச்சுவையும் மிக்கு எல்லா வகையிலும்

முழுமை பெற்ற நூலாக அமைந்துள்ளது. அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பிரிந்து வாழ்வின் நற்பால்கள் அனைத்தும் காட்டுகிறது.

## அறத்துப் பால்

வாழ்வு தனிமனிதன் அறத்தையும் சமுதாயப் பொது நன்மையையும் பொறுத்து அமைவது. தனிமனிதனின் அறத்தை, அறத்துப் பாலில் ஆராய்ந்து அதனை இல்லறம் என்றும் துறவறம் என்றும் பிரித்துக்காட்டுவது போற்று தற்கு உரியது. அன்பும் அறமும் இல்லறத்தின் பண்பு என்பது அவர் கொள்கை. மனைவி, மக்கள், சுற்றம், விருந்து இவர்களைப் போற்றுவதால் இல்லற வாழ்வில் அன்பு மலர் கிறது; உள்ளப் பண்பு சிறக்கிறது. துறவு என்பது செருக்கற்றுத் தன்னலம் குறைந்து வாழ்வது. இல்லறத் தில் அன்பு மலர்கிறது; துறவறத்தில் அருளுள்ளம் அமை கிறது. அன்பின் வளர்ச்சி அருள் என்பர். அறம் மிக்க அன்பு வாழ்வும் அருள்தொண்டும், நெஞ்சிலும் செயலிலும் மலர்வதே தனிப்பட்டவர் வாழ்வில் காணும் சிறப்பு என்பது அவர் கருத்தாகும்.

மனிதன் எப்படி வாழவேண்டும் என்று அறிவுரை கூறும் நூலாக மட்டும் இயங்கவில்லை. எப்படி வாழ்வது என்று வழியும் கூறுகிறது. அறம் என்பது மனத்தின்கண் மாசிலன் ஆகுதல் என்றும், அறத்தின் வழியாக வருவது தான் இன்பம் என்றும் விளக்கம் தருகிறார். இல்வாழ்க் கையில் வாழ்க்கைத் துணைவியின் மாட்சிகளை ஒட்டியே இல்லறம் இனிதாக அமைகிறது என்று கூறித் 'தற்காத் துத் தற் கொண்டாற் பேணித் தகை, சான்ற சொற் காத்துச் சோர்விலாள் பெண்' என்று இல்லாளின் கடமைகளைக் காட்டுகின்றார். மழலை மொழிபேசும் குழந்தை இன்பத்தைச் சுட்டுகின்ற ஆசிரியர் அதனோடு அமைய வில்லை. பெரியவர்களுக்கு அவனைக் சான்றோனுக்கும்

பொறுப்பும் இருக்கிறது என அறிவுறுத்துகின்றார். அன்பின் உயர்வை மிக அழகாக வற்புறுத்திக் காட்டுகின்றார். பகைவனுக்கும் அருள் செய்யவேண்டும் என்ற உள்ளத்தின் உயர்வைக் காட்டுகின்றார். அன்பு அறத்திற்கு மட்டுமன்று மறத்திற்கும் அதுவே துணையாகும் என்று விளக்கம் தருகின்றார். அன்பே உயிர்; அதனால் தான் உடல் அசைகிறது; அன்பு இன்றேல் அவர் நடைப்பிணம் என்பது அவர் கருத்து.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'

இல்லறத்தில் வருவிருந்து ஓம்பி, எல்லோரிடமும் இனியவை பேசி வாழ்க்கையை இனிதாக்கவேண்டும் என்பது அவர் கொள்கை. தனிமனிதன் வாழ்வில் சில அடிப்படைப் பண்புகள் நிலைபெற வேண்டும் என்பது அவர் கருத்து. செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறர்பொருளை நச்சித் தீயவழிகளில்பொருள் திரட்டாமை, புறங் கூறாமை, பயனில சொல்லாமை, ஒப்புரவோடு ஒழுகல், ஈகை செய்தல் முதலிய பண்புகளை வளர்க்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். ஒருவன் பொருள் திரட்டுவது சமுதாயத்திற்கும் பயன்படவேண்டும் என்ற இக்காலப் பொருளாதாரக் கொள்கையை ஒப்புரவறிதல் என்ற தலைப்பில் வற்புறுத்தக் காண்கிறோம்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

வாழ்க்கையின் பயன் ஈதலும், இசைபட வாழ்தலும் ஆகும் என்று கூறித் தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும் என்ற கொள்கையை நிலைநாட்டுகின்றார். இல்லறத்தில் அன்பும் அறனும் பண்பும் கொண்டு வாழ்க்கை நடத்தி மக்களொடு துவன்றிச் சுற்றங் காத்துப் பிறருக்கும் பயன்

பட்டுப் புகழ்பட வாழ வேண்டும் என்று அறிவுறித்தக் காண்கிறோம்.

துறவறம் என்ற பகுதி மனிதன் தன்பண்பாலும் சீரிய சிந்தையாலும் முழுநிலை (Personality) பெறவேண்டும் என்று உணர்த்துவதாகும். வெறும் கடமைகளாலும் அறச் சிந்தையாலும் மட்டும் மனிதன் முழுநிலை அடைய முடியாது; அன்பு அருளாக மாறவேண்டும்; அருளறம் பெருகவேண்டும்; அருள் உள்ளம் பெறச் சில விரதங்களும் பழக்கங்களும் மேற்கொள்ள வேண்டும்; புலால் மறுத்தல், தவம், வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, பிறர் பொருளை விரும்பாமை முதலிய நற் பழக்கங்களையும் கொள்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வாய்மை என்பதற்கு வள்ளுவர் தரும் விளக்கம் நடை முறைக்கு ஒவ்வும் விளக்கமாக அமைந்துள்ளது.

**‘பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்’**

மனிதன் ஆக்கத்திற்கு உலகவறமாகிய ஊழ் ஒன்று சில சமயம் தடையாகவும் விளங்கும் என்ற பொது உண்மையைக் காட்டுகின்றார்.

**‘ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந்து உறும்’**

—இவ்வாறு ஊழின் பெரு வலியை அறத்துப்பாலில் உணர்த்தும் அவரே பொருட்பாலில்,

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்’**

என்று உழைப்பின் உறுதியையும் உயர்வையும் கூறி ஊக்கம் உடையவன் முயற்சியால் ஆக்கம் வழிவினவிக்

கொண்டுவரும் என்று ஊக்குவிக்கும் நிலையைக் காட்டு கின்றார்.

நிலையாமையைப்பற்றி எத்தனையோ புலவர்கள் எவ் வெவ்வாறோ கூறியிருக்கிறார்கள். வள்ளுவர், "உலகத்தில் நிலையாமை உணர்ச்சி உண்டு; அதுதான் இந்த உலகத் தின் 'பெருமையும்" என்று கூறுவது மிக அழகாக இருக் கிறது.

'நெருநல்உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு'

## பொருட்பால்

தனிமனிதன் வாழ்வைச் சமுதாய வாழ்வோடு பொருத்திக் காட்டுவது பொருளியல் ஆகும்; அதுவே பொருட்பால் என்ற இயலாகும். வள்ளுவர் தம் பொருட் பாலில், படை, குடி, கூழ், அமைச்சு. நட்பு, அரண் என்று ஆறு உறுப்புக்களின் சிறப்பையும், அதனால் பெறும் செங் கோன்மை மிக்க அரசியல் வாழ்வையும், அதற்கு வேண்டிய செயல்களையும் விளக்கிக் கூறுகின்றார். சமுதாய நல் வாழ்விற்குக் கல்விநிலை உயர வேண்டும். கல்வி நலம் மக்கள் பெற வேண்டும்; அதனால்தான் கல்விகேள்விகளின் உயர்வு மிகவும் வற்புறுத்தப்படுகிறது.

அறிவு என்பதற்கு வள்ளுவர் தரும் விளக்கத்தைப் பார்த்தால் இவரைப் பகுத்தறிவு இயக்கங்கட்குத் தந்தை என்று கூறலாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்பது அவர் தரும் விளக்கமாகும்.

வள்ளுவர் அரசியல் எல்லாத் துறைகளையும் உள் ளடக்கியதாக இருக்கிறது. உடல்நல மருத்துவராக விளங்கி மருந்து என்ற தலைப்பில்,

**‘ நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ’**

என்று சிறந்த வழியுங் காட்டுகின்றார். இக்கால மருத்துவ நிலையும் நோய் ஒழிப்பதைவிடத் தடுப்பதில்தான் கருத்துச் செலுத்துகின்றது; அதே போக்கில் வள்ளுவர் தடுப்பு முறையை மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்—**

ஆறுவகை அங்கங்களாகிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற இவற்றால் மட்டும் நாடு உயர்ந்துவிடும் என்று எவரும் கூறிவிடுவர். வள்ளுவர் இவற்றோடு அமையாமல் மேலும் மக்கட் பண்புகளில் நம்பிக்கை வைப்பதில்தான் அவர் சிறப்பு உயர்கிறது குடிமை, மானம், சான்றாண்மை, பண்புடைமை முதலிய பண்புகள் வளர்க்கும் மக்களால்தான் நாடு நலம் அடையும் என்று உணர்த்துகிறார். உழவு என்ற தலைப்பில் உழவின் பெருமையை உணர்த்தியிருப்பது ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும்’ உயர்வைக் காட்டுகிறது.

கயமை என்பது கரந்திருக்கின்ற மக்கட் பண்பு. இத்தகைய கயமையைக் கண்டறிந்து அவர்களிடம் விழிப்பாக இருந்தால்தான் நாடு முன்னேறும்; பொது நல ஆட்சி நிலவும் என்பது அவர் கருத்து. மிக உயர்ந்த பதவியிலும், கற்றோர் என்ற போர்வையிலும் ஆதிக்க நிலையிலும் நின்று மக்கள் முன்னேற்றத்தையும் பொது நலத்தையும் ஒருசிலர் தடுத்து வருகின்றனர். அவர்களிடம் விழிப்பாக இருந்தால்தான் எந்த அரசியல் பொருளாதாரக் கொள்கையும் செயல்பட்டுப் பொதுநலத்திற்குப் பயன்பட முடியும் என்ற கருத்தை வற்புறுத்தவே கயமை என்ற அதிகாரத்தை இறுதியில் வைத்துள்ளார். எந்தக் கொள்கையையும் நீதியையும் பொதுநன்மையையும் தன்

னலத்திற்காக விட்டுக்கொடுக்கும் இயல்பினர் கயவர் என்று காட்டுகிருர். பொதுவாழ்வில் தற்காலத்தில் வழங்கப்படும் லஞ்ச ஊழலே அன்றே சுட்டிக்காட்டி விழிப்புணர்ச்சியை ஊட்டுகின்ருர்.

எற்றிற்குரியர் கயவர் ஒன்று உற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து

அறத்துப்பாலில் அன்பும் அருளும் ஒளிர்கின்றன; பொருட்பாலில் செம்மையும் ஆக்கமும் செயலும் வெளிப்பட்டு அவற்றிற்கும் அறமே அடிப்படை என்று காட்டப்படுகிறது.

**காமத்துப்பால்**

மனிதன் அறத்தோடு வாழ்ந்து பொருளியலால் வாழ்வும் வளமும் பெற்றபின் இன்ப வாழ்வில் ஈடுபடும் இயல்பைக் காமத்துப்பாலில் காட்டுகின்ருர். உள்ளம் ஒன்றுபட்டு வாழும் இன்ப வாழ்வில் காதற் கற்பனைகள் வளர்தல் இயற்கை. அக்கற்பனைகளை அமைத்து இன்ப வாழ்வின் நுட்பங்களையும், அழகுகளையும் அதில் ஈடுபடுவாரின் மனவியல்புகளையும் நுட்பமாகக் காமத்துப்பாலில் காட்டுகின்ருர். அகப் பொருட்டுறைகளை அழகாக அமைத்துத் தம் கற்பனைத் திறம்படக் காட்டித் தம் புலமைச் சிறப்பைக் காட்டுகின்ருர். களவியல் கற்பியல் என இரு பிரிவாகப் பிரித்துத் திருமணத்துக்கு முன்னும் பின்னும் அக வாழ்க்கையின் நிலைகளை விளக்குகின்ருர்.

களவியலில், தலைவியைக் காண்டலும், அவள் குறிப்பறிதலும், கலந்து மகிழ்தலும், அவள் நலம் புனைந்து உரைத்தலும், காதற் சிறப்பு இருவரும் உரைத்தலும், காதல் மிக்குழி தலைவி நாண் கெடும் நிலை செப்பலும், ஊர் எழுப்பும் அலரை நினைத்துத் தலைவி வருந்தி உரைத்தலும் சிறப்பிக்கப்படுகின்றன.

கற்பியலில், தலைவன் பொருள் கருதிப் பிரிதலும், பிரிவால் தலைவி வருந்தி ஆற்றி இருத்தலும், நலனழிந்து நெஞ்சொடு கிளத்தலும் முதலிய பாலைச் செய்திகளும், முல்லை நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன. மருதத் திணையில் வரும் ஊடல் நிகழ்ச்சிகளும் புலவி நுணுக்க உரைகளும் இறுதியில் இடம் பெறுகின்றன.

அறத்துப்பாலில் வள்ளுவரின் நெஞ்சப் பாங்கும், பொருட்பாலில் அவர் அறிவின் திறனும், காமத்துப்பாலில் அவர் கற்பனை வளமும் புலனாகின்றன.

சங்க காலத்தும் அதற்கு முன்னும் தொன்றுதொட்டு வழங்கிவந்த உயர்ந்த கருத்துக்களைத் தொகுத்தும் சமய வழிக் கருத்துக்களைத் தழுவியும், வாழ்க்கை அனுபவத்தை இயைத்தும் இந்நூல் கருத்துக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு செய்தியையும் தனித்தனித் தலைப்புக்களில் பத்து பத்துக் குறளில் அமைத்து எழு சீர்கள் கொண்ட வெண்பா யாப்பில் சில சொற்களால் பல கருத்துக்களைப் புகுத்தி அமைத்துள்ளார். சொற் சிறப்பும் யாப்பு அமைப்பும் காரணமாகத் திருக்குறள் என்ற பெயரும், பொருட் சிறப்பின் காரணமாக முப்பால் என்ற பெயரும் வழங்குகின்றன. ஈரடியால் முப்பாலையும் அளந்து காட்டியிருக்கிறார். தமிழ் மொழியையும் இலக்கிய மரபையும் காத்து வரும் அரண் தொல்காப்பியம் என்றால் தமிழரின் பண்பாட்டையும் ஒழுக்க மேம்பாட்டினையும் காத்துவரும் நீதி நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

சமயத்தலைவர்களும், நாட்டுத்தலைவர்களும், இலக்கிய மேதைகளும் திருவள்ளுவரைப் பின்பற்றியே தம் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். யாவரும் பொதுவாக ஒப்பக் கூடிய வகையில் பொதுமை அறம் பெற்று விளங்கும் நூல் இது. பிற்காலத்து எழுந்த சிலம்பும், மேகலையும், சிந்தாமணியும், மற்றுமுள்ள உயர்ந்த இலக்கியங்கள்

பலவும் திருக்குறட் கருத்துக்களைப் பொன்னே போலப் போற்றி வந்துள்ளன. கருத்துக் கருவூலமாக நின்று மக்கள் வாழ்வையும், புலவர்கள் சிந்தனையையும் கவர்ந்து தமிழ் இலக்கியங்களிலும் ஒழுக்கச் சிந்தனைகளிலும் சிறந்த இடம் பெற்றுள்ளது. திருவள்ளுவ மாலை என்ற தொகுப்பில் பல பாடல்கள் இந்நூலைப்புகழ்ந்து பாராட்டு கின்றன; திருக்குறளுக்குப் பதின்மர்உரைகள் எழுதியிருக் கிறார்கள் என்று தெரிகின்றது. அவற்றுள், இப்பொழுது கிடைப்பன மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிமேல ழகர் எழுதிய உரைகளாம் அவற்றுள்ளும் பரிமே லழகர் உரையே சிறந்த உரையாகத் திகழ்கிறது. அதனையே பலரும் பயில்கின்றனர். இப்பொழுது திருக் குறளுக்கு விளக்க நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் பல வெளிவந்துள்ளன.

# 3. இரட்டைக் காவியங்கள்

## சிலப்பதிகாரம்

தனிநிலைச் செய்யுட்களாக இருந்தவை தொடர்நிலைச் செய்யுட்களாக மாறின. தனித்துறைச் செய்திகளாக அமைந்த பாடல்கள் தொடர் நிகழ்ச்சிச் செய்திகளைக் கூறும் காவியமாக மாறின. காவியம் என்பது தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் நாடுநகர் வருணனை கொண்டு காவியத் தலைவனின் காதல், வீரம், திருமணம் முதலிய செயல்களின் பெருமையை உணர்த்திப் பல்வகைச் சுவைகளும் அமையப்பாடுபவை என்பர். இத்தகைய இலக்கணங்கள் எல்லாம் தோன்றுவதற்கு முன்னரே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தோன்றின. வணிகர் மகனும் கணிகை மகளும் காவியத் தலைவர்களாகும் கதைகள், கவிதைப் பொருள்களாக மாறி, இடம் பெற்றமை இவ்விரண்டு நூல்களின் தனிச்சிறப்பு எனலாம்; வெளிநாட்டுக் கதைகளைத் தமிழில் அமைக்காமல் நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளைக் காவியக் கதைகளாக அமைத்த பெருமை இந்நூல்களுக்கு உண்டு.

அவலத்தின் சுமையால் காவியம் பிறக்கும் என்பர். கண்ணகியின் கண்ணீர் இளங்கோவின் உள்ளத்தை நனைத்தது. அவள் காற்சிலம்பின் ஒலி அவர் செவிகளில் துளைத்தது. அவள் அவலவாழ்வும் காற்சிலம் பொலியும் அவர் உள்ளத்தைக் கவ்வின. யார் இவள்? ஏன் இந்த

அவல நிலை ஏற்பட்டது? யார் இதற்குப் பொறுப்பாளி என்ற வினாக்கள் அவர் உள்ளத்தில் இடைவிடாமல் தொடர்ந்து எழுந்தன. இந்தக் கதையின் கருவூலம் யாது? சிக்கல் தோன்றியதன் காரணமும் கதை முடிப்பு அவிழப் பெறுதலும் எவ்வாறு என்று எண்ணிப்பார்த்தார்.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்**

அவர் கேட்ட வினாக்கட்குக் கிடைத்த விடைகள். கதை, சிலம்பின் மணியைச் சுற்றிப் பின்னப் பட்டிருப்பதை உணர்ந்தார்; சிலப்பதிகாரம் என்னும் பெயரால் கண்ணகியின் வரலாறு காவிய உருவம் பெற்று விட்டது.

சோழநாட்டில் பிறந்து வாழ்க்கை தொடங்கிய கண்ணகி, பாண்டிய நாட்டில் கணவனை இழந்து அவல நிலை அடைகிறாள்; சேரநாட்டிற்குச் சென்று துறக்க வாழ்வு பெறுகிறாள்: மூன்று பெருநாடுகளும் கதை நிகழும் இடங்களாக அமைகின்றன. சோழர்தம் செங்கோன்மைச் சிறப்பும், பாண்டியநாட்டுப்பண்பும், சேரநாட்டின் வீரமும், இக்காவியத்தில் சிறப்பிக்கப்படுகின்றன. காவியத் தலைவன் குடிமகனாக இருந்தாலும், மூன்று நாட்டு மன்னர்களின் அறமும் வீரமும் பிணைக்கப் படுவதால் இது ஒரு நாட்டுக் காப்பியம் என்ற நிலைமையைப் பெறுகிறது, மூன்று பகுதிகளையும் ஒன்றாகக் காணும் ஒற்றுமைக் காட்சி இந்நூலில் காணப்படுகிறது.

முதற்பகுதியாகிய புகார்க் காண்டத்தில், கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடக்கிறது; மாதவியின் ஆடல் பாடல் அழகில் ஈடுபட்டு அவளிடம் கூடலும் ஊடலும் கொண்டு பின்பு மனம் வேறுபட்டுக் கானல்வரிப் பட்டால் அவன் வாழ்வு கானல் நீராக மாறுகிறது. வேனிற்பருவத்தில் கண்ணகியோடு மதுரை நோக்கிச்

செல்கிறுன். இவ்வளவும் புகார்க்காண்டத்தில் புகலப் படும் செய்திகளாகும்.

மதுரையில் மாதரி வீட்டில் தங்கிப் பின் சிலம்பு விற்ற லும்,பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலன் கொலையுண் ணலும்,அலையுண்ட மனத்தோடு பாண்டியனிடம் கண்ணகி வழக்கு உரைத்தலும், மதுரை தீக்கிரை யாதலும், மதுரைக்காண்டத்தில் இடம் பெறுகின்றன தேரா மன்னன், ஓராது கூறிய சொற்களால் கோல்வளைந்து அவன் வாழ்வு இழந்து மறைகிற செய்தியும், ஊழ்வினை வந்து உருத்து வந்து ஊட்டி அவலச் சூழலை உண்டாக்கு வதும் இக்காண்டத்தின் அடிப்படை நிகழ்ச்சிகளாம்.

அவல நெஞ்சோடு காவியத்தை முடித்திருக்கலாம்; ஆனால் அவ்வாறு கதையை முடிக்கவில்லை. அமைதி காண வேண்டும் என்ற வேட்கை புலவரை உந்தி இருக்கலாம்; சேரனையும் இப்பெரிய வரலாற்றில் சேர்க்கவேண்டும் என்ற சிந்தனை பிறந்திருக்கலாம். கண்ணகியின் வரலாறு கல்லிலும் வடிவு பெறுகிறது. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துகின்றனர். இறப்போடு வாழ்வு இறுதி யடைவதில்லை; எஞ்சி நிற்கும் புகழ் நிலைத்த ஒன்ருக நிற்கிறது; கண்ணகியின் புகழோடு சேரனின் வீரம் ஒன்று படுகிறது. மலைவளங் காணச் சென்ற மலைநாட்டு வேந்தன் சேரன் செங்குட்டுவன் மலைக்குறவர் கூறிய செய்திகளால் கண்ணகியின் கற்பின் பெருமையை உணர்தலும், வட நாட்டிற்குச் சென்று இமயமலையில் கல் கொணர்ந்து கங்கையில் நீராட்டிக் கனக விசயர்தம் கதிர்த்தலையில் கல்லைச் சுமத்திக் கொணரலும், கொண்ட கல்லைச் சிலை யாக்கி வழிபடுதலும், வஞ்சிக் காண்டத்தில் இடம் பெறு கின்றன. காவியப் புலவனை இளங்கோவடிகளின் சுயசரிதமும் இவ்வஞ்சிக்காண்டத்தில் பின்னப்படுகிறது; இளங்கோவடிகளின் துறவும் இதில் சேர்த்துக் கூறப் படுகிறது.

பழைய தமிழகமும், அத்தமிழகத்தில் ஆண்ட மூவேந்தர்களின் சிறப்பும், பெண்ணொருத்தியின் கற்பின் பெருமையும் காவியப் பொருளாக அமைத்துத் தமிழகத்தின் உயர்ந்த பண்பாட்டை இக்காவியம் காட்டுகிறது; இணைந்திருந்த அன்றிற் பறவைகள் அநீதியால் பிரிக்கப்பட்டன; சோகங்கொண்ட பெண்பறவை அழுதது. அதனோடு அமையவில்லை; அநீதியையும் அழித்தது, இதுதான் சிலம்பின் கதை. அடங்கிய நிலையும் சீறிய நிலையும் கண்ணகியின் இருவேறு நிலைகள். அகவாழ்வில் அடக்கமும் புறவாழ்வில் சீற்றமும் அவள் மனவியல்புகள்.

துறவு வாழ்வு கொண்ட கவுந்தியடிகள் கண்ணகியை இவ்வாறு பாராட்டுகின்றார்:

**"இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்**
**கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"**
**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்"**

என்ற வள்ளுவரின் வாக்கையே கவுந்தியடிகள் கூற்றில் இளங்கோவடிகள் அமைக்கக் காண்கின்றோம்.

இயல், இசை, நாடகம் என்று கூறப்படும் முத்தமிழும் இதில் இடம் பெறுகின்றன. மாதவியின் அரங்கேற்றத்தில் அவள் கலைச் சிறப்பும், இசைத் திறனும் அடிகள் புலப்படுத்துகின்றார். இடையிடையே வரிப் பாடல்களும், இசைப் பாடல்களும், குரவைக்கூத்தும் அமைத்து இனிமை ஊட்டுகின்றார். வழக்குரைகாதை சிறந்த உரையாடற் பகுதி கொண்டு விளங்குகிறது. நாடகத்திற்கு வேண்டிய உரையாடல்களும், விறுவிறுப்பும், நிகழ்ச்சி அமைப்புக்களும் இதில் அமைந்து முத்தமிழ்க் காவியமாக இது விளங்குகிறது.

சமயப் பொதுமையும், நாட்டுப்பற்றில் ஒற்றுமைக் காட்சியும் கொண்டு, பண்புமிக்க இக்காவியத்தை எழுதி யிருப்பது போற்றத்தகும். அடிகள், சமணசமயத்தைச் சார்ந்தவராயினும் சமயவெறி அவரிடம் காணப்பட வில்லை; கவிதை நெறியே அவரிடம் காணப்படுகிறது. கவிதை நெறியில் சமயப் பாடல்கள் இடம் பெறுகின்றன. துறவி என்ற நிலையோ சமயவாதி என்ற மலேவோ அவர் கவிதைகளில் புலப்படவில்லை. இயற்கை எழிலும் கவிதைப் பொழிலும் அவர் திளைத்து மகிழ்ந்த நிலைகள். இந்த வகையில் அவர் சாத்தனரோடு பெரிதும் மாறுபடு கின்ருர். புத்த சமயத்திற்குத் தலைமையும் உயர்வும் கொடுக்கவே மணிமேகலை வரலாறு அவருக்கு ஒரு கருவி யாக அமைகிறது; அதனல் இது சிலம்பை நோக்கக் காவியச் சுவையில் பெரிதும் தாழ்கிறது.

சிலம்புக்கு எழுந்த பழைய உரைகள் அரும்பதவுரை யும், அடியார்க்கு நல்லார் உரையும். சிலப்பதிகாரச் சுவை யிலும், அழகிலும், நலனிலும், கவிதைத் திறனிலும் நெஞ் சைப் பறிகொடுத்தோர் பலர். பல ஆராய்ச்சி நூல்கள் இப்பொழுது வெளியிட்டு வருகின்றனர். காவியச் சுவை யிலும், கருத்துக் குவையிலும் பறிகொடுத்து 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாராட்டும் பாரதியின் உரை முற்றிலும் பொருந்துவதாகும். இதன் பல்வகை யமைப்பும் நெஞ்சை அள்ளுகின்றன. இதன் காலம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு என்பர்.

**மணிமேகலை**

சிலம்பும் மேகலையும் இரட்டைக் காவியங்களாக விளங்குகின்றன. ஒரே காலத்தில் நிகழ்ந்த ஒரே நிகழ்ச்சியைச் சுற்றி எழுந்த இரண்டு காவியங்கள் இரட்டைக் காவியங்கள் (twin epics) எனப்படுகின்றன. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் ஒரே காலத்தன

என்றும், வெவ்வேறு காலத்தன என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

மணிமேகலை கண்ணகியின் மகள் என்ற உரிமையைக் கொண்டாடுகிருள் மாதவி. மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை என்று மாதவியால் சுட்டப்படுகின்ருள். அவலத்தின் சுமையால் கண்ணகியின் வரலாறு காவியத்தில் இடம் பெறுகிறது. அத்துன்பத்தைப் போக்குமாறு எங்ஙனம் என்ற வினவுக்கு விடையாக மற்ெறாரு காவியம் எழுந்தது.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்ருேர் உறுவது அறிகென்று"

அருள் செய்கிருர் மணிமேகலையின் நூலாசிரியராகிய சாத்தனுர்.

காவியங்கள் என்ருல் வீர வரலாறுகளை விளம்ப வேண்டும் என்பதும், மன்னர்களின் மணவாழ்வை அமைக்க வேண்டும் என்பதும் பிற்கால மரபு. இம் மரபுக்கு மாருக வணிக மக்கள் வாழ்வையும், கணிகை மகளிரின் உயர்வையும் எடுத்துக் கூறுவனவாக இவ்விரு காவியங்கள் அமைந்திருப்பது புதுமையும் புரட்சியும் கொண்டு விளங்குவதாக உள்ளது. எனினும், அரசர் வாழ்வும் அவர் தாழ்வும் இவற்றில் பின்னிக் கிடக்கின்றன. மன்னவர் செய்த கொடுமைகளை வெளிப்படுத்திக் கடிந்த பெருமை இரு மகளிர்க்கும் உண்டு. பாண்டியனின் கொடுங்கோன்மையை எடுத்துக் காட்டி அவ்வாட்சியை வீழ்த்தினுள் கண்ணகி. கணிகை மகள் என்று எளிமை பாராட்டி மணிமேகலையை அடையலாம் என்ற ஆவல் கொண்டு பின்பற்றிச் சென்ற சோழன் மகன் உதயகுமரன் வித்தியாதரனின் வாளால் வெட்டுண்டு விழுந்

தான். இவ்விரு நிகழ்ச்சிகளால் குறையுள்ள அரசரைக் கடிந்த பெருமை மகளிர்க்கு அமைக்கும் திறனைக் காண்கிரேம். கண்ணகியின் சீற்றத்தால் பாண்டியன் வீழ்ந்தான்; மணிமேகலையின் உருமாற்றத்தால் சோழன் மகன் மாய்ந்தான்.

மணிமேகலையின் துறவு—இதுவும் ஒரு புதுமை; பெண்டிர் துறவு கொள்வதும், அவர்கள் சமயத் தலைமை ஏற்பதும் புதுமையே. அதிலும் கணிகையர் குலத்தில் தோன்றிய ஒருத்தி இத்தகைய உயர்நிலை அடைந்தாள் என்ருல் அது சிறந்த செய்தியாகும்.

மாதவியின் வாழ்வுக்குப் பின் அவள் முடிவு எப்படி அமைய வேண்டும் என்று ஒரு கற்பனையை அமைத்தால் அக் கற்பனையே மணிமேகலையின் வாழ்வு. மாதவியின் தொடர்ந்த வாழ்வும், உணர்வும், உள்ளமும் அவள் மகளான மணிமேகலையின்பால் அமைகின்றன; மணிமேகலை சூழ் நிலையின் படைப்பு. தந்தையும் தாயும் நனியுழந்த துன்ப நிலை அவளை மாற்றிவிட்டது; உலகத்தின் துன்பச் சூழலை மாற்ற வேண்டியது அவள் கடமை என்று உணர்கிருள். பசியும் பிணியும் ஒழிப்பது, தான் உலகுக்குச் செய்யும் கடமையாகக் கொள்கிருள். இத்துன்பத்தைப் போக்கும் பொதுமை அறம் ஒன்று வேண்டும் என்று கவிஞர் கனவு காண்கின்ருர். அவ்வெண்ணத்தின் படைப்புத்தான் எடுக்க எடுக்கக் குறையாத அமுதசுரபி என்னும் பாத்திரமாகும்.

அவள் வாழ்வு துறவுப் பாதையில் செல்கின்றது. உதயகுமரன்பால் தோன்றும் உறவும், அது மெல்ல மெல்ல நீங்கும் துறவும் மணிமேகலையின் வரலாருக அமைகின்றன. பளிக்கறையில் மறைந்துகொண்ட மணிமேகலையை இழித்துப் பேசிய உதயகுமரன் அவ்விடம் விட்டுஅகன்றபின் தோழியாகிய சுதமதியை நோக்கி,

" புதுவோன் பின்றைப் போனது என்நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத்தியற்கை
இதுவே யாயின் கெடுக அதன்திறம் "

என்று கூறி, அவள் தன் காதல் உள்ளத்தைக் கடிந்து நெஞ்சுறுதி பெறுகிறாள். தனி மனிதனிடம் தோன்றிய காதல் பல்லுயிரிடமும் பரவும் அருள் உள்ளமாக மாறிக், காணார், கேளார், கால்முடப்பட்டோர் முதலோர்க்கு உணவு ஊட்டும் உயரிய தொண்டில் ஈடுபடும் வாழ்வை இந்நூல் சித்திரிக்கிறது.

இளமையும், யாக்கையும், செல்வமும் நிலைபேறு அற்றவை என்ற கருத்தினை ஆங்காங்கு உணர்த்துதல் இந்நூலின் பல இடங்களிலும் காணப்படுகிறது. உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பையும், உயிரின் சிறப்பியல்பையும், உயிர்வடிவாக உள்ள உலக வாழ்வையும் சுட்டிக் காட்டிப் பொதுமை உணர்வோடு எல்லா உயிர்களுக்கும் தொண்டு செய்து அன்பு காட்டவேண்டும் என்ற அருஞ் செய்தியும் இதில் வற்புறுத்தப்படுகிறது.

மகனை இழந்த இராசமாதேவி அதே வருத்தத்தால் அல்லலுற்ற நிலையில், மணிமேகலை அறிவுறுத்தும் அறிவுரை இது :

" பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை
உடற்கழுதனையோ உயிர்க்கழுதனையோ
உடற்கழுதனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரோ
உயிர்க்கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும் '

என்று உயிர்களிடத்தில் பொதுமை காண வேண்டும் என்னும் அருளறத்தை உணர்த்தும் செய்தியைக் காண்கிறோம்.

"பசி ஒழிக" என்று காவியச் செய்தியை அமைத்துப் பொதுமை அறத்தை உணர்த்தும் நூலாக இஃது அமையக் காண்கிறோம்.

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

என்றும்,

'ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'

என்றும் பசித்தோர்க்கு உணவிட வேண்டிய பொதுமை அறத்தை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.

நாட்டின் அரசியல் நன்னிலையில் இருந்தால்தான் நானிலமும் நல்லோரும் வாழ முடியும் என்ற கருத்தை இந்நூல் வற்புறுத்தக் காண்கிறோம்.

'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றாம்'

என்ற அரிய செய்தியை உணர்த்துகிறது. மேலும்,

'கோன்நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்;
மாரி வறங்கூரில் மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதி இன்றாகும்'

என்று மன்னனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பையும், கோன் செங்கோல் கோடாமை இருத்தலின் அவசியத்தையும் வற்புறுத்துகிறது.

இவ்வாறு, இந்நூல், அருளறத்தையும், அரசியல் நன்மையையும், பசியில்லா நாட்டு வாழ்வையும் வற்புறுத்திச் செல்லும் அறநூலாக அமையக் காண்கிறோம்; மணிமேகலை சமயவாதிகளோடு பேசிச் சமயத் திறத்தை அறியும் பகுதிகளில் புத்த சமயத்தின் கோட்பாடுகள்

விரிவாகப் பேசப்படுகின்றன. சிலப்பதிகாரம் கண்ணகியின் கதைக்கு முதலிடம் கொடுக்கிறது; மணிமேகலை புத்த மதக் கருத்துகட்கும் அருளறத்திற்கும் தலைமை கொடுக்கிறது.

## கதைச்சுருக்கம்

கண்ணகியும் கோவலனும் மண்ணக வாழ்வை நீத்து விண்ணுலகை அடைந்தபின் மாதவி மணிமேகலையை அருந்தவப்படுத்தும் நெறியில் ஆற்றுகின்றாள். உவவனத்தில் தன்தோழியான சுதமதியோடு மலர்கொய்யச் சென்ற போது, உதயகுமரன் அவளைச் சந்திக்கிறான்; அவன் தன் காதலை வெளிப்படுத்துகின்றான். அந்நிலையில் மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவம் என்ற தீவிற்கு எடுத்துச் சென்று புத்த பீடிகையைக் காட்ட அதனை அவள் வணங்கி முற்பிறப்பின் செய்தியை உணர்கிறாள். அத்தீவில் கோமுகி என்னும் நீர்நிலையில் அமுதசுரபி என்னும் பாத்திரம் அவள் கைக்கு வருகிறது. மீண்டும் மணிமேகலா தெய்வம் அவளை வான்வழிக் கொண்டு செலுத்த அவள் காவிரிப்பூம்பட்டினத்தை அடைகிறாள். அங்கு உலகவறவி என்னும் பொதுஇடத்தில் அமுதசுரபியால் பசித்தோர்க்கு உணவு அளித்து வருகிறாள்.

அவளிடம் நெருங்கிக் காதல் பூண்ட உதயகுமரன் வித்தியாதரனின் கை வாளால் வெட்டுண்டு இறக்கிறான். காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையை வித்தியாதரன் தன் மனைவியெனக் கொண்டு அவளிடம் உரையாடிய காரணத்தால் அவன் உதயகுமரனைக் கொல்லுகிறான்.

மகனை இழந்த இராசமாதேவி மணிமேகலையைத் துன்புறுத்துகிறாள். அவள் தன் தவ ஆற்றலாலும் தான் பெற்ற மந்திர வலிவாலும் அவற்றை எதிர்த்து வென்று

விடுகிறாள். அரசமாதேவிக்கு அறிவுரைகள் கூறி அந்த இடத்தை விட்டு அகலுகிறாள்.

அமுதசுரபியை முற்பிறவியில் பெற்றிருந்த ஆபுத்திரன், இப்பொழுது, புண்ணியராசனாகி ஆட்சி செய்கிறான் என்ற செய்தியை அறவணவடிகள்பால் அறிகிறாள். அறவணவடிகள் அவ்வப்பொழுது அறவுரைகள் அறிவிக்கின்றார். அறவணவடிகளின் கட்டளைப் படியே அவள் புண்ணியராசனைச் சந்தித்து அவனுக்கு அவன் முற்பிறவியை உணர்த்துகிறாள். பிறகு சேரநாட்டிற்குச் செல்கிறாள். வஞ்சிமா நகரில் கண்ணகியின் கோயிலை வலம் வந்து வணங்குகிறாள். பல சமயவாதிகளிடம் அவரவர் சமயத்திறங்களைக் கேட்டு அறிகின்றாள். காஞ்சி நகரில் இறுதியில் அறவணவடிகளைக் கண்டு பௌத்த தரும நெறிகளைக் கேட்டுப் பிறப்பு அறுக என நோற்றுத் துறவின் பயனை அடைகின்றாள். இதுவே மணிமேகலை வரலாற்றின் சுருக்கமாகும்.

# 4. பல்லவர் காலத்துச் சமய நூல்கள்

களப்பிரர் ஆட்சி கி. பி. ஆறும் நூற்றாண்டில் வலி குன்ற அவர்க்குக் கீழ்ப்படிந்திருந்த பாண்டியர், அவருடன் போர் செய்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர். அதே காலத்தில் பல்லவர் தமிழ் நாட்டில் புகுந்து முதலில் தொண்டை மண்டலத்தையும் பிறகு சோழ மண்டலத்தை யும் கைப்பற்றினர். பல்லவர் ஆட்சியில், கலைவளம் மிகுந்து, ஓவியம், இசை, சிற்பம் முதலியன சிறப் பெய்தியமை குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகார மணிமேகலை காலம்வரை, சமணமும் பௌத்தமும் தலையெடுத்து வளர்ந்தன. பல்லவர்கள் காலத்தில் சைவமும் வைணவமும் எழுச்சி பெற்று மக்கள் வாழ்வில் ஒரு புது விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. சமண சமய ஆதிக்கம் மெல்லக் குறைய ஆரம்பித்தது. மன்னரும் மக்களும் சைவத்தையும் வைணவத்தையும் ஆதரித்துப் பின்பற்றினர். கவிமரபில் ஒரு புதிய நிலை ஏற்பட்டது; மன்னரையும் மக்களையும் பாடும் மரபு மறைய இறைவனையே பாடும் உயர்நிலை ஏற்பட்டது; இச்சமய எழுச்சிக்கும் இலக்கிய விழிப்புக்கும் காரணமாக விளங் கிய தலைவர்கள் நாயன்மார் எனவும், ஆழ்வார்கள் எனவும் பாராட்டப்பெற்றனர். சிறப்பாக, ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் பல்லவ மன்னன் மகேந்திர வர்மனையும், அதே காலத்தில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனை

யும் சைவர்கள் ஆக்கினர். இக்காலத்தில் எழுந்த சைவப் பாடல்களும், வைணவப் பாடல்களும் பதிகங்கள் எனப் பட்டன. ஒரே சந்தத்தில் பத்துப் பத்துப் பாடல்கள் பாடப்பட்டன; சில சமயங்களில் பதினொரு பாடல்களும் அமைதலும் உண்டு. இவ்வாறு வருவனவற்றைப் பதிகம் என்றனர்.

சங்ககாலப் பாடல்கள் செறிவும், இறுக்கமும் கொண்டு புலவர்களின் தனி உடைமையாக விளங்கின. அந்த நிலைமை மாறி மக்களின் மனத்தைக் கவரத்தக்க வகையில் நெகிழ்வான நடையும், எளிய சொற்களும் கொண்டு அக்காலப் பேச்சுமொழியோடு இயைந்து இவை ஒழுகின. மேலும், அகப்பொருள் துறைகளும், சிறு பிரபந்த நெறிகளான பிள்ளைத் தமிழ், தூது போன்ற துறைகளும், நாட்டுப்பாடல் முறைகளும் இவற்றில் இடம் பெற்றன.

எளிய தமிழில், இசையையும் கூட்டி அருட்பாடல் களால் இறைவனின் அருட்செயல்களை அழகு படுத்திப் பாடினர். வட மொழிக் கதைகளும் வேதக் கருத்துக்களும் சைவப் பாடல்களிலும், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களின் கதை நிகழ்ச்சிகள் வைணவப் பாடல் களிலும் இடம் பெற்றன. இவர்கள் பாடிய பக்திப் பாடல் களும், சந்த வகைகளும் பிற்காலத்து எழுந்த சிந்தாமணி, பெரியபுராணம், கம்ப இராமாயணம் முதலிய நூல்களின் விருத்தப்பாடல்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன. அறிவும் அறமும் பேசிவந்த சங்க காலப் போக்கு மறைந்து, கதையும் ஞானமும் ஊட்டும் வகையில் மக்கள் நல்லுணர்ச்சிகளை எழுப்பிச் சமுதாயப் பொது உணர்வை உண்டாக்கின. கோயில் வழிபாடும், அடியவர் தொண்டும் மக்கள் வாழ்வில் இடம் பெற்றன. இசையும், ஞானமும், தமிழும், தொண்டும் இயைந்து, ஒரு புதிய இலக்கிய மரபை ஏற்படுத்திவிட்டன.

ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். **திருநாவுக்கரசர்** சமண சமயத் தலைவராக விளங்கித் தருமசேனர் என்ற பட்டப்பெயரையும் தாங்கிச் சமய ஆராய்ச்சிகள் நடத்தித் தலைமை பெற்று வாழ்ந்தார். இவர் இளமைப் பெயர் மருணீக்கியார் என்பது. பின்பு, தம் தமக்கையார் திலகவதியாரின் அரிய முயற்சியாலும், திருவருளின் துணையாலும் சைவ நெறியில் ஆழ்த்தப்பட்டார். தொண்டும், தூய உள்ளமும் கொண்டு, பதிகள்தொறுஞ் சென்று பதிகங்கள் பாடி, இசைத் தமிழால் இறையுணர்வைப் பெருக்கிக் கோயில் வழிபாட்டு நெறியைப் புதுக்கினர். நெஞ்சுறுதியும் நிலையான தொண்டும் இவர் வாழ்வின் அடிப்படை. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று வீறுகொண்டு பாடியவர்.

> **'மாசில் வீணையும் மாலை மதியமும்**
> **வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
> **மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
> **ஈசன் எந்தை இணையடி நீழலே'**

என்று இறையின்பத்தை எழில் பெறப் பாடியவர் இவர். இவர் சொல்லின் செல்வராக விளங்கிய காரணத்தால் நாவுக்கரசர் என்று சிறப்பிக்கப்பெற்றார். இவர் பாடிய பாடல்களுள் 3110 பாடல்களே இப்பொழுது கிடைத்துள்ளன.

**திருஞானசம்பந்தர்** இறைக் காட்சியையும் இயற்கையழகினையும் இயைத்து இசைப்பாடல்களால் ஞான ஒளியை ஊட்டினர். உள்ளம் உவந்தபோதெல்லாம் உவந்து உவந்து பாடினர். துள்ளும் இளமை இவர் பாடல்களில் நடம் புரிந்தது. இவர் முதன் முதலில் இறைவனை விளித்துப் பாடிய பாடல்களில் இவர் கண்ட இறைக் காட்சியை அப்படியே காட்டுகின்றார் :

தோடு டையசெவி யன்விடை
யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி
பூசியென் னுள்ளங் கவர்கள்வன்

ஞான சம்பந்தரின் இயற்கை வருணனைக்கு எடுத்துக் காட்டாக இவ்வரிகளைக் காட்டலாம்:

வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே

நாவுக்கரசர் தொண்டராக நின்று இறைவனை வழிபட்டவர். ஞானசம்பந்தர் பிள்ளைமை உறவு கொண்டு தந்தைபால் கொண்ட அன்பாக வழிபட்டவர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை இவரைச் சாரும். இவர் பாடிய பாடல்களுள் 3840 பாடல்கள் கிடைத்துள்ளன.

ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த **சுந்தரர்,** இறைவனைத் தோழராகக்கொண்டு வழிபட்டவர்; இவர் பாடல்கள் இறைவனையும் அடியார்களையும் வழிபடும் சிறப்பினை எடுத்து நுவல்கின்றன. இவர் **திருத்தொண்டத் தொகை** என்னும் திருப்பதிகத்தை இறுதியில் பாடி அடியவர்களின் திருப்பெயரையும் சிறப்புக் குறிப்புக்களையும் கூறி, 'அவர்களுக்கு அடியேன் யான்' என்று கூறியருளியுள்ளார். திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாருக்கு வழிகாட்டியாக இப்பதிகம் அமைந்துள்ளது; இவர் கூறும் வரிசையே பெரிய புராண வரலாற்று வரிசையாக அமைகிறது.

இவர் பாடிய பாடல்களுள் 1000 பாடல்கள் கிடைத்துள்ளன. இம் மூவர் பாடிய பதிகங்களுக்குத் தேவாரம் என்றும், மாணிக்க வாசகர் பாடிய பாடற் றொகுதிக்குத் திருவாசகம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் **மாணிக்கவாசகர்.** திருவாதவூரிற் பிறந்து வாதவூரர் என்ற பெயர் வழங்கப்பெற்று வரகுண பாண்டியனிடம் அமைச்ச ராக விளங்கி இறைவனை வழிபட்டவர். இறைவனைக் குரு வடிவாகக் கொண்டு தில்லைச்சிதம்பரம், திருக்கழுக் குன்றம் முதலிய தலங்கட்குச் சென்று வழிபட்டவர். திருப்பெருந்துறையில் இறைக் காட்சியைக் கண்டு மீண்டும் அதே சிந்தனையால் மனமுருகப் பாடியவர். 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற சொல்லுக்கு இணங்கக் கல்நெஞ்சும் கரையும் கனிவு மிக்க பாடல்களைப் பாடியவர். ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கக்கூடிய பாடல்கள் இவை.

இறைவன் பெருமையை உணர்த்தும் வகையில் சிவ புராணம். சீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலிய பகுதிகள் அமைந்துள்ளன. இவை நேரிடையாக இறைவனை விளித்துப் பாடுவனவாகும். இவ்வாறே யன்றி நாட்டுப்பாடல் முறையில் குயிலையும், தும்பியையும் விளித்து, இறைவன் பெருமையைப் பேசியும், பெண்களின் விளையாட்டில் இறைவனைப் பாடியும் நாட்டுப்பாடல் முறைகளைப் புகுத்தியிருப்பது மற்றொரு வகை. அவை திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி முதலியன. மேலும், ஐங்குறு நூற்றுப் பாடலைப்போலப் பத்து என்ற தலைப்பில் சில பகுதிகள் அமைந்துள்ளன. அவை அன்னைப்பத்து, குயிற்பத்து அடைக்கலப்பத்து முதலியன. நெஞ்சுருகப் பாடும் நேரிடையான உணர்வுப்பாடல்களும், தத்துவக் கருத்துக் களும், நாட்டுப்பாடல் முறையில் அமைந்த இசைப் பாடல் களும் திருவாசகத்தின் வாசகங்களாம்.

திருவாசகத்தில் உள்ளம் பறிகொடுத்த இராமலிங்க அடிகள் திருவாசகத்தின் இனிமையைக் கனிவு தரும் பாடலால் பாராட்டுகின்றார்:

‘வான்கலந்த மாணிக்க வாசக! நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே’

இத்திருவாசகத்தை ஜி.யூ. போப், ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மாணிக்க வாசகர், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் அகப் பொருட்டுறைகள் கொண்ட கோவை நூல் ஒன்றும் பாடி யுள்ளார்.

பிற்காலத்தில்,சோழர் காலத்து வந்த **நம்பியாண்டார் நம்பி** என்பார் தேவாரப் பாடல்களைத் தேடித் தொகுத் துத் திருமுறைகள் என்று வகைப்படுத்தினர் என்பர். திருநாவுக்கரசர் பதிகங்கள், முதல் மூன்று திருமுறை களாம்; ஞானசம்பந்தர் பாடியவை அடுத்த மூன்றும்; சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறையாகும்.

## ஆழ்வார்கள்

வைணவர்களுள் முதலாழ்வார்கள் என்று குறிப்பிடப் படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்பவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள்;பல்லவர் காலத் துக்கும் முந்தியவர்கள். அவர்கள் பாடிய பாடல்கள் அந்தாதி முறையைக் கொண்டு அமைந்தவையாகலான் **திருவந்தாதிகள்** எனப்பட்டன. மூன்று அந்தாதிகளும் சேர்ந்து முந்நூறு பாடல்கள் கொண்டவை.

**பொய்கையார்** பாடியது முதல் திருவந்தாதி எனப் படும். அவர் சொல்மாலையைத் திருமாலுக்கு ஊட்டும் சிறப்புஅவர் பாடிய அந்தாதியின் முதற்பாடல் விளக்கு கிறது.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று—

அதனைத் தொடர்ந்து அதே கருத்தையும் அமைப்பையும் தழுவி **பூதத்தாழ்வார்** தம் இரண்டாவது திருவந்தாதியில் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன்; நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

இவ்வாறே **பேயாழ்வார்** முதற்பாட்டாக பக்தியுணர்வு தோன்ற அழகிய பாடலோடு தொடங்குகின்றார்.

திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்க னணிநிற மூங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்; புரிசங்கங் கைக்கண்டேன்;
என்னாழி வண்ணன்பா லின்று

**திருமிழிசையாழ்வார்** தம் பக்திச் சிறப்பால் இவர் பக்தி சாகரர் எனப்பட்டார். இவர் பாடிய பாடல்கள், **திருச்சந்த விருத்தமும், நான்முகன் திருவந்தாதியும்.** திருச்சந்த விருத்தம் நல்ல மிடுக்கான நடையும் எடுப்பான சந்தமும் பெற்று விளங்குவது விறுவிறுப்பாகப் பாடல்கள் இசைந்து செல்கின்றன. இவை, தத்துவக் கருத்துக்கள் மிகுதியாகக் கொண்டு புதிர் போடுவது போன்ற அமைப்பையுடைய பாடல்கள் ஒரு சில பெற்றுள்ளன. தத்துவக் கருத்துக்கள் அமைந்த பாடல்களுள் ஒன்று பின் வருமாறு :

பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார்நினைக்கவல்லரே

இவர் பாடிய மற்ருெரு நூலுக்கு நான்முகன் திருவந்தாதி எனப் பெயர் வழங்குகிறது. 'நான்முகன்' என்ற சொல்லோடு இதன் முதற்பாடல் தொடங்குகிறது. நாரணனே ஈசனினும் நான்முகனினும் உயர்ந்தவர் என்ற கொள்கையை இவர் பாடல்களில் வற்புறுத்துகின்ருர்.

**தொண்டரடிப்பொடியாழ்வார்** பாடிய பாடல்கள் **'திருமாலை', 'திருப்பள்ளி எழுச்சி'** என்பன. திருமாலை என்பது திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள திருமாலைப் பாடும் பாமாலையாகிய திருமாலையாக விளங்குகிறது. அரங்கநாதர் பள்ளிப் பாயலையும், அவர் துயிலும் நிலையையும் நினைத்து உருகும் பாடல்கள் பல இதில் உள்ளன. அவற்றுள் ஒன்று பின் வருமாறு :

**கங்கையின் புனிதமாய காவிரி நடுவுபாட்டுப்**
**பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழில் அரங்கந்தன்னுள்**
**எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை**
**கண்டும்**
**எங்கனம் மறந்து வாழ்வேன்? ஏழையேன் ஏழையேனே**

திருப்பள்ளி எழுச்சியில், காலைக் கதிரவன் தோற்றமும், புலர்விடியலில் இயற்கைக் காட்சியும் வருணிக்கப்படுகின்றன.

**'கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்**
**கனையிருளகன்றது காலையம் பொழுதாய்**
**மது விரிந்'தொழுகின மாமல ரெல்லாம்**

என்று காலைக்காட்சி வருணிக்கப்படுகிறது. இவர் அரங்கநாதரிடத்துப் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

**திருப்பாணாழ்வார்** பாடியது பத்துப் பாடல்கள் கொண்ட ஒரே பதிகம் எனினும், அது திருவடி முதல் தலைமுடிவரை வருணிக்கும் வருணனைப் பாடலாக அமைந்

துள்ளது. திருமாலின் திருமேனியழகு கால்முதல் முடி வரை பாராட்டப்படுகிறது.

'கமலபாதம் வந்துஎன் கண்ணினுள்ளன ஒக்கின்றதே' 'சிவந்த ஆடையின் மேற்சென்றதாம் என் சிந்தனையே', 'உந்திமேல தன்றோ அடியேன் உள்ளத்தின் உயிரே' என்பன முதலாகத் தொடங்கி 'நீலமேனி, ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே' என்று வருணனை முடிகிறது. பிறகு இறுதிப் பாடலில், கண்ணனின் காட்சியைக் கண்களில் முழுமையாகக் கண்டு உள்ளம் உருகப் பாடுகின்றார். அப்பாடல் பின் வருமாறு :

**கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை**
**அண்டர்கோன் அணியரங்கன் என்ன முதினைக்**
**கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே**

**திருமங்கையாழ்வார்** கள்வர் மரபில் பிறந்து கோயிற்பணிகளையும் அடியவர் பணிகளையும் மேற்கொண்ட சிற்றரசராவர். இவருடைய பாடல்களுள் **பெரிய திருமொழி** கோயில்களின் வருணனைகளைக் கொண்டு அமைந்தவை. **பெரிய திருமடல், சிறிய திருமடல்** என்பவை அகப்பொருட்டுறைகள் அமைந்தவை. இவையன்றித் **திருவெழுகூற்றிருக்கை, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம்** என்னும் பாடல்களைப் பாடியுள்ளார்.

நாயகி பாவத்தோடு இறைவனை நினைந்து பாடும் **சிறிய திருமடலின்** பாடல்கள் உணர்ச்சி மிக்கவையாக விளங்குகின்றன.

காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்ததுதான்—வல்வினையேன்
ஊராருகப்பதே யாயினேன்—மற்றெனக்கு இங்கு
ஆராய்வாரில்லை அழல்வாய் மெழுகுபோல்

நீராய் உருகும் என்னுவி—நெடுங்கண்கள்
ஊரா ருறங்கிலும் தானுறங்கா உத்தமன்தான்
பேரா யினவே பிதற்றுவன்

**பெரியாழ்வார்** ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றி இறைவனுக்குப் பாமாலையும் பூமாலையும் புனைந்து வழிபட்டவர். இவர் பாடிய பாடல்களைப் **பெரியாழ்வார் திருமொழி** என்பர். கண்ணனின் திருவிளையாடல்களில் ஈடுபாடு கொண்டு அவற்றைச் சிறப்பித்துப் பாடியவர். சிறப்பாக இவர் பாடல்கள் பிள்ளைத் தமிழ்முறையில் பாடப்பெற்றுள்ளன. பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கட்கு இவை வழிகாட்டியாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று பின் வருமாறு :—

மாணிக்கம்கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னுல் செய்த வண்ணச்சிறுத் தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே ! தாலேலோ—
வையமளந்தவனே ! தாலேலோ.

இறைவனையே வாழ்த்தும் பல்லாண்டுப் பாடற் பதிகம் ஒன்றும் இவர் பாடியுள்ளார்.

**ஆண்டாள்**

' அன்னவயல் புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை; பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு '—

என்ற தனிப்பாடல் அவள் பாடிக் கொடுத்தமையையும் சூடிக் கொடுத்தமையையும் பாராட்டும். சூடிக் கொடுத்த சுடர் கொடியாக விளங்கிய இவர் பெரியாழ்வாரின் மகள் என்று கூறப்படுகிறது. இறைவனுக்கு என அமைத்த பூமாலையைத் தாம் அணிந்து அழகு பார்த்தே இறைவனுக்குச் சூட்ட அனுப்பவார் என்று

கூறுவர். இவர் பாடியன **திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி** என்பன.

திருப்பாவை முப்பது பாடல்கள் கொண்டவை; மார்கழிமாதம் வைணவர்கள் தினம் ஒன்று பாடி இறைவனை வழிபடுவர். கண்ணனிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட பாடல்கள் இவை. பாவை நோன்பு என்ற விரதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை இவை. இவையன்றி ஏனைய பாடல்கள் நாய்ச்சியார் திருமொழி எனப்படும். கண்ணனை மணக்கும் கனவுக் காட்சி சில பாடல்களாக உருக்கொள்கின்றன.

**மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்!**

கண்ணனின் அழகிலும் காதலிலும் விருப்புறும் நிலையில் பாடும் பாடல்கள் பல உள்ளன. அவற்றில் அவள் உண்மைப் பெண்மை கவிதையில் வெளிப்படுகிறது. உணர்ச்சிமிக்க காதற் பாடல்களாக அவை விளங்குகின்றன. அவனோடு தொடர்புகொண்ட வெண்சங்கை விளித்துப் பாடும் பாடல் கண்ணனின் வாய்ச் சுவையை அறிய விரும்பும் சுவைமிக்க பாடலாகும்.

**கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ ?**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்திருக்குமோ ?**
**மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே**

**குலசேகரர்** சேரநாட்டு மன்னர். இவர் பாடிய திருமொழி **பெருமாள் திருமொழி** எனப்படும். இராமாவதாரமே இவர் போற்றியமைத்த உட்பொருள். இராமனைக் குழந்தையாகக் கற்பித்துப் பிள்ளைத் தமிழ்ப் பாடல் பாடியுள்ளார். இராமாயணக் கதை நிகழ்ச்சிகளைச் சுருக்க

மாகக் கூறி இராமனின் புகழைப் பலபடியாகப் பாடியுள் ளார். திருவேங்கட மலையில் ஆராக்காதலும் அங்கே பிறக்க வேண்டும் என்ற விழைவும் அவர் பாடல்களில் காணப்படுகின்றன.

**ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ**
**வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்**
**தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்**
**மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.**

**நம்மாழ்வார்** பிறந்தது முதல் ஞானம் பெற்று நான்கு வேதங்களின் பொருளையும் தமிழில் அமைத்தவர். இவர் பாடியன **திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி** என்பன. திருமாலுக்கு மிகவும் ஏற்றவர் என்ற கருத்தில் நம்மாழ்வார் என்ற பெயர் அமைந்தது என்பர். இவரை, 'மாறன்' 'சடகோபன்' என்ற பெயர்களால் அழைப்பர். இவர் எழுதிய நான்கு நூல்களுள்ளும் திருவாய்மொழி மிகச் சிறந்தது. இவர் மிக உயர்ந்தவராகவும் ஞானம் முதிர்ந்தவராகவும் பொதுமைக் கொள்கை உணர்த்து பவராகவும் காணப்படுகிறார். இறையின்ப உணர்வும், காதற் றுறையில் அமைந்த பக்தியுணர்வும் இவர் பாடல் களின் அடிப்படையாம். கடவுட்டன்மையைப் பொது நோக்கோடு பலபட விரித்துரைப்பன இவர் பாடல்கள். அவற்றுள் ஒன்று பின்வருமாறு:

**உயர்வற உயர்நலம் உடையவன் எவன்அவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் எவன்அவன்**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்அவன்**
**துயர்அறு சுடரடி தொழுதெழு என்மனனே**

**மதுரகவியாழ்வார் :** நம்மாழ்வாரின் சிறப்பைப் பாடும் பாடல்களே இவர் பாடியவை. அவற்றுள் சில வரிகள் இவை :

'நண்ணித் தென்குருகூர் நம்பி யென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே'
'குருகூர்நம்பி பாவின்னிசை பாடித்
திரிவேனே'

என அவர் புகழ் அமையப் பாடும் பாடல்கள் இவர் பாடியவை.

இவ்வாழ்வார்கள் பாடிய பாடல்கள் பலவற்றிற்குத் திருமொழி என்று வழங்குவது குறிப்பிடத்தக்கது. திருமங்யையாழ்வார் பாடிய நூல் பெரிய திருமொழி எனவும், பெரியாழ்வார் பாடியவை பெரியாழ்வார் திருமொழி யெனவும், ஆண்டாள் பாடியது நாய்ச்சியார் திருமொழி எனவும், குலசேகரர் பாடியது பெருமாள் திருமொழி எனவும், நம்மாழ்வார் பாடியது திருவாய் மொழி எனவும் கூறப்பட்டுள்ளன. வேங்கடமும் திருவரங்கமும் ஆழ்வார்களால் பெரிதும் சிறப்பிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நம்பியாண்டார் நம்பி என்பார், சோழர் காலத்தில் தேவாரப் பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுத்தார் என்பர். அவ்வாறே **நாதமுனி** என்பார் அதே காலத்தில் இத்தெய்வப் பாடல்களைத் தேடித் தொகுத்து **நாலாயிர திவ்விய பிரபந்தம்** என அமைத்துக் கொடுத்தார். இவ்விருவரும் இவற்றைத் தேடித் தொகுத்திராவிட்டால் அவற்றுள் பல மறைந்திருக்கும்.

இப்பல்லவர் காலமாகிய சமயப் பாடல்கள் எழுந்த காலம் கி. பி. 600 முதல் 900 வரை என்று கருதப்படுகிறது.

# 5. சோழர் காலமும் காவிய வளர்ச்சியும்

சோழர் காலத்து நூல்கள் சமயச் சார்பும் உலக வாழ்வும் சேர்ந்த ஒரு முழுமை நிலையைப் பெற்றுவிட்டன. சமயத்தைப் பின்னணியாகக் கொண்டு வாழ்வை விளக்கும் காவிய அமைப்பு வளரத் தொடங்கியது. ஐம்பெருங் காவியங்களுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், சங்க மருவிய காலத்தைச் சார்ந்தவை; ஏனைய சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய மூன்று காவியங்களும் இச் சோழர் காலத்திலேயே தோன்றின. வடமொழிக் கதையாகிய இராமகாதையைத் தமிழில் கம்பர் புனைந்து இயற்றியதும் இக்காலமே. இது பழைய வீரவரலாற்றைச் சொல்லுகின்றது என்ற குறிப்பில் இதிகாசம் எனப்படினும் அமைப்புக் காவிய அமைப்பையே பெற்று விளங்குகிறது; திருத்தொண்டர் வரலாறு கூறும் பெரிய புராணமும் காவிய அமைப்பையே பெற்று விளங்குகிறது. ஐந்து காவியங்கள் என ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டாலும் ஏனைய இந்நூல்களும் காவியங்களாகக் கொள்ளத் தக்கனவாம்.

சோழர் காலத்தைக் காவிய காலம் என்று கூறலாம். சோழர் காலத்து ஆட்சியில், மக்கள் பண்பாடும் ஆட்சி மேம்பாடும் சிறந்து விளங்கின. சமயம் மக்களின் வாழ்வில் ஒரு கூறுகவே இருந்தது; சமயத்தைப் பின்னணியாகக் கொண்டு வாழ்வு பல்வகையானும் பொலிவு பெற்று விளங்கியது.

இக்காலத்தில், வடமொழிக் காவியமும், கதை நிகழ்ச்சிகளும் புலவர்களின் கற்பனையைக் கவர்ந்தன; மக்களும் பழங்கதையில் ஆர்வம் காட்டினர். சமயப்பற்றின் காரணமாகவும், காவியப் படைப்பில் வரும் மாந்தர்களின் ஆற்றல்மிக்க செயல்களாலும் அரிய பண்புகளாலும் அக்கதைகள் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றன; புலவர்களின் கற்பனையில் கவிதைகளாக உருவெடுத்துக் காவியமாகப் பரந்து நிலவின.

**சிந்தாமணியைப்** படைத்த திருத்தக்கதேவர் வாழ்க்கையில் திருத்தமான கொள்கை உடையவர். மாசுமறுவற்ற துறவியாக வாழ்ந்தவர் எனத் தெரிகிறது; வாழ்வின் நிலையாமையை நன்கு உணர்ந்தவர். மணமற்ற அவர் வாழ்வில் சமணம் இடம் பெற்றது; அதுவே அவர் காவியத்தில் மணக்கும் நெறியாகவும் திகழ்கிறது. காவியத் தலைவனான சீவகன் எட்டுமணம் செய்தும் வாழ்வின் நிலையாமையைக் கண்டு அவ்வாழ்வை வெறுத்து ஒதுக்கி விட்டதால்தான் அமைதியும் வீட்டு நெறியும் கண்டான் என்று பேசப்படுகிறது. கன்னியர் எண்மரைக் காதல் மணம் புரிந்தான்; அதன் காரணமாக எதிர்த்த மன்னர்கள் பலரைப் புறமுதுகிடும்படிப் போரில் வென்றான். காதலும், வீரமும் காவிய உணர்வுகளாகப் பொருந்தத் தீவினை தோற்றலும் அறம் வெல்லலும் கதையின் முடிவாக அமைகிறது. சூழ்ச்சியில் மிக்க கட்டியங்காரன் இறுதியில் தோற்க நன்மை வெல்லும் காட்சியை அமைக்கக் காண்கிறோம்.

இத்தகைய போராட்டக் கதையை அமைத்ததோடு மட்டுமல்லாமல் இடையிடையே சமணசமயக் கருத்துக்களை ஏற்ற இடத்தில் புகுத்திக் கலையைச் சமயக் கருத்துகட்குக் கருவியும் ஆக்குகின்றார். நுட்பக் கருத்துக்களையும்

பெண்களாக உருவகித்துக் காட்டும் சிறப்பியல்பு இவரிடம் காணப்படுகிறது. முத்தியும் ஒருமகளாக அவருக்குக் காட்சி அளிக்கிறது. முத்திநிலை யடைந்த செய்தியைக் கூறும்பொழுது, அவன் 'கேவலமடந்தையைப் புல்லி இன்பக் கடலுள் மூழ்கி'யதாகக் கூறப்படுகிறது. கலை நாமகளாகவும், நிலம் மண்மகளாகவும் அத்துறவியின் கவியுள்ளத்தில் உருவகமாக அமைகின்றன. வாழ்வில் பெண்மையின் மென்மையை நுகர அஞ்சிய அப்பாவலர் காவிய உலகில் பெண்மையிலேயே திளைப்பவராகக் காட்சியளிக்கிறார். வாழ்வில் அடக்கிய உணர்வுகள் கவிதையில் புதிய வேகத்தோடு வெளிப்பட்டு இசை நலங் கனிந்த சுவைமிக்க சொல்லோவியங்களாகக் காட்சி யளிக்கின்றன. இச் சொல்லோவியங்கள் விருத்தப்பாவின் இனங்களாகப் புதிய புதிய ஓசை நலமும் சந்தமும் விளைவித்து இசைநலம் மிக்க இன்கவிதைகள் ஆயின. வருங் காலக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த இக் காவியம் தமிழ்க் கவிதை யமைப்பில் ஒரு திருப்புநிலை எனலாம்; தேவார திவ்விய பிரபந்தங்களின் விருத்தப் பாடல்களைப் புதிய உருவங்களாகப் படைத்துப் புதிய வடிவங்களை அமைத்தார். இவை சேக்கிழாருக்கும் கம்பருக்கும் முன் விளக்கமாக அமைந்தன.

மக்கள் உள்ளத்தில் காதற்சுவை நிரம்பிய இக் காவியம் நிறையிடம் பெற்றது. வளையாபதி, குண்டல கேசி என்னும் காவியங்கள் இப்பொழுது கிடைத்தில. இவற்றின் ஒரு சில பாடல்கள் புறத்திரட்டிலும் பிற உரை மேற்கோள்களிலும் கிடைக்கின்றன; வளையாபதி, சமணச் சார்பைச் சார்ந்தது என்றும் குண்டலகேசி பௌத்தச் சார்புடைய நூல் என்றும் தெரிகிறது. இவ் ஐம்பெருங் காவியங்களே யன்றி வேறு சில நூல்களை **ஐஞ்சிறு காப்பியம்** என்பர். அவை சூளாமணி, யசோதர காவியம், உதயண குமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம்

என்பனவாம். சூளாமணி, சைனக் காவியமாகும்; தோலா மொழித்தேவர் இயற்றியது. நீலகேசி என்னும் நூல் குண்டலகேசி என்னும் புத்தகாவியத்திற்கு மறுப்பு நூலாக எழுந்த சைனக் காவியமாகும். உதயணன் கதையைக் கூறுவது உதயணகுமார காவியம். யசோதர காவியம் என்பதும் சைன நூலாகும். இது உயிர்க் கொலே யின் தீமையைப் பற்றியும் ஒழுக்க உயர்வைப் பற்றியும் எளியநடையில் எழுதப்பெற்றுள்ளது; நாககுமார காவியம் பெயரளவில் பேசப்படுகிறதே தவிர வேறு செய்தி ஒன்றும் இதைப்பற்றிக் கிடைக்கவில்லே.

தன்னிகரில்லாத் தலேவனேக் காவியத் தலேவனுகப் பெற்று அவனுடைய நாடு, நகர், பிறப்பு, வளர்ப்பு, திருமணம், போர்ச் செயல்கள், அரிய நிகழ்ச்சிகள் அனைத் தும் பெற்று இயற்கை வருணனேகள் அமையப் பாடி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களே உணர்த்துவது பெருங்காப்பியம் என்பர்; இந் நால்வகைப் பொருள்களுள் ஏதேனும் குறைந்து வருவது சிறுகாப்பியம் என்று இலக்கணம் கூறுவர்.

இத்தகைய காப்பியங்களே யன்றி இவ்வமைப்புகளே யுடைய வேறு சில நூல்களும் தோன்றின. அவற்றைப் புராணங்கள் என்று வழங்கினர்; பெரியபுராணம் கந்த புராணம் முதலியன காவிய அமைப்பைப் பெற்று விளங்கு கின்றன.

காதற்சுவை நிரம்பிய நூல் சிந்தாமணி யென்றல் அச் சுவையைக் குறைத்து மக்களேப் பண்பாடு உடையவர் களாகவும், அருள் உள்ளம் கொள்பவர்களாகவும் மாற்றும் வகையில் **பெரியபுராணம்** தோன்றியது எனலாம். சுந்தர மூர்த்தி நாயனர் பாடிய திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந் தாதியும் சேக்கிழாருக்கு முதல் நூல்களாக விளங்கின.

சைவப்பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தனித் தனிக் கதையமைப்பில் அவர்கள் குறிக்கோள்களை விளக்கும் வகையில் அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வரலாறுகளாக அமைத்துள்ளார். அதனால் இதற்கு அவர் வைத்த பெயர் திருத்தொண்டர்புராணம் என்பது.

ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் நாட்டு வருணனையும் நகர வருணனையும் அமைத்து, அவர்கள் பொதுவான வாழ்க்கையில் தொடங்கி, அவர்கள் சிவ நெறித் தொண்டினையும் குறிப்பிட்டு, அதன் காரணமாக ஏற்படும் மனப் போராட்டங்களையும் வெளிப் போராட்டங்களையும் காட்டி, அவர்கள் கொண்ட உயர்ந்த குறிக்கோள்களுக்காக அவர்கள் வாழ்ந்து இறையருள் பெற்றமையைத் தீட்டுவது இந்நூலில் காணலாம்.

தேவாரப் பாடல்களில் ஈடுபட்ட இக்கவிஞர் இனிய எளிய தமிழில் பண்பாடு மிக்க வருணனைகளை அமைத்திருப்பது போற்றத்தக்கதாகும். இடையிடையே தேவாரச் சொற்றொடர்களையும் பாடல் அடிகளையும் அமைத்துப் பாடுதல் உண்டு. தேவைக்கு மேற்பட்ட வருணனைகள் அவர் பாடல்களில் காண்பதரிது. கொலைக் கொடுமையைச் சித்திரிக்கும் இடங்களிலும், காதற் காட்சிகளைச் சித்திரிக்கும் இடங்களிலும் சொற்களை அளவாகவே பயன்படுத்துவர்; பண்பாடு மிக்க சொற்களைப் பயன்படுத்துவர். எளிய நடையும், தெளிவான ஓட்டமும், தூய சொற்களும் இவர் பாடல்களின் போக்கு எனலாம். தேவாரப் பாடல்களின் பண்கனிந்த நலம் இவர் பாக்களில் அமைய இனிய ஓசையோடு இயங்குகின்றன. இந்நூலின் மற்றொரு சிறப்பியல்பு வடநாட்டுக் கதைகளையோ நூல்களையோ தழுவாமல் உண்மை வரலாறுகளைப் புனைந்து அழகுபட அமைத்திருப்பதாகும். மேலும் இவர் வருணிக்கும் நாட்டு நகர்ப் பகுதிகளை நேரிற் சென்று கண்டு

அறிந்தவர். சோழர் காலத்துத் தமிழகத்தை அறிய இப் பெரியபுராணம் ஒரு சரித்திர நூலாகத் திகழ்கிறது. திருவிளையாடற்புராணம், கந்த புராணம் முதலிய ஏனைய புராணங்கள் கடவுளின் திருவிளையாடல்களையும் வரலாறுகளையும் கூறுவன. இஃது ஒன்றே அடியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் கொண்ட குறிக்கோள்களின் சிறப்பையும் நுவல்கின்றது.

இதில் வரும் கதைகள் பல்வேறு தொழில், இனம், வாழ்க்கைநிலை கொண்ட பல்வகையோரையும் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது; அரச வாழ்வைச் சித்திரிக்கும் அதே கவிஞர் சேரி வாழ்க்கையையும் அழகாக அந்தச் சூழலோடு பொருத்திக் காட்டுகிறார். ஒவ்வொரு வரலாறும் ஒவ்வொரு சிறுகதை யமைப்பினைப் பெற்று விளங்குகிறது. தற்காலச் சிறுகதைகளில் நிகழ்ச்சிகள் முன்னும் பின்னும் மாறி அமைகின்றன; சேக்கிழாரின் கதைகள் ஆற்றொழுக்காக நிரல்பட அமைந்திருக்கின்றன.

**இராமாயணம்** எழுதுவதற்குச் சிந்தாமணியும் பெரிய புராணமும் வழிகாட்டிகளாக அமைந்திருந்தன. இந்த இரு பெருங் கவிஞர்களின் நூல்களைக் கற்ற காரணத்தால் கம்பனின் நடையில் சுவையும் எளிமையும் ஒருசேரக் கலந்துள்ளன. சிந்தாமணியின் சுவையமைப்பும் வருணனைத்திறனும் சந்தவிசையும், பெரியபுராணத்தின் நடையெளிமையும் பாத்திரப் படைப்புத் திறனும் இராமாயணத்தில் கலந்துள்ளன. சேக்கிழார் படைத்த கண்ணப்பர் கம்பன் படைத்த குகனுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளார்.

சிந்தாமணி மலையினின்று விழும் கான்யாறு என்றால் பெரியபுராணம் தெளிந்து விழுந்து எழும் நீர்அருவி எனலாம். இவ்விரண்டின் விளைவால் தோன்றிய ஒரு புதிய ஆறு கம்பனின் கவிதைப் படைப்பு எனலாம்.

திருத்தக்க தேவரின் கற்பனைச் சுவையும், சேக்கிழாரின் தெளிந்த நடையும், கனிவுமிக்க இராமனின் கதையும், சோழநாட்டு வளமான வாழ்வும், இராம காதையில் மக்கள் கொண்டிருந்த ஆர்வமும் இராமாயணம் எழுதத் தூண்டின எனலாம்.

வடமொழிக் கதையைத் தழுவி எழுந்த மொழி பெயர்ப்பு நூல் இஃது எனினும், அவர் தீட்டும் வாழ்வு சோழநாட்டு மக்கள் வாழ்க்கையையும், அரசர் திருவினை யும், செங்கோன்மையையும், மக்கட் பண்பாட்டையுமே சுட்டுகிறது எனலாம். இராமன் செல்லும் காடும், அவன் வாழ்ந்த நாடும், கடந்து செல்லும் வழிகளும், வருணிக்கும் செடியும் கொடியும், புல்லும் பூவும் சோழநாட்டுப் பொருள்களே. சீதை இராமன்பால் கொண்ட காதலும் காட்சியும் தமிழ்க் களவு முறையைப் பின்பற்றி அமைத்த ஒன்றாகும். வில்லை முறித்தான் சீதையை மணந்தான் என்று அமைக்காமல் இராமனைத் தெருவில் நடக்க வைத்துக் கன்னிமாடத்தில் அவளை நிற்க வைத்து, இருவர் விழிகளும் உள்ளமும் சந்திக்குமாறு செய்து, காதல் கொள்ளுமாறு அமைத்த கற்பனை கம்பனுக்கே உரியது. வான்மீகத்தில் இவ்வாறு முதலில் இருவரும் சந்தித்த தாகக் கூறப்படவே இல்லை.

இலக்குவன் தொடுத்த புல்லினால் அமைத்த சாலையில் சீதை இருந்தாள் என்பதும், இராவணன் அப்பர்ண சாலையை அடியோடு பெயர்த்து எடுத்துச் சென்றான் என்பதும் கம்பனின் படைப்பு. சீதையின் மெய்யைத் தீண்டித் தூக்கிச் சென்றான் என்பது முதல்நூல் தரும் செய்தி. கற்புடைய நங்கையை அப்பொறியிலான் தீண்டு தல் தகாது என்ற அடிப்படையைக் கம்பர் புகுத்தி யிருப்பது அவர் பண்பட்ட படைப்பைக் காட்டுகிறது. மேலும் சீதை, "இராவணனை இப்பொழுதே சொல்லினால்

சுடுவன் ஆனல் நாளை இராமன் வில்லினல் அடுவன் அச்செயலுக்கு மாசு நேரக்கூடாது என்ற காரணத்தால் அவனை விட்டு வைத்திருக்கிறேன்" என்று கூறும் கூற்று மதுரையை எரியிட்டுக் கொளுத்திய நெறியுடைய கண்ணகியை நினைவுப்படுத்துகிறது. கம்பனின் சீதைக் குக் கண்ணகியின் சொல்லாற்றல் நினைவுக்கு வருகிறது.

கங்கை பாயும் கழனி நாடுகளைக் கடக்கும் இராமன் செய்கையைக் குறிப்பிடும்பொழுது காவிரி பாயும் சோழ நாடு அவர் கண்முன் வருகிறது. 'காவிரி நாடன்ன கழனி நாடு ஒரீஇ' என்று கம்பர் வருணிக்கின்ருர். சேக்கிழாரின் படைப்பாகிய காளத்திவேடனும் கம்பர் படைப்பாகிய கங்கை வேடனும் பல வகையாலும் ஒத்து இருக்கிருர்கள்.

'வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்' என்ற வினவுக்கு விடையாக இராம காதை அமைந் துள்ளது. 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதே இதன் காவிய நீதியாகும்.

கண்ணகியின் கற்பின் பெருமையை உணர்ந்த தமிழ் நாட்டில், கற்புக்குப் பெருமை கொடுக்கக்கூடிய வகையில் சீதையின் பண்புகள் சித்திரிக்கப்படுகின்றன. கண்ணகி யின் கற்பு ஒருவகை; அது வெளிப்பட்ட வரலாறு தனி வகை; சீதையின் சூழ்நிலை வேறு; சீதையும் கணவனேடு தனிவழி நடந்து இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டாள். மாற்ருனின் சிறையில் வைக்கப்பட்டுச் செல்வமும் கொடுமையும் சூழ்ந்த சூழ்நிலையில் பொறுமை யின் உறைவிடமாகவும், துன்பத்தின் நிறையிடமாகவும், கவலையின் இருப்பிடமாகவும் அவள் வாழ்வு அமைகிறது. 'இந்த இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்ற கொள்கையுடைய கணவனை நினைந்து அழுது ஏங்கும் நிலைமை காவியத்தை மிக உயர்த்தி விடுகிறது. இராமனின் பிரிவுத் துன்பமும், துன்பத்தால்

ஏங்கும் அவன் சிந்தையும், படிப்போர் உள்ளத்தை உருக்கும் இயல்பின. கல்லையும் கனிவிக்கும் இராமனின் கதை என்று சொல்லத்தக்க வகையில் மிகவும் உருக்க மான நிகழ்ச்சிகள் கொண்டுள்ளது.

இதில் வரும் குணச்சித்திரங்களைச் சித்திரித்துக் காட்டும் எழில் இவர் படைப்பின் தனி இயல் எனலாம். இவர் மக்கள் மனக்குறிப்புக்களை முன்னுக்குப் பின் முர ணில்லாமல் காட்டும் உயர்ந்த கலைஞர். பண்பு நலன்கள் சிறப்பாக அமையக் காவிய மாந்தர்களைப் படைக்கும் திறன் கம்பனுக்கே உரியது எனலாம். 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் பழமொழியும், 'கல்வி யிற் பெரியவர் கம்பர்' என்னும் உயர்மொழியும், 'இது என்ன கம்பசூத்திரமா' என்ற வினமொழியும் முறையே கவிதை உயர்வும், கல்விநலமும், குறிப்புப் பொருள்களும் அமைந்துள்ள கம்பன் கவிதைகளுக்குச் சிறந்த நற்சான்று களாகும். கம்ப நாடனின் கவிதை கற்றோர்க்குக் கழிபேர் உவகை ஊட்ட வல்லது.

தமிழர் வாழ்வும், பண்பாடும் மிக உயர்ந்திருந்த காலத்தில் கம்பர் வாழ்ந்தார். அவர் வடமொழிக் கதை யைப் பாடினாலும், தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வளம் வாழ்வு இன்ன பிறவே அவர் காவி யத்தில் மிளிர்ந்து ஒளி செய்யக் காண்கின்றோம். சொல் வளம், ஓசைநயம், மனித வியல்பை அறிந்து உணர்த்தும் ஆற்றல், கற்பனை முதலிய பண்புகள் யாவும் கம்பனிடத் தில் ஒருங்கு அமைந்துள்ளன. உணர்ச்சி வேகத்திற்கு ஏற்றவாறு கவிதையின் நடை அமைந்துள்ளது. போரென் றால் வல்லினமும், பெண்ணென்றால் மெல்லினமும், இவை யன்றி வேறென்றால் மூவினமும் விரவிவரத் தொடுப்பது இவர் பாடல்களின் தனியியல்பாம். மெல்லினம் மிகுந்து மெல்லியலாளின் மென்மையை உணர்த்தும் பாடல்களுள் ஒன்று பின் வருமாறு :

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி யளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்'

என்பது சூர்ப்பனகை, மாறிய வடிவத்தில் தோன்றும் தோற்றமும், அவள் அழகின் ஏற்றமும், நடையில் ஏற்பட்ட மாற்றமும், மெல்லெழுத்துக்களின் மிகுதியால் காட்டப்படுகின்றன.

இப் பெருங்காவியங்களோடு ஒத்த மதிப்புடைய புராண நூல் மற்றொன்றும் இச் சோழர்காலத்தில் எழுந்தது. அது கச்சியப்ப சிவாச்சாரியார் என்பவர் எழுதிய **கந்தபுராணம்** ஆகும். வடமொழிப் பயிற்சியினால் ஸ்காந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய சங்கர சங்கிதை என்னும் பகுதியிலிருந்து தமிழில் கந்தபுராணம் என்னும் கவின் மிக்க கதையைக் காவிய அமைப்பில் பாடியருளினார். முருகன் சரவணப் பொய்கையில் பிறந்த செய்தியும், முருகனின் திருவிளையாடல்களும், தேவர்களைத் துன்புறுத்திச் சிறையிலிட்ட சூரபதுமனை அழித்து அவர்களுக்கு விடுதலையளித்த செய்தியும், வள்ளி தெய்வயானை என்ற இருவரை மணந்த இன்பச் செய்தியும் சுவைபடக் கூறுகின்றது. இந்நூல், பதினாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் கொண்டு விளங்கி ஏனைய பெருங்காவியங்களைப் போலக் காப்பிய இலக்கண அமைதிகள் பெற்று விளங்குகிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கே அமைத்து இது ஒரு சமய இலக்கியமாகவும் விளங்குகிறது.

சுருங்கக்கூறின், சோழர் காலத்து நூல்கள் அந்நாட்டின் இயற்கை வளம், வாழ்க்கைச் சிறப்பு, பண்பாட்டின் உயர்வு, ஆட்சியின் மாட்சி ஆகிய இவற்றைப் புனைந்து கூறும் நோக்கமாக எழுந்தன எனலாம். சோழரின் காலம் காவியகாலம் எனலாம்.

# 6. சிற்றிலக்கியங்கள்

## சோழர்காலத்துச் சிற்றிலக்கியங்கள்

சோழர்காலத்தில் கம்பர், சேக்கிழார், திருத்தக்க தேவர் முதலிய பெரும்புலவர்கள் காவியங்கள் இயற்றி னர். இதே காலத்தில், சிற்றிலக்கியங்கள் படைத்த பெரும்புலவர்களும் வாழ்ந்துவந்தனர். அவர்களுள் கலிங் கத்துப்பரணி பாடிய செயங்கொண்டாரும், குலோத்துங் கன் பிள்ளைத்தமிழும் மூவருலாவும் பாடிய ஒட்டக்கூத்த ரும், நளவெண்பா பாடிப் புகழேந்திய புகழேந்தியும், நீதி நூல்கள் இயற்றிய அவ்வையாரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். பரணி, பிள்ளைத்தமிழ், உலா முதலிய சிறு பிரபந் தங்கள் இக்காலத்தில் உருப்பெற்றுத் தனிவகை இலக் கிய மரபைப் பெற்று விளங்கின. இவர்கள் பாடிய இச்சிறு நூல்கள் பிற்காலத்தில் வழிகாட்டியாக அமைந்து சிறுபிரபந்தங்கள் மேலும் தோன்றி வளர்வதற்குக் காரண காக அமைந்துவிட்டன.

இப்பாடல்களில் சொல்லழகும், கற்பனை வளமும் பெரிதாக மதிக்கப்பட்டன. காவியத்தின் சிறு பகுதி களாக விளங்கிய போர்வருணனை, குழந்தையின்பம், அரசர்கள் உலாப் போதல் தனிப் பகுதிகளாக இயங்கித் தனி இலக்கியங்களாக உருக் கொண்டன.

**கலிங்கத்துப்பரணி**: இது கலிங்கத்துப்போர் வெற் றியைப் பாடும் போர்வருணனைப் பாடலாகும். முதலாம்

குலோத்துங்கன் கருணாகரத் தொண்டைமான் என்ற படைத்தலைவனை ஏவிக் கலிங்க மன்னன் அனந்தபதுமன் என்பானை வென்ற செய்தியைக் கூறுகிறது. கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம்பாடியது என்ற பகுதிகள் கொண்டு விளங்குகிறது.

காளியின் உயர்வும், பேய்களின் அலைவும், குலோத்துங்கன் பிறப்பும் சிறப்பும், படையெழுச்சியும், போர் நிகழ்ச்சியும், பேய்கள் கூழ் அட்டுக் குடித்து உண்ணலும், களம்பாடிக் குலோத்துங்கனை வாழ்த்தலும் இதில் பேசப்படுகின்றன.

போர்க்களக் கொடுமையைச் சித்திரித்துக் காட்டுவதில் கலிங்கத்துப்பரணி ஈடு எடுப்பற்று விளங்குகிறது. கலித்தாழிசையால் பாடப் பெறும் இந்நூல் புதிய புதிய சந்தங்கள் எழுப்பிப் போர் ஓசையைக் கலியோசையில் ஒலிக்குமாறு காட்டுகிறது.

படைகளின் எழுச்சியும், பகைவர் நாடு நோக்கிச் செல்லும் காட்சியும் கவின்பெறக் கவிதைகள் கதை வடிவாகத் தொடர்ந்து கூறிச் செல்கின்றன.

அவதாரம் என்ற பிரிவில் குலோத்துங்கனின் பிறப்பும், வளர்ப்பும், கலைச்சிறப்பும் கூறப்படுகின்றன. இப்பகுதி, சோழர்களைப் பற்றி அறிவிக்கும் வரலாற்றுச் செய்திகளாக விளங்குகிறது.

கடைத் திறப்பு என்ற பகுதி, காதற் சுவையும், கவிதையழகும், வருணனைச் சிறப்பும் கொண்டு விளங்குகிறது.

பரணி என்னும் இலக்கியத்தை முதன்முதலில் பாடியவர் செயங்கொண்டார். 'பரணிக்கோர் செயங்கொண்டான்' என்று இவர் பாராட்டப்படுகிறார். இதனைப் பின் தொடர்ந்து ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி என்ற நூலைச் சமயச் சார்பும், தத்துவ விளக்கமும், புராணக் கதைகளும் அடிப்படையாகக் கொண்டு பாடியுள்ளார். தக்கன் செய்த வேள்வியைச் சிவபெருமான் வீரபத்திரக் கடவுளை ஏவி அழித்த வரலாற்றை ஒரு வீர காவியமாக அமைத்துப் பாடியிருக்கிறார்.

பரணி என்பது ஒரு தனி இலக்கிய மரபைப் பெற்று விட்டது. ஆயிரம் யானையைக் கொன்ற வீரன்மேல் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு முதலிய உறுப்புக்கள் அமைத்து அவ்வீரனின் சிறப்புக்களையும் போர்நிகழ்ச்சிகளையும் புறப்பொருளாக அமையக் கலித்தாழிசையால் பாடப்படுவது என்ற மரபு தோன்றலாயிற்று. இந்நூலின் பெயர் தோற்றவனின் பெயரைக் கொண்டு அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

**மூவருலா :** உலாக்களில் மிகச் சிறந்ததாகக் கருதப் படுவது கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவாகும். ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசராசன் ஆகிய மூவர் காலத்தும் அவைக்களப் புலவராயிருந்தவர். இம்மூவர் மீதும் பாடியவையே மூவருலா என்பது. இவர், வடமொழியும் தமிழும் நன்கு கற்றறிந்த பெரும்புலவர்.

இவர் இயற்பெயர் கூத்தர் என்பதாகும். இவர் குலோத்துங்கனின் ஆசிரியராகவும் இருந்தவர்; அவர்மீது ஒரு பிள்ளைத்தமிழும் பாடியுள்ளார். இவர் இயற்றிய பிற நூல்கள் அரும்பைத் தொள்ளாயிரம், ஈட்டியெழுபது, காங்கேயன் நாலாயிரக்கோவை, தக்கயாகப்பரணி என்பனவாம்.

ஒவ்வொரு உலாவின் முற்பகுதியில் பாட்டுடைத் தலைவனது முன்னோர் பெருமை, தலைவன் காலையில் எழுந்து நீராடுதல், பின் ஊர்தியில் உலாவருதல், அவனோடு உடன்வருபவர்களின் பெருமை, பல்வகை மகளிர்க்குழாங்கள் அவனைக் காணக் காத்திருத்தல், அவன்பால் விழைவு கொள்ளுதல் முதலியன கூறப்படுகின்றன; இதன் பிற்பகுதியில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவப் பெண்களின் உருவ அழகும் உள்ளக்கிளர்ச்சியும், உடல் நூல் உள நூல் முதலியவற்றிற்கேற்பக் கூறப்படுகின்றன. பருவத்திற்கேற்ற உருவமும் உள்ள நிலையும் வருணிக்கப்படுகின்றன.

இவருடைய பாடல்கள் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலக்கப்பட்டிருத்தலால் கடுமையான நடைகொண்டு பொருள் உணர்தற்கு அரிதாக விருக்கின்றன; மேலும் இவை சொல்லடுக்குகளும், கற்பனை வளமும், சிலேடை நயங்களும் மிக்கு விளங்குகின்றன. வருணனைகள் உயர்வு நவிற்சியாக அமைந்தவை.

**நளவெண்பா:** பாரதக் கதையுள் கிளைக்கதைகளுள் ஒன்றாகிய நளசரிதத்தைத் தமிழில் நளவெண்பா என்ற பெயரால் ஒரு சிறு காவியமாகப் படைத்துள்ளார் இதன் ஆசிரியராகிய புகழேந்திப்புலவர். நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளை இன்பமும், துன்பமும் மாறிவர, செப்பலோசை செவிக்கினிமை செய்ய, வெண்பா என்னும் ஒண்பாவில் இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது.

இக்கிளைக்கதை முதற் கதையாகிய பாரதக் கதையோடு பெரிதும் ஒத்து விளங்குகிறது. சூதாட்டத்தில் நாடும் பொருளும் இழந்து காடு நோக்கிச் சென்ற பாண்டவர்களைப் போல நாடும் வாழ்வும் இழந்த காதலிருவரின் துன்ப வாழ்வை நம் அகக் கண்முன் நிறுத்தி வைக்கிறது.

கடற்கரையில் நண்டு தன்வளையில் புகுகிறது. அப்பொழுது அது தன்வரவைக் கண்டு நாணி ஒடுங்குகின்றது என்று நளன் எண்ணிக் கூறும் அழகு தற்குறிப்பேற்றமாக அமைந்துள்ளது.

காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ – நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு அலவ! ஓடி
ஒளிக்கின்றது என்னோ உரை

இந்நூல் சுயம்வரம் காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்று மூன்று பிரிவுகளைப் பெற்று 424 செய்யுட்களைக் கொண்டு விளங்குகிறது.

## நீதி நூல்கள்

சங்க காலத்தில் அதிகமானைச் சிறப்பித்துப் பாடிய அவ்வையார் என்ற புலவர் இருந்தார். அதே பெயர் கொண்ட மற்றொருவர் சோழர் காலத்தில் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. இந்த அவ்வையார், கம்பர் காலத்தில் வாழ்ந்தவர் என்று பல தனிப்பாடற் செய்திகளால் அறிய முடிகிறது. நல்ல நீதிக்கருத்துக்களை எளிய தமிழில் எடுத்தியம்பி ஆன்ற மொழிகள் பேசிய சான்றோராக வாழ்ந்தார். ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்கள் இவர் இயற்றியவை. இவை சிறுவர்கள் பயில்வதற்கேற்ற எளிமை பெற்று விளங்குகின்றன. தக்க உவமைகொண்டு நீதிக்கருத்துகள் உணர்த்தப்படுதல் இந்நூல்களின் சிறப்பியல்பாகும்.

## நாயக்கர் காலத்துச் சிற்றிலக்கியங்கள்

சோழராட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு விசயநகர மன்னரின் பிரதிநிதிகளாக இருந்த சிற்றரசர்கள் தமிழ் நாட்டின் பற்பல பகுதிகளைப் பதினைன்காம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஆண்டதாகத்

தெரிகிறது. இவர்களை நாயக்கர்கள் என்றும் இக் காலத்தை நாயக்கர் காலம் என்றும் கூறிவருகின்றனர்.

சோழர்காலத்துச் சிற்றிலக்கியங்கள் இக்கால நூல் களுக்கு முன்மாதிரியாக அமைந்தன. இவற்றின் வளர்ச்சி பெருகவே இவை தனிமரபுடைய இலக்கியங்களாகக் கருதப்பட்டன. இவற்றைச் சிறுபிரபந்தங்கள் என்று வகைப்படுத்தினர். இவை தொண்ணூற்றாறு வகை என எண்ணும் கொடுத்தனர். உலா, தூது, பிள்ளைத்தமிழ், பரணி, கோவை என்று பெயர் பெற்றன. இச் சிறுபிர பந்தங்களே யன்றி வேறு சில தனி நூல்களும் இக்காலத் தில் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஒரு சில உள. அவை பின்வருமாறு: நைடதம், புராணங்கள், காளமேகத்தின் தனிப்பாடல்கள், வில்லிபாரதம், திருப் புகழ், குமரகுருபரர்பிரபந்தங்கள், பிரபுலிங்கலீலை முதலியன.

**நைடதம் :** சோழர்காலத்தில் புகழேந்தி என்பவரால் நளவெண்பா பாடப்பட்டது; பிற்காலத்தில் அதிவீரராம பாண்டியர் என்பவர் வடமொழிக் கதையாகிய 'நைடதம்' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'நைட தம் புலவர்க்கு ஔடதம்' என்னும் பழமொழி வழங்குகிறது. சிந்தாமணிக்கு அடுத்துத் தமிழில் காமச்சுவையும் வரு ணனை மிகுதியும் கொண்ட தமிழ்நூல் நைடதம் எனலாம். தமிழ்ப் பாடல்களைப் படிக்க இந்நூல் தூண்டுகோலாக விளங்குகிறது என்ற காரணத்தால் இந்தப் பழமொழி எழுந்தது எனலாம்.

**புராணங்கள்**

தலபுராணங்கள் மிகுதியாக இக்காலத்தில் எழுந் தன. அவற்றுள் கச்சியப்ப முனிவர் என்பார் பாடிய தணிகைப் புராணம் குறிப்பிடத்தக்கதாகும். இதன் நடை

எளிமையற்றிருப்பினும் புலவர்கள் வியந்து பாராட்டத் தக்க சுவையும் நயமும் கொண்டு விளங்குகிறது.

அந்தககக்கவி வீரராகவர் என்பவர் பாடிய அரிச்சந்திர புராணம் வடமொழியில் உள்ள அரிச்சந்திர சரிதம் என்னும் நூலை முதல் நூலாகக் கொண்டு எழுந்தது. உண்மைக்காக நாட்டையும், மகனையும், மனைவியையும் பிரிந்து அடிமைப்படுத்திய உருக்கமான கதையமைப்பும் உள்ளம் உருக்கும் பாடல்களும் கொண்டு விளங்குகின்றது.

பரஞ்சோதியார் பாடிய **திருவிளையாடற் புராணம்** மதுரைச் சொக்கநாதரின் அறுபத்தி நான்கு திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுப் பாடுவது. இது மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இக்கதைகள் மதுரை நகரையும், ஆலவாய் இறைவனாகிய சுந்தரேசரின் பெருமையையும் விளக்க எழுந்தன. இதில் பல பாண்டிய மன்னர்களின் வரலாறுகளும் பிணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் கற்பனை மிகுதியாக உள்ளது. பெரியபுராணத்திற்கு அடுத்ததாகப் பெருமைபெற்று விளங்குவது இத் திருவிளையாடற் புராணம் எனலாம். தமிழ்நடை எளிமையும் இனிமையும் பெற்றுக் கதையின் தோற்றமும் முடிவும் அழகாக அமைந்து சிறுகதை வடிவில் இக்கதைகள் உருவாகியுள்ளன. இக் கதைகள் மக்களுக்குச் சிறந்த கற்பனைகளைத் தந்து கடவுள் பேரில் பக்தியும் ஊட்டக் கூடிய வகையில் அமைந்துள்ளன. விறகுவிற்ற படலத்தில் யாழிசைக்கு ஏற்றமும் உயர்வும் கொடுக்கப்படுகின்றன. பெரியபுராணத்தில் ஆனாயனார் புராணமும் குழலிசையின் பெருமையை உணர்த்துகிறது. குழலும் யாழும் தமிழ் இசைக்கருவிகள்.

சோழர் காலத்தில் 13-ம் நூற்றுண்டில் ஏற்கனவே பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் ஒரு திருவிளையாடற் புராணம் இயற்றப்பட்டது. அதனையும் வடமொழி மூலக்கதையையும் தழுவி இந்நூல் அமைந்துள்ளது. சோழர்காலத்து எழுந்த புலியூர்நம்பியின் திருவிளையாடற் புராணம் செல்வாக்கு இழந்துவிட்டது. பரஞ்சோதியார் திருவிளையாடலே மிகுதியும் பயிலப்பட்டு வருகிறது. இவர் பதினாறும் நூற்றுண்டைச் சார்ந்தவர் என்பர்.

**கவிகாளமேகம்**

கரிய முகில் மழை பொழிந்து நாட்டைக் குளிர்விக்கிறது. கவி காளமேகம் கவிதை மழை பொழிந்து செவிகளைக் குளிர வைத்தார். நினைத்தமாத்திரத்தில் கொடுத்த பொருளைக் குறித்துக் கவிதை பாட வல்லவர் ஆவர். இவ்வாறு பாடும் பாடல்களை ஆசுகவி என்பர். மேலும் பிறர் குறைகளை எடுத்துக்காட்டி நகைச்சுவை தோன்றக் கூடிய வகையில் நற்கவிதைகள் பாடும் இயல்பினர். இவ்வகைப் பாடல்கள் பிறரைத் திருத்தும் நோக்கம் கொண்ட நகைச்சுவைத் துணுக்குகள் (Satire) எனலாம்.

நீர்மோர் கொடுத்த இடைச்சி, நீரைப் பெருக்கி மோரைச் சுருக்கிவிட்டாள். இதை மிக நயமாகச் சுட்டிக் காட்டுகிறார் தம் தனிப் பாடற் கவிதையிலே.

**கார் என்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது**
**நீர் என்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்**
**வார் ஒன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்**
**மோர் என்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே**

கார் நீராகி இவள் கையில் மோராயிற்று என்று எள்ளல் குறிப்புத் தோன்றப் பாடியிருக்கிறார்.

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம் போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி

என்பதும் இத்தகைய பாடலாம்.

ஆசுகவியால் அகில உல கெங்கும்
வீசு புகழ்க் காள மேகம்

என்று இரட்டையர்களால் இவர் பாராட்டப்படுகின்றார்.

## இரட்டையர்கள்

இரட்டையர்கள் என்று இணைத்துப் பேசப்படும் பெரும் புலவர்கள் கவி காளமேகம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்களும் ஒருசில வசைப் பாடல்கள் பாடியுள்ளனர். இவையே யன்றிக் கலம்பக நூல்கள் சில பாடியுள்ளனர். கச்சிக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம் முதலியவை இவர் பாடியவை; கலம்பகம் பாடுவதில் சிறந்தவர்கள் என்ற பாராட்டுதலைப் பெற்றுள்ளனர்.

## தஞ்சைவாணன் கோவை

சங்ககால அகப்பொருள் துறை மரபுகள் மீண்டும் கோவை நூல்களின் வாயிலாகப் புதுப்பிக்கப்பட்டன. நானூற்றுக்கு மேற்பட்ட துறைகள் வகுக்கப்பட்டு ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பாடலாகப் பாடப்பட்டன.

தொடர்கதை போலத் துறைகள் தொடர்பு பெற்றுக் கோவையாகப் பாடப்பட்டன. கலித்துறைப் பாடல்களில் இக்கோவை நூல்கள் இயங்கின. ஏற்கனவே மாணிக்க வாசகர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையார் இவற்றிற்கு முன் மாதிரியாக விளங்கியது.

இக்கோவை நூல்களுள் தஞ்சைவாணன் கோவை என்பதும் ஒன்று. தஞ்சாக்கூர் என்ற ஊருக்குத் தலைவ

னை தஞ்சைவாணன் என்பானைப் பாராட்டிப் பாட்டுடைத் தலைவனுக்கி அவன் புகழ் மொழிகள் அமையத் தொடர் நிகழ்ச்சிகளாக அமைத்துப் பாடியுள்ள நூல் இதுவாகும். இது பொய்யாமொழிப் புலவர் என்பார் பாடியதாகும். இதில் பாட்டுடைத் தலைவன் ஒருவனும் கிளவித் தலைவன் ஒருவனும் இடம் பெறுகின்றனர். முன்னவன் புலவனின் புகழ்மொழிக்கு உரிய நாட்டுத் தலைவன்; பின்னவன் கதைப்பகுதிக்கு வேண்டிய நிகழ்ச்சிகளுக்குரிய பாட்டுத் தலைவன்.

**வில்லிபாரதம்**

வில்லிபுத்தூரார் பாடிய பாரதம் சந்தம் மிக்க பாடல்களால் வடமொழி வியாச பாரதக் கதையினைச் சுருக்கமாகக் கூறுவதாகும். இது 4339 விருத்தப் பாக்களைக் கொண்டு விளங்குகிறது. விருத்தப்பாவின் வடமொழிச் சந்தங்களையும் வடசொற்களையும் மிகுதியாகக் கலந்திருந்தாலும் தமிழ்ச்சுவை குன்றுமல் நடையாலும், சொல்லாட்சியாலும், உருக்கமான பாடல்களாலும் படிப்பவர் உள்ளத்தைக் கவர்கின்றது.

கண்ணனிடத்தில் ஆழ்ந்த பக்தி கொண்டு இவ்வாசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார். ஒவ்வொரு சருக்கத்தின் முதற்பாடலிலும் திருமால்வணக்கம் இடம்பெறுகிறது. இக்கதை எழுதிய அவர் உள்ளக் கிடக்கை அவர் அவையடக்கமாகப் பாடிய பாடலால் அறியவருகிறது.

முன்னு மாமறை முனிவரும் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்
என்னும் ஆசையால் யானுமீது இயம்புதற்கு
[இசைந்தேன்

## திருப்புகழ்

அருணகிரிநாதரின் புகழுக்குத் திருப்புகழ் காரணமாக விளங்குகிறது. அவர் பாடல்களில் ஒரு பகுதியில் வாழ்க்கையில் கண்ட அலுப்பும் மற்ரெரு பகுதியில் முருகனிடம் ஆற்றுப்படுத்தும் புகழ்மொழியும் அமைந்து கிடக்கின்றன. நக்கீரரின் திருமுருகாற்றுப்படை போன்று திருவருளின் அருளைக் கூட்டுவிக்கும் அமைப்பைப் பெற்று விளங்குகிறது. முருகனது ஆறுபடை வீடுகளும் திருமுருகாற்றுப்படை போலச் சிறப்பிக்கப்படுகின்றன. முருகன் உறையும் பதிகள் சிறப்பிக்கப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை இதற்கு முதல்நூல் எனில் மிகையாகாது. கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, என்ற சமயப் பாடல்களும் இவர் பாடியவையாகும். இவர் திருப்புகழில், 'சலாம்' 'சபாசு' என்ற இந்துஸ்தானிச் சொற்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## குமரகுருபரர் நூல்கள்

தமிழ் நாட்டுச் சைவமடங்கள் தமிழை வளர்க்கும் அரும் பணியில் ஈடுபட்டன. குமரகுருபரர், தருமபுர மடத்தைச் சார்ந்த சைவத் துறவியாராவார். காசிக்குச் சென்று தமிழின் பெருமையைப் பரப்பித் தொண்டாற்றியவர். குமரகுருபரர் பிரபந்தங்கள் என்ற தொகுப்பில் இவர் நூல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. காசிக் கலம்பகம், சகலகலாவல்லிமாலை, கந்தர் கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம் என்பவை இவர் இயற்றிய நூல்களுள் மிகச் சிறந்தவை. இவர் பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

**பிரபுலிங்க லீலை :** கன்னட மொழியில் வழங்கிய பிரபுலிங்க லீலை என்னும் நூல் தமிழாக்கம் செய்யப்

பட்டது. சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு தத்துவக் கொள்கைகளுக்கு உருவகம் கொடுத்துக் கற்பனை மிகுதி யாக விளங்க அமைக்கப்பட்டது. இதன் ஆசிரியர் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர் ஆவர்.

**படிக்காசுப் புலவர்** காயற்பட்டினத்தில் சீதக் காதி என்னும் முகம்மதிய வள்ளலைப் பற்றிப் பல தனிப் பாடல்கள் பாடியுள்ளார். தொண்டை மண்டல சதகம், என்பது தொண்டை மண்டலத்தைச் சிறப்பித்துப் பாடுவது. இதனையும் வேறுசில கலம்பக நூல்களையும் பிள்ளைத்தமிழ்க் கோவை நூல்களையும் பாடியுள்ளார். இவர் பாடல்கள் சந்த இனிமை வாய்ந்தவை.

**சிறுபிரபந்தங்கள் :**

இச் சிற்றிலக்கியங்கள் ஒருசில சிறுபிரபந்தங்கள் எனப்படும். காவிய அமைப்பைப் பெற்று முழுநூலாக வருவன புராணங்கள், நளவெண்பா, நைடதம், வில்லி பாரதம் முதலியன. காவியத்தின் ஒரு கூறுகிய ஒரு துறை பற்றி மட்டும் பாடப்படும் நூல்கள் பிரபந்தங்கள் எனப்பட்டன. வைணவப் பாடல்கள் இருபத்து நான்கு தனி நூல்கள் சேர்ந்து நாலாயிர திவ்விய பிரபந்தம் எனப்பட்டன. இக்காலத்தில் தனித் துறைகளில் இயங் கும் பாடல்கள் சிறுபிரபந்தங்கள் எனப்பட்டன. அவற் றுள் சில பின்வருமாறு :

பரணி, உலா, தூது, பிள்ளைத் தமிழ், கலம்பகம், நான்மணிமாலை, மும்மணிக்கோவை, பள்ளு, குறவஞ்சி முதலியன சிறுபிரபந்தங்கள் எனப்பட்டன.

**பரணி :** சோழர் காலத்தில் எழுந்தவை கலிங்கத் துப் பரணி, தக்கயாகப் பரணி என்பனவாம்; நாயக்கர் காலத்தில் மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி என்பன எழுந்தன.

**உலா :** சோழர் காலத்தில் ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலா முதல் நூலாகத் திகழ்ந்தது. பிற்காலத்தில் திருவாரூர் உலா, ஏகாம்பரநாதர் உலா, மதுரைச் சொக்கநாதர் உலா முதலியன எழுந்தன.

**தூது :** வண்டு, அன்னம், குயில், கிளி, நெஞ்சு, மேகம், முதலிய பொருள்களுள் ஒன்றை விளித்துத் தன் காதலை எடுத்துச் சொல்லித் தலைவனிடம் தூதாகச் சென்று மாலை பெற்று வரும்படி ஏவுவதாகப் பாடுதல் தூது எனப்படும். சிவஞானபாலையசுவாமிகள் நெஞ்சு விடுதூது, பலபட்டடைச் சொக்கநாதர் பாடிய அழகர் கிள்ளை விடு தூது முதலியன இத்துறையன.

**பிள்ளைத் தமிழ் :** வழிபடும் தெய்வத்தையோ நாட்டுத் தலைவனாகிய அரசனையோ குழந்தையாகக் கற்பித்துப் பத்துப் பருவங்களில் பாடுவது பிள்ளைத்தமிழ். இது ஆண்பால் பிள்ளைத் தமிழ் பெண்பால் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை, எனப் பத்துப் பருவங்கள் கொண்டு நிகழ்வன ஆண்பால் பிள்ளைத்தமிழ் எனப்படும். இவற்றுள் சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல், சிறு பறை கொட்டல் நீங்கி அவற்றிற்கு மாறாக அம்மானை, கழங்கு, ஊசல் என்னும் பருவங்கள் பெற்று வருவன பெண்பால் பிள்ளைத் தமிழ் என்று கூறுவர். முன்னதில் பாட்டுடைத்தலைவன் ஆணாகவும், பின்னதில் தலைவி பெண்ணாகவும் அமைவர். திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்பவை முன்னதைச் சார்ந்தவை; மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், பெண்பாற்பிள்ளைத் தமிழாம்.

**கலம்பகம் :** மலர்களின் கலப்புக் கலம்பகம் எனப்படும்; அகப் பொருட்டுறைகளில் பல்வகைத் துறைகளும்

யாப்புக்களில் பல்வகைச் செய்யுளும் கொண்டு வருபவை கலம்பகம் எனப்பட்டன. இவை அந்தாதித் தொடையில் பாடப்பெறும். கலப்பு அகம் கலம்பகம் எனப்பட்டது. மதுரைக் கலம்பகம், திருவருணைக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம் முதலியன கலம்பக நூல் களாம்; இவை தலங்களின் பெயர்களைக் கொண்டு பெயர் பெறும்.

**கோவை :** தஞ்சைவாணன் கோவை, திருவாரூர்க் கோவை, திருச்சிற்றம்பலக் கோவையார் முதலியன கோவை நூல்கள்பாற்படும்; அகப் பொருட்டுறைகளைக் கொண்டு தொடர்நிலைச்செய்யுள்களாக அமைந்தவை.

**பள்ளு :** இவை மிகப் பிற்காலத்தில் எழுந்தன. இதில் உழவுத் தொழில் செய்யும் பள்ளர்களின் ஊடலும் பாடலும் இடம்பெறுகின்றன. இரண்டு பெண்டாட்டிக் காரன் படும் திண்டாட்டமும், அவர்கள் ஏசும் பேச்சுரை யும் அமைந்து நகைச்சுவை விளைவிக்கும் பகுதிகள் கொண்டு விளங்கும். 17ம் நூற்றூண்டில் வேலன் சின்னத் தம்பி என்பார் எழுதிய முக்கூடற் பள்ளு என்னும் நூல் மிகச் சிறந்து விளங்குகிறது.

**குறவஞ்சி :** இது கூத்தும் நாடகப் பகுதியும் கொண்டு விளங்கும். 18ம் நூற்றூண்டில் திரிகூட ராசப்ப கவிராயர் தலபுராணமாகப் பாடிய நூல் குற்றாலக் குற வஞ்சி என்பது. குறத்தி மலைவளம் பாடுதலும், குற்றால நாதரின் சிறப்பும், வசந்தவல்லியின் காதலும், குறத்தி குறி கூறுதலும், வசந்தவல்லியின் திருமணமும் முதலான செய்திகள் கூறப்படும். இது குறம் என்ற துறையைச் சுற் றிப் பாடுவதால் சிறு பிரபந்தங்களுள் ஒன்றாகக் கூறலாம். குற்றாலத்தலத்தினைச் சிறப்பித்துப் பாட எழுந்த நூல் இதுவாகும். குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மைக் குறம் இக் குறவஞ்சிக்கு முன்மாதிரியாக அமைந்தது.

சோழர் காலத்தும் பிற்காலத்தும் வாழ்ந்த பெரும் புலவர்களின் தனிச் சிறப்புக்களை ஒரு தனிப் பாடலில் பிற்காலத்து வாழ்ந்த பலபட்டடைச் சொக்கநாதர் அழகாக அமைத்துள்ளார். அது பின் வருமாறு

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக் கோர்
சயங் கொண்டான்; விருத்த மெனும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவையுலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் ;
வசைபாடக் காளமேகமே;
பண்பாக உயர்சந்தம் படிக்காசு
அலாதார் யாருளர்; பகரொ ணாதே

# 7. தமிழ் இலக்கண நூல்கள்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் அகத்தியர் இலக்கணம் வகுத்ததாகக் கூறப்படுகிறது அந்நூலுக்கு அகத்தியம் எனப் பெயர் வழங்கியது; அந் நூல் கிடைத்திலது.

தொல்காப்பியம் என்னும் இயற்றமிழ் இலக்கண நூல் ஒன்றே கிடைத்துள்ளது. அதற்கு முன் பலர் இயற்றமிழுக்கு இலக்கணம் எழுதியுள்ளனர் என்று தொல்காப்பியச் சூத்திரங்களால் தெரியவருகிறது; அவர், முந்தையோரின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் குறிப்புக்கள் பல இந்நூலில் உள்ளன. இந்நூலில் எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவுகளாக இலக்கணம் அமைந்துள்ளது. அணியும் யாப்பும் பொருளதிகாரத்தில் அடக்கப்பட்டன.

தொல்காப்பியர் காலத்தில் மூவகையாக இயங்கிய இலக்கணம் பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகையாக இயங்கின. சோழர் காலத்தில் பல இலக்கண நூல்களும் சொல்லுக்குப் பொருள் உணர்த்தும் நிகண்டுகள் ஒரு சிலவும் எழுந்தன.

பதினோராம் நூற்றாண்டில் புத்தமித்திரனார் என்னும் புலவர் ஐந்திலக்கணங்களாக வகுத்து விருத்தப் பாவில் ஓர் இலக்கண நூல் அமைத்தார். இவரை ஆதரித்த வீர இராசேந்திர சோழன் என்னும் மன்னரின் பெயரை

இதற்கு இட்டு **வீரசோழியம்** என்று இதனை வழங்க லாயினர். இது வடமொழியிலக்கண விதிகள் ஒருசிலவற் றைப் பெற்று விளங்குகிறது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் குணவீர பண்டிதர் என்பார் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் 96 சூத்திரங் களில் சுருக்கமான இலக்கணம் ஒன்று எழுதியுள்ளார். அதற்கு **நேமிநாதம்** என்று பெயர் வழங்குகிறது. மிகவும் சுருக்கமான இலக்கண நூல் ஆதலின் இதற்குச் 'சின் னூல்' என்ற பெயரும் வழங்குகிறது.

**வச்சணந்திமாலை** என்னும் பாட்டியல் நூல் ஒன் றும் இதே ஆசிரியர் எழுதியுள்ளார். இந்நூல் மொழி யியல், செய்யுளியல், பொதுவியல் என்ற மூன்று பிரிவு கள் கொண்டது; இலக்கிய யாப்பிற்கு உரிய மங்கலப் பொருத்தம், சொல் பொருத்தம், எழுத்துப் பொருத்தம் முதலிய பொருத்தங்களைப் புதுமையாக வகுத்துக் கூறு கின்றது. பகுத்தறிவுக்குப் பொருந்தாத பொருத்தங்களை வற்புறுத்துகிறது. சிறு பிரபந்தங்களின் இலக்கணங்களை வகுத்துக் கூறுகின்றது.

பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் பவணந்தி என்பாரால் **நன்னூல்** என்ற இலக்கண நூல் ஒன்று எழுந்தது. பிற்காலத்து எழுந்த இலக்கண நூல்களுள் நன்னூலே தலை சிறந்தது ஆகும். தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு அதனைச் சுருக்கிப் பழையன கழித்தும் புதியன புகுத்தியும் இந் நூலை அமைத்துள்ளார். இஃது நேமிநாதம்போல் எழுத் துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறுகிறது. பதங்களைப் பிரித்துப் பதவியல் என்று அமைத்திருப் பதும், பண்புச் சொற்களுக்குப் புணர்ச்சி விதிகள் கூறி யிருப்பதும் வடசொற்கள் தமிழில் பெற்ற மாறுதல்களைச்

சுட்டியிருப்பதும் தொல்காப்பியத்தில் காணப்படாத செய்திகளாகும்.

அகப்பொருள் இலக்கணத்திற்கு எட்டாம் நூற்றாண்டில் பல்லவர் காலத்திலேயே **'இறையனார் களவியல்'** உரை எழுந்தது குறிப்பிடத் தக்கதாகும். இதன் ஆசிரியர் இறையனார் என்று கூறப்படுகிறது. நக்கீரர் என்பார் இதற்கு விளக்கவுரை எழுதியுள்ளார்.

இதனையடுத்துச் சோழர்காலத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் நாற்கவிராச நம்பி என்பார் **நம்பி அகப் பொருள்** என்னும் அகப்பொருள் இலக்கண நூல் ஒன்று எழுதியுள்ளார். இதற்கு மேற்கோளாகச் சங்கப் பாடல்கள் ஒரு சிலவும் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பிற் காலத்தோர் புகுத்தியிருக்க வேண்டும். இது அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்கள் பெற்று விளங்குகிறது.

புறப்பொருளைத் தனியாகப் பிரித்துக்கூறும் தனி நூல் ஒன்றும் பல்லவர்காலத்தில் ஐயனாரிதனார் என்னும் புலவரால் **புறப்பொருள் வெண்பாமாலை** என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. 'கொளு' என்ற சூத்திர யாப்பை அமைத்துச் செய்தி விளக்கம் தந்து எடுத்துக்காட்டுகளாகப் புறப்பொருட் பாடல்களை அமைத்துள்ளார். இப் பாக்கள் வெண்பா யாப்பில் விளங்குவதால் இந்நூலுக்குப் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் பெயர் வழங்குகிறது. இப்பாடல்கள் சொல்லழகும் பொருட் சுவையும் கொண்டு இலக்கிய நயம் மிக்க இன்கவிதைகளாக விளங்குகின்றன. இந்நூல் பன்னிருபடலம் என்னும் பழைய நூலைப் பின்பற்றி அமைந்தது என்பர். அப் பன்னிரு படலம் இப்பொழுது நமக்குக் கிடைத்திலது.

யாப்பிலக்கணமாக **யாப்பருங்கலம்** என்ற ஒரு நூலும் அதன் சுருக்கமாக **யாப்பருங்கலக் காரிகை** என்னும் நூலும் ஒரே ஆசிரியர் இயற்றியுள்ளார். அமித சாகரர் என்பார் இவற்றின் ஆசிரியர். யாப்பருங்கலக் காரிகைக்கு குணசாகரர் என்பார் உரையும் விளக்கங் களும் தந்துள்ளார். செய்யுள் இலக்கணம் கற்பார் இதனையே பெரிதும் பயில்கின்றனர். இவை பத்தாம் நூற்றாண்டிலேயே தோன்றின என்று கருதப்படுகிறது.

அணியிலக்கணத்தை அழகு பெற அமைத்துக் கொடுத்தவர் தண்டியாசிரியர் என்பவர். இந்நூல் பன் னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது என்பர். இவர் எழு திய அணிநூலுக்குத் **தண்டியலங்காரம்** என்னும் பெயர் வழங்குகிறது. காவியங்கள் எழுந்த சோழர் காலத்தில் காப்பிய இலக்கணங்களை விரித்துக் கூறும் நூல் இதுவே யாகும். பொதுவியல், பொருளணி, சொல்லணி என மூன்று இயல்களாகப் பிரிந்து காவிய அமைப்பையும், உவமை உருவகம் முதலிய பொருள் அணிவகைகள் முப்பத்திஐந்தனையும், சொல்லலங்காரங்களையும் பலபட விரித்துக் கூறி எடுத்துக்காட்டுச் செய்யுள்களும் அவரே அமைத்துச் செல்லுகின்றார். 'காவியதரிசம்' என்னும் வடமொழி அலங்கார நூலைப் பின்பற்றி அமைந்த நூல் இஃது என்பர். இதனை யொட்டி நாயக்கர் காலத்தில் 16-ம் நூற்றாண்டில் இவ்வணிகளை மேலும் விரித்து 64 அணிகளாக **மாறனலங்காரம்** என்னும் அணிநூல் ஒன்ற னைக் குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் எழுதியுள் ளார். நம்மாழ்வாரிடம் கொண்ட ஈடுபாட்டால் மாறன் என்ற பெயரை அவர் இந்நூலுக்கு இட்டுள்ளார்.

தொல்காப்பியனார் சொல்லதிகாரத்தில் உரியியலில் அரிய சொற்கள் ஒருசிலவற்றிற்குப் பொருள்விளக்கம் தந்துள்ளார். இதனைப் பின் தொடர்ந்து சோழர்காலத்தில்

அரிய சொற்களுக்குப் பொருள்விளக்கம் தரத் தனிநூல்கள் எழுந்தன. அவற்றை நிகண்டுகள் என்று குறிப்பிட்டனர். அவற்றுள் திவாகரர் எழுதிய **திவாகர நிகண்டும்**, அவர் திருமகனார் பிங்கலர் என்பார் எழுதிய **பிங்கலந்தையும்**, மண்டலபுருடர் என்பார் இயற்றிய **சூடாமணி நிகண்டும்**, காங்கேயர் என்பார் எழுதிய **உரிச்சொல் நிகண்டும்** குறிப்பிடத்தக்கவையாகும். உரிச்சொல் நிகண்டு மிகப் பிற்காலத்தில் 17-ம் நூற்றாண்டில் எழுந்தது. முன்னவை மூன்றும் சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.

# 8. உரையாசிரியர்கள்

தொல்காப்பியத்திற்குப் பல உரை விளக்கங்கள் எழுந்தன. அவை உரைநடை வளர்ச்சிக்கும் காரணமாக விளங்கின. தொல்காப்பியம் முழுமைக்கும் சுருக்க உரை முதன்முதல் எழுதியவர் **இளம்பூரணர்.** இவரை 'உரை யாசிரியர்' என்றும் குறிப்பிடுவர். இவர் உரை தெளிவாக வும் ஆற்றொழுக்காகவும் அமைந்து விளங்குவது. இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர். இவருக்குப் பின்பே ஏனைய உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதத் தொடங்கினர்.

**பேராசிரியர்** என்ற பெயரையுடையவர் தொல்காப் பியத்திற்கு உரை எழுதியுள்ளார். அவர் எழுதிய உரை களுள் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் மரபியல் என்ற நான்கு இயல்களுக்கு உரைகள் கிடைக் கின்றன. திருக்கோவையாருக்கும் இவர் உரையொன்று எழுதியுள்ளார். இவர் உரைகள் நுட்பமான கருத்துக்களை வெளிப்படுத்துவன.

**சேனாவரையர்** என்ற மற்றோர் ஆசிரியர் வடமொழிப் பயிற்சி மிக்குடையவர். வடமொழி மரபுகளைப் புகுத்தித் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை விளக்கம் தந்துள்ளார். இவர் உரைநூலுக்குச் சேனாவரை யம் என்ற பெயர் வழங்குகிறது. வாதங்கள் மிக்க இவர் போக்கு இவர் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டும் இயல்பினது.

உரையாசிரியர்களுள் மிகுதியான பணி தமிழுக்குச் செய்தவர் **நச்சினார்க்கினியர்.** இவர் தொல்காப்பியம் முழுமைக்கும், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தா மணி ஆகிய இலக்கிய நூல்களுக்கும் விளக்கவுரை எழுதி யுள்ளார். இவர் நேரிதாக ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளாமல் கொண்டுகூட்டாக முன்னும் பின்னும் சொற்களை மாற்றிப் பொருள் கொள்ளும் இயல்பினர். 'உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' என்று இவர் பாராட்டப்படுகின்றார்.

தொல்காப்பியத்திற்கு எழுந்த உரைவிளக்கங்களைப் போலப் பிற்காலத்தில் நன்னூலுக்கு **மயிலைநாதர்** உரையும் **சங்கர நமசிவாயர்** எழுதிய விருத்தியுரையும் எழுந்தன.

சிலப்பதிகாரத்திற்கு **அரும்பதவுரை** என்ற உரை உளது; **அடியார்க்கு நல்லார்** விளக்கவுரை ஒன்றும் எழுதி உள்ளார். சிலப்பதிகார அரங்கேற்றக் காதைக்கு அவர் தந்துள்ள விளக்கக் குறிப்புக்கள் அவர் இசைப் புலமையைக் காட்டுகின்றது. அவர் உரை எதுகை மோனை பொருந்திய இனிமையான நடையைக் கொண்டது. அவர் மேற்கோள்கள் மிகுதியாகக் காட்டும் இயல்பினர்.

திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் **பரிமேலழகர்** உரையே சாலச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. இவர் பரிபாடலுக்கும் சுருக்கவுரை ஒன்று எழுதியுள்ளார். வடநூற் கொள்கைகளை ஆங்காங் குப் புகுத்தும் இயல்பினர் இவர்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய பண்டைத் தமிழ் நூல்களுக்குப் பழைய உரைகள் உள் ளன. அவற்றை எழுதிய ஆசிரியர்கள் இன்னார் என்று அறியப்படவில்லை.

இந்நூலாசிரியர்கள் அனைவரினும் மிக முற்பட்டவராகக் கருதப்படுபவர் இறையனார் களவியல் என்ற இலக்கண நூலுக்கு விளக்கவுரை எழுதிய **நக்கீரர்** என்பவர். இவர் திருமுருகாற்றுப்படை எழுதியவரின்வேறுபட்டவர். இவ்வுரைநடையே தமிழ் உரைநடையின் பழமையைக் காட்டும் இயல்பினது. செய்யுள்நடை போன்று எதுகை மோனையோடு கூடி விளங்குவது. இவ்வுரை எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர்; செய்யுள் நடையே மிகுதியாக உள்ள தமிழ் இலக்கியங்களுள் உரைநடை இலக்கியமாக விளங்குவது இவ்வுரையே யாகும்.

சமயப் பாடல்களாகிய வைணவ பிரபந்தங்கட்கு விருத்தியுரைகள் எழுதியவரும் உளர். நம்மாழ்வார் திருவாய்மொழி ஆயிரம் பாடல்கள் கொண்டது. அதற்கு எழுந்த உரைகளுக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்திநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி எனப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை முறையே ஆளவந்தார், நஞ்சீயர், அழகிய மணவாள ஜீயர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை ஆகிய ஐவர் இயற்றியருளினர். படி என்பது ஒரு கிரந்தம்; இது மெய்யெழுத்து நீக்கி உயிரும் உயிர்மெய்யுமாக முப்பது எழுத்துக்கள் கொண்ட அளவினது. திருவாய்மொழி நீங்கிய ஏனை மூவாயிரம் பாடல்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளையும் ஏனையோர் சிலரும் உரை வகுத்துள்ளனர். இவை வைணவ இலக்கியங்களின் சொற்சுவையையும் பொருளழகுகளையும் விரித்து உரைப்பன. இவ்வுரைகள் வடமொழியும் தமிழும் கலந்த மணிப் பிரவாள நடையில் இயன்றவை.

இவ்வாறே சைவ சாத்திரங்கட்கும் விருத்தியுரைகள் சைவப்புலவர்களால் வழங்கப்பட்டுள்ளன. மெய்கண்டார் எழுதிய சிவஞான போதத்திற்கு மாபாடியம் என்னும்

உரை மிகச் சிறந்து விளங்குகிறது. இதனை இயற்றியவர் சிவஞான முனிவராவார்.

இவ்வுரைகள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கியதோடு பழைய தமிழ்ச் செய்யுள் களுக்கும், இலக்கணங்களுக்கும் விளக்கம் தந்து அவற் றைப் பிற்காலத்தோர்க்கு அறிமுகப்படுத்தி எளிதில் கற்குமாறு உதவின. வைணவப் பிரபந்த உரையாசிரியர் களால் தமிழ்நடை உயரவில்லை; எனினும் கவிகளின் சுவையை யறிவிக்கும் திறன் இதில் காணப்படுகிறது.

# 9. சமயச்சார்பும் இலக்கிய வளர்ச்சியும்

சங்கப் பாடல்கள் பொதுவாகச் சமயச் சார்பு அற்றவை எனலாம். திருமுருகாற்றுப்படை என்னும் பாடல் ஒன்று மட்டும் முருகனின் அருட்டிறத்தைக் கூறும் சமயப் பாடல் ஆகும். கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள சில பாடல்கள் பிற்காலத்தில் பெருந்தேவனார் என்பவரால் பாடப் பெற்றவையாகும்.

திருக்குறள் சமயப் பொதுமையோடு விளங்கும் நூலாயினும் அவரவர் சமயப்பற்றின் காரணமாகத் தத்தம் சமயத்தைக் சார்ந்தவர் என்று குறிப்பிட்டு வந்தனர். பொதுவாகத் தமிழ் இலக்கியம் சமயச் சார்பு அற்று விளங்கியது இல்லை; சமயத்தைச் சார்ந்தே தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் எழுந்தன. இலக்கணப் புலவர்களும் கடவுள் வாழ்த்திலும் உரைக் குறிப்புக்களிலும் தம் சமயச் சார்பைப் புலப்படுத்தியுள்ளனர்.

## சமணமும் தமிழும்

கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார், நான்மணிக் கடிகை, பழமொழி, ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணையெழுபது என்னும் நூல்களை எழுதியவர்கள் சமணரே. அவர் தம்சமயக் கருத்துக்களைத் தாம் எழுதிய நூல்களில் புகுத்தியுள்ளனர்.

சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவர். அவர் படைத்த கோவலனும் அவர்களுக்குத் துணைபோந்த கவுந்தியடிகளும் சமண சமயத்தவராகக் காட்டுகின்றார். எனினும் கவிதை நெறி பற்றி ஏனைய தெய்வ வாழ்த்துப் பாடல்களும் ஆங்காங்கு அமைத்துள்ளார். தமிழில் எழுந்த காவியங்கள் பெரும்பாலும் சமண சமயத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கின. சிந்தாமணி, வளையாபதி என்னும் பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறு காவியங்களும் சமணச் சார்புடையன. கொங்குவேளிர் ஒருவர் எழுதிய உதயணன் கதையும் சமண சமயத்தைச் சார்ந்ததாகும். இதற்குப் பெருங்கதை என்ற பெயர் வழங்குகிறது. இது ஆசிரியப்பாவால் இயன்றது. இதுவும் சீவகன் கதையைப் போன்ற அமைப்பை உடையது. மேருமந்தர புராணம் என்னும் காவியத்தை வாமனாச்சாரியார் என்பவர் இயற்றினர். இதுவும் சோழர்காலத்து எழுந்த நூலாகும். தமிழில் எழுந்த புராணங்கள் அனைத்தும் காவியங்கள் என்றே கூறலாம்; காவியங்களுக்குப் புராணங்கள் என்று பெயர் இடுவது மரபாகிவிட்டது.

இலக்கண நூல்கள் பெரும்பாலும் சமணப் புலவர்களாலேயே இயற்றப்பெற்றன. நம்பிஅகப்பொருள் எழுதிய நாற்கவிராச நம்பியும், யாப்பருங்கல விருத்தியும் காரிகையும் எழுதிய அமிதசாகரரும், நேமிநாதமும் வச்சணந்தி மாலையும் எழுதிய குணவீர பண்டிதரும், நன்னூல் எழுதிய பவணந்தியாரும், உரையாசிரியர்களுள் இளம்பூரணரும் சமணசமயத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் தாங்கள் இயற்றிய நூல்களில் கடவுள் வாழ்த்திலேனும், கருத்துரையிலேனும் தம் சமயச் சார்பைப் புலப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு இலக்கிய இலக்கணங்களை எழுதிச் சமணர்கள் பெரும்புலவர்களாகவும் பேராசிரியர்களாகவும்

விளங்கித் தமிழுக்குச் சிறந்த கவிதைகளும் கல்வித் தொண்டும் இயற்றியுள்ளனர்.

## பௌத்த சமயச் சார்பு

பௌத்த நூல்களுள் தலைசிறந்த நூல் சாத்தனார் இயற்றிய **மணிமேகலையாகும்**. இச் சமய நெறியை உணர்த்தவே இக்காவியம் எழுதப்பட்டது. இது மணி மேகலையின் துறவை விளக்குவதோடு வாழ்வின் நிலை யாமை, உயிர்களிடத்து அன்பைச் செலுத்துதல், பற்றறுத் தல் முதலிய பண்புகளை உணர்த்தக் காண்கிறோம். ஐம்பெருங் காவியங்களுள் குண்டலகேசியும் பௌத்தச் சார்புடைய நூலாகும்.

குண்டலகேசி கள்வன் ஒருவனைக் காதலித்து மணஞ் செய்துகொண்டாள்; அவள் ஊடலில் அவன் குறையைச் சுட்டிக்காட்டி விளையாட, அது வினையாக முடிந்துவிட்டது. அவன் சூழ்ச்சியாக மலையுச்சிக்கு அழைத்துச் சென்று அங்கே தான், அவளை உருட்டிக் கொல்ல நினைத்த சூழ்ச்சி யைத் தெரிவிக்க, அவள் அதனை மனத்தில் கொண்டு தானும் ஒரு சூழ்ச்சி செய்தாள்; சாவதற்கு முன் அவனை மும்முறை வலம் வருவதாகப் பதிபக்தி காட்ட அவன் மதிமயங்கிய வேளையில் தயங்காமல் வஞ்சித்து உருட்டி விட்டாள்; பிறகு அலைந்து திரிந்து பௌத்த மதத்தைச் சார்ந்தாள். குண்டலகேசி பலரை வாதில் வென்று இறுதியில் நீலகேசியிடம் தோற்றாள் என்று நீலகேசியின் உரைவிளக்கத்தால் குறிப்பிடப்படுகிறது.

இலக்கண நூல்களுள் **வீரசோழியம்** பௌத்த மதத் தைச் சார்ந்த புத்தமித்திரனார் என்பவர் இயற்றியதாகும். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒருசில பௌத்தச் சார்புடையன வாகும்.

**வைணவமும் சைவமும்**

தேவாரங்களுள் திருநாவுக்கரசர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், ஞானசம்பந்தர் பாடல்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை ஏழாம் திருமுறையாகவும், நம்பியாண்டார் நம்பி என்பார் வகுத்தருளினர். அதற்குமேலும் சோழர் காலத்திலேயே சைவ நூல்களுள் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தை யும், திருச்சிற்றம்பலக் கோவையாரையும் எட்டாம் திரு முறையாகவும், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், சேந்தனர் முதலிய ஒன்பதின்மர் பாடிய பாடல்களாகிய திருவிசைப்பாக்கள், திருப்பல்லாண்டு என்னும் பதிகங் களை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், காரைக்கா லம்மையார், சேரமான் பெருமாள் நாயனர், நம்பியாண்டார் நம்பி முதலியோரின் பாடல்களைப் பதினேராம் திருமுறை யாகவும், பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறை யாகவும் வகுத்தருளியுள்ளனர். இவை பன்னிரண்டு திரு முறைகள் எனப்படும்.

பிறகு அவ்வக்காலங்களில் எழுந்த தெய்வப் பாடல் களும், தலபுராணங்களும், காவியப் புராணங்களும், தாயுமானவர் அருட்பாடல்களும், அருணகிரியார் திருப் புகழும், குமரகுருபரர் பிரபந்தங்களும், சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலையும் இன்னபிற நூல்களும் சைவ சமயச் சார்பானவையாம். திவ்விய பிரபந்தப் பாடல்கள், இராமாயணம், பாரதம் முதலிய பெருநூல்களும், ஏனைய சில புராணங்களும் சிறுபிரபந்தங்களும் வைணவ நூல் களாம்.

**பிறசமய நூல்கள்** : பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றூண்டுகளில் கிறித்தவச் சார்பும், இசிலாமியச் சார்பும் இலக்கியங்களில் புகுந்தன. உமறுப் புலவர் என்பவர்

பன்னீராயிரம் செய்யுட்களில் நபிநாயகம் பற்றிய வரலாறு கச் சீறுப்புராணம் என்னும் நூலை எழுதியது குறிப்பிடத் தக்கதாகும். குணங்குடி மஸ்தான் சாகிபு என்பார் பாடிய பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள் என வழங்கப்படுகின்றன. சர்க்கரைப் புலவர் என்பவர் மெதீனவைச் சிறப்பித்து ஓர் அந்தாதிநூல் பாடியுள்ளார். ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என்னும் பிள்ளைத் தமிழ் இலக் கியத்தைச் சவ்வாதுப் புலவர் என்பாரும் முகையதீன் புராணம் என்ற நூலை வண்ணக்களஞ்சியப் புலவரும் பாடியுள்ளனர்.

பெஸ்கி என்னும் இயற்பெயரும் வீரமாமுனிவர் என் னும் மாற்றுப் பெயரும் உடைய இதாலி நாட்டுப் பேரறிஞர் தேம்பாவணி என்னும் கிறித்தவக் காவியத்தை இயற்றி யுள்ளார். இது சிறந்த கற்பனை நயமும் வருணனைத் திறமும் கொண்ட நூல் ஆகும். கிருஷ்ணபிள்ளை என்பார் ஜான் பனியன் எழுதிய Pilgrims Progress என்ற நூலைத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்று மொழிபெயர்த் துள்ளார். இரட்சணிய மனோகரம் என்னும் பக்திப் பாடல்கள் கொண்ட நூலும் இவர் பாடியது. இவை இயேசுநாதரைப் பற்றிப் பாடிய உருக்கமான பாடல்க ளாகும்.

புதுமைக் கவிஞராக விளங்கிய பாரதியாரும் சமயச் சார்பைக் கைவிடவில்லை; வேதாந்த பாடல்களும், சக்திப் பாடல்களும், கண்ணன் பாடல்களும் அவர் சமயப் போக்கை விளக்கின. மனத்திற்கு அமைதியும், உள்ளத் திற்கு உறுதியும், உணர்வுக்குப் புதுமையும் ஊட்டக் கூடிய வகையில் அவர் பக்திப் பாடல்கள் அமைந் துள்ளன.

# 10. தற்கால இலக்கியம்

18, 19, 20ஆம் நூற்றாண்டுகள் தமிழ் இலக்கியத்தில் பெருமாற்றத்தை உண்டாக்கிவிட்டன. சிறப்பாக ஆங்கிலத் தொடர்பும் மேலைநாட்டுக் கருத்துக்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியை மாற்றத் தொடங்கிவிட்டன. கவிதையில் புதுமையும் எளிமையும் புகுந்தன. உரைநடை காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்ற வகையில் நெகிழ்வும் எளிமையும் பெற்றுவிட்டது. செய்தித்தாள்களும், புதுமைக் கதைகளும், விஞ்ஞானமும், அறிவுத்துறைகளும் எழுதத் தமிழ் உரைநடை பயன்பட்டுவருகிறது.

**ஐரோப்பியர் வருகை:** ஐரோப்பியர் வருகை பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு திருப்பத்தை உண்டாக்கி விட்டது. உரைநடை வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி நூல்களுக்கும் இவர்கள் தொடர்பு பெரிதும் உதவியது. மேலும் இவர்கள் தமிழின் பெருமையைப் பிறர் அறியச் செய்தார்கள். இவர்கள் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கமாகத் தமிழைக் கற்றார்கள்; தமிழ் இவர்களைக் கவர்ந்துவிட்டது; பெரும்புலவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

இவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர் எனப்படும் பெஸ்கி (C. J. Beschi) என்பார். இவர் **தேம்பாவணி** என்னும் காவியமும் எழுதத்தக்க புலமை பெற்று விளங்கினார். தமிழின் ஐந்திலக்கணத்தைத் தொகுத்துத் **தொன்னூல் விளக்கம்** என்னும் நூல்

ஒன்று எழுதி விளக்கினர். இவர் பரமார்த்த குருகதை என்னும் நகைச்சுவையோடு கூடிய உரைநடை நூல் ஒன்று எழுதினர். இஃது எதுகைமோனை கட்டுப்பாடுகளினின்று நீங்கிப் பேச்சுத் தமிழோடு ஒட்டிய எளிய உரைநடை நூலாக அமைந்துள்ளது. தமிழில் எழுந்த நகைச்சுவை (Satire) உரைநடை நூலுள் இதுவே முதன்மையானது. சதுரகராதி என்ற அகராதி நூலும் இவர் இயற்றியுள்ளார். கித்தேரி அம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம் என்ற சிறுபிரபந்தங்களும் இவர் இயற்றியுள்ளார்.

தமிழ் மொழியின் பெருமையை வெளிநாட்டார் உணரும் வண்ணம் செய்த பெருமக்களுள் இவர் செய்த தொண்டு மிகப் பெரியது. திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். பேச்சுத் தமிழ்பற்றிய இலக்கணம் ஒன்றை இலத்தீன் மொழியில் எழுதியதோடு அதனையே ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் எழுதிய நூல்களுள் தேம்பாவணி மிகச் சிறந்ததாகும். இது மூன்று காண்டங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் கொண்டு விளங்குகிறது. திருத்தக்க தேவரின் நடையையும், கம்பர் திருவள்ளுவர் இவர்களின் போக்கையும் கருத்தையும் அமைத்து இவர் அக்காவியத்தை எழுதியுள்ளார். கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கோடு எழுந்த இக்காவியம் தம்காவியப் பண்பால் எச்சமயத்தவரும் விரும்பிக் கற்கும் காவியமாக விளங்குகிறது.

இத்தாலிய நாட்டில் பிறந்த இப் பேரறிஞர் தமிழ் நாட்டுக் கவிஞராக விளங்கியது தமிழின் ஆற்றலையும் அதனைக் கற்ற இவர் பேரறிவையும் காட்டுகின்றன. இவர் 1680-ல் இத்தாலிய நாட்டிற் பிறந்தவர்.

தமிழ் நாட்டில் 30வது வயதில் வந்து 37 ஆண்டுகள் தங்கிச் சமயப் பணியோடு தமிழ்ப் பணியையும் ஆற்றினர்.

**19-ம் நூற்ருண்டு:** அடுத்துத் தமிழ் மணத்தை வெளியுலகு அறியச் செய்த அறிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் டாக்டர் ஜி. யு. போப் (1820—1907), டாக்டர் கால்டுவெல் (1819—1891) ஆகிய இருவர் எனலாம். தமிழர் கருத்தியலை வெளியுலகுக்குக் காட்டியவர் டாக்டர் போப் அவர்கள்; மொழியியலைக் காட்டியவர் கால்டு வெல் அவர்கள். போப் அவர்கள் மெய்யுணர்வு இலக் கியமாகிய திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். 1900-ம் ஆண்டில் திருவாசக மொழிபெயர்ப்பை வெளி யிட்டார். தம் பதினேழாம் வயதில் தமிழ் பயிலத் தொடங்கி 87-ம் வயது வரை அதில் ஈடுபட்டு இறைவன் நிழலை அடைந்தவர். திருக்குறள், நாலடியார் இவற்றிலும் சிறந்த ஈடுபாடு கொண்டு அவற்றையும் மொழிபெயர்த் தார்; தமிழ் மொழிபற்றியும் இலக்கியம்பற்றியும் தமிழறி ஞர்களைப் பற்றியும் பல கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளி யிட்டுள்ளார். அவர் தம் கல்லறையில் தம்மை ஒரு தமிழ் மாணவன் எனக் குறிப்பிட ஏற்பாடு செய்து பெருமை தேடிக்கொண்டார். தமிழ் கற்பதில் தணியாத ஆர்வம் அவருக்கு இருந்தது.

**டாக்டர் கால்டுவெல்:** தமிழ்நாட்டில் சமயப் பிர சாரம் செய்ய வந்த பாதிரியாவார். அவர் தமிழ் மொழியை மேல்நாட்டவர்க்கு உணர்த்தும் பொறுப்பை மேற்கொண்டார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன் னடம் முதலிய திராவிட மொழிகளுள் உள்ள ஒற்றுமை யைக் கண்டு இவற்றின் உறவுகளைக் காட்டித் திராவிட இன மொழிகள் என்று இவற்றை ஒற்றுமைப்படுத்திக் காட்டினர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற மொழிவிளக்க நூல் ஒன்று எழுதினர். இதுவே

திராவிட மொழிகளின் ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்கியது.

**வேதநாயகம் பிள்ளை** (*1826—1889*): என்பவர் நீதி நூல்கள் பலவற்றை இயற்றினர். சிறப்பாக பிரதாப முதலியார் சரித்திரம் (*1878*) சுகுண சுந்தரி கதை (*1887*) என்பவை தொடர்கதைகளாக அமைந்தன. தமிழ் முதல் நாவல் வேதநாயக பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே. இவர் கீர்த்தனைப் பாடல்களும் நீதி நூல்களும் சில இயற்றியுள்ளார்.

தேம்பாவணியின் போக்கைப் பின்பற்றி மற்ளெரு கிறித்தவக் காவியம் எழுந்தது; இது **கிருஷ்ண பிள்ளை** (*1827–1900*) என்பார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்பது. இது ஜான் பனியன் எழுதிய Pilgrims progress என்னும் நூலைப் பின்பற்றி மொழிபெயர்க்கப்பட்டது; இரட்சணிய மனோகரம் என்னும் பக்திப் பாடல்களின் தொகுப்பும் இவர் வெளியிட்டதாகும்.

இப்புதிய போக்கோடு பழமையும் ஓரளவு தொடர்பு பெற்றுக்கொண்டு விளங்கியது. *18*-ம் நூற்றாண்டில் தாயுமானவர் பாடல்களும் திரிகூட ராசப்பக் கவி ராயர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சியும், *19*–ம் நூற்றாண் டில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யின் பிரபந்தங்களும், இராமலிங்க அடிகளின் அருட் பாடல்களும் சிறுபிரபந்த நெறிகளையும் சமயப் பாடல் நெறிகளையும் காத்துப் புதுக்கிப் போற்றின. தாயுமா னவரும் இராமலிங்க அடிகளும் மீண்டும் பழைய மெய் யுணர்வுக் கருத்துக்களைச் சமரச சன்மார்க்க நெறிகளாக கப் புதுக்கிப் பக்தி யுணர்வும் தத்துவ மேன்மையும் பொருந்தப் பாடியவர்கள் ஆவர். தாயுமானவர் பாடல் கள் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களை உணர்த்துவன், அருட்பா, அருள் உள்ளம் தோன்றக் கல்லையும் கனிவிக்கும்

சொல்லும் உணர்வும் கொண்டு விளங்குகின்றன. மீனாட்சி சுந்தரம் பிள்ளை பழைய இலக்கியங்களைக் கற்றதன் பயனாகத் தல புராணங்களும் சிறு பிரபந்தங்களும் பாடிப் பழைய கவிஞர்களை மீண்டும் நினைவுக்குக் கொணரச் செய்தவர். இவர் பாடிய நூல்களுள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் மிகவும் பாராட்டப்படுகிறது.

ஆங்கில நாடகப் போக்கைத் தழுவி மனோன்மணியம் என்னும் நாடகத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை (1855—1897) எழுதினார், சூரிய நாராயண சாஸ்திரியார் (1870—1903) கலாவதி, ரூபாவதி, மானவிஜயம் என்னும் நாடகங்களை இயற்றினார். நாடக இலக்கண நூலாகிய 'நாடக இயல்' ஒன்றும் எழுதி வெளியிட்டார். இவர் தனித் தமிழ் நடையில் எழுதவேண்டும் என்ற கொள்கை யுடையவர். எனினும் வடசொற்கள். கலந்தே இவர் உரை நடையும் செய்யுள் நடையும் விளங்குகின்றன. பரிதிமாற் கலைஞன் என்று தன் பெயரையும் மொழிபெயர்த்து மாற்றி யமைத்துக்கொண்டார். தமிழ் மொழிவரலாறு என்ற புதிய துறையில் தமிழ் மொழியின் தோற்றமும் மொழியின்கண் அவ்வப்பொழுது ஏற்பட்ட மாற்றமும் ஆராய்ந்து காட்டுகின்றார். மொழி வரலாறு என்ற புதிய துறையைப் புதுக்கியவரும் இவரே.

ஆறுமுக நாவலர் (1822-1879) பள்ளிப் பாடங்களுக்கு உரைநடை நூலும், பெரிய புராணம் திருவிளையாடல் புராணங்களுக்கு வசனமும் எழுதித் தமிழ் உரை நடையை வளர்த்தவர். இராமலிங்க அடிகள் மனுமுறை கண்ட வாசகம் என்ற விரிவு நூல் எழுதித் தமிழ் உரைநடையைச் சீர்படுத்தினார். இந்நூற்றாண்டில் சிறுகதை இலக்கியங்கள் வளர்ச்சி பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**இருபதாம் நூற்றாண்டு :**

இந்நூற்றாண்டில் இலக்கியம் பொதுமை பெற்று எல்லாத் துறைகளிலும் இயங்கி வேகமாக முன்னேறி வருகிறது. மேடைப் பேச்சு இக்கால வளர்ச்சி எனலாம். சிறப்பாகப் புராணப் பிரசங்கங்களும், இலக்கியச் சொற்பொழிவுகளும், அரசியல் மேடைப் பேச்சுக்களும் பேச்சுத் தமிழை வளர்த்தன. இவற்றிற்குத் துணையாகச் செய்தி இதழ்களும் வார ஏடுகளும் திங்கள் வெளியீடுகளும் வெளிவரத் தொடங்கின. மறைமலை அடிகள், திரு வி. கலியாணசுந்தரனார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முதலியோர் இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றத் தொடங்கினர். திரு. வி. க. கற்றவரோடும் மற்றவரோடும் தூய தமிழில் பேசித் தெளிந்த தமிழ்நடையைப் பேச்சு நடையாக அமைத்தார். அவர் எழுதிய நூல்களுள் ஒருசில மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, தமிழ்த் தென்றல், பெண்ணின் பெருமை என்பனவாம். மறைமலை அடிகள் சிறந்த கட்டுரைகளுடன் இலக்கிய ஆய்வு நூல்களையும் நாடக மொழி பெயர்ப்புகளையும் அமைத்துத் தூய தமிழ்நடையைப் புதுப்பித்தார். வடசொற்களை எதிர்த்துப் புரட்சி செய்தவர்களுள் இவரே தலைமையானவர். சங்கவிலக்கியங்களைப் பயின்று விளக்கங்களைத் தந்த பெரியாரும் இவரே. இவர் எழுதிய நூல்களுள் ஒருசில குமுதவல்லி, சிந்தனைக் கட்டுரைகள், கோகிலாம்பாள் கடிதங்கள் மனிதன் நூறாண்டு வாழ்வது எப்படி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, தமிழர் நாகரிகம் முதலியவை.

செய்தித்தாள்களுள் சுதேசமித்திரன் மிகப் பழமையானது ; திரு. வி. க. தேசபக்தன் என்ற பத்திரிகையைத் துவக்கினார். பாரதியாரும் நவஇந்தியா என்ற பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். இவர்கள் இருவரும்

எழுச்சி மிக்க உயிர்த்துடிப்புள்ள நடையைச் செய்தித் தாளில் புகுத்தினர். கல்கி என வழங்கும் ரா. கிருஷ்ண மூர்த்தி தமிழ் படித்த பெரும்புலவர் அல்லர். அதுவும் ஓரளவு நன்மையாயிற்று. அதனுல்தான் எளிய தமிழில் அஞ்சாது எழுதும் துணிவும், மக்களுக்கு இலக்கியம் உரியது என்ற நெறியும், நகைச் சுவையும், கருத்துத் தெளிவும் எழுத்தாளனின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பது அவரால் காட்டமுடிந்தது. செய்தித் தாள்களில் நாட்டுப்பற்று மிக்க அரசியல் கட்டுரைகளை அவர் எழுதி வந்தார்; சிறு நிகழ்ச்சிகளைச் சிறுகதையாகவும் பெரிய கற்பனைகளைத் தொடர்கதையாகவும் எழுதி வெளி யிட்டார். பிறகு சரித்திர நாவல்களில் அவர் முயற்சி பெரிதும் வெற்றி கொடுத்தது. தமிழ் நாட்டுச் சரித்திர நாவல்களின் தந்தை என்று அவரைக் குறிப்பிடலாம்.

நகைச்சுவை, இலக்கியத்தில் மிகுதியாக இடம் பெறு வது இருபதாம் நூற்றுண்டிலேயே. நகைச்சுவை புராணப் பிரசங்கங்களில் மலிந்து இருந்தது; பிறகு அது பத்திரிகைகளில் நுழைந்தது. ஆனந்தவிகடன், பிரசண்ட விகடன், விஜயவிகடன், விகடரத்தினம் முதலிய நகைச் சுவை இதழ்கள் தோன்றின. இப்பொழுது வெளிவரும் பல பத்திரிகைகளும் நகைச்சுவைத் துணுக்குகளைத் தாங்கி வருகின்றன. சித்திரங்கள் பல பெற்று வாழ்வின் விசித் திரங்கள் காட்டப்படுகின்றன.

பழைய தமிழ் இலக்கியங்களின் நயங்களைச் சுவைபட எடுத்துக்காட்டித் தேமதுரத் தமிழோசையைத் தமிழின்ப மாகப் பொழிந்து கட்டுரைகள் பல எழுதிச் சொல்லின் செல்வராக விளங்கியவர் பேராசிரியர் ரா. பி சேதுப் பிள்ளை. தமிழின் பாமாணத்தை நாமணக்கப் பேசியும் கைமணக்க எழுதியும் தனக்கெனத் தனிநடை வகுத்து எதுகையும் மோனையும் எழில் பெற அமைத்து இனிய

களைப் படைத்தவர். வள்ளுவர், இளங்கோ, கம்பர் இவர்களை நாட்டுக்கு அறிமுகம் செய்துவைத்த நல்லறிஞர்; ஊரும் பேரும் கண்டறிந்து சொற்களின் பிறப்பியலைத் தெளிவுபடுத்தியும், பேச்சு மொழியின் வகைத் திரிபுகளை எடுத்துக்காட்டியும் மொழியியல் அறிவை ஊட்டிய பெரியார் இவர். கம்பரும், இளங்கோவும் இவருடையில் களிநடம் புரிவர். கட்டுரை இலக்கியத்தை வளர்த்த எழுத்தாளர்களில் ரா. பி. சேதுப்பிள்ளை முதன்மையானவர். இவர் எழுதிய நூல்களுள் ஒரு சில, தமிழின்பம், அலையும் கலையும், ஊரும் பேரும், சொற்களின் சிறப்பியல் (Words and their significance), திருக்குறள் நூல்நயம், தமிழ்நாட்டுப் பெண்மணிகள், கம்பராமாயணக் கட்டுரை முதலியன.

கவிதையிலும் ஒரு பெரிய மாற்றம் உண்டாகியது; கண்ணியும் சிந்தும் எளிய இசையோடு கலந்து பாரதியின் பாடல்களாக உருப்பெற்றன. சொல்லெளிமையும், சந்த இனிமையும் பெற்று விடுதலை உணர்ச்சியையும், நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் இவர் பாடல்கள் ஊட்டின.

இவர் ஏற்றிவிட்ட விளக்கை அணையாமல் மேலும் ஒளிவிடச் செய்தவர் பாரதிதாசன். சமுதாயச் சீர்குலைவையும் பிற்போக்குச் சக்திகளையும் சூறையாடுவன இவர் கவிதைகள். தமிழ் மொழியினிடத்தும் இனத்திடத்தும் தணியாக் காதல் ஊட்டுவன இவர் கவிதைகள். புதுவையில் வாழ்ந்த இக் கவிஞர் புரட்சிக் கவிஞர் எனப் பாராட்டப்படுகிறார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் அன்பும் அமைதியும் ஊட்டும் பாடல்கள் மலரும் மாலையுமாக விளங்குகின்றன. நாட்டுக் கவிஞர் எனப் பாராட்டப்பெறும் இராமலிங்கம் பிள்ளை நாட்டுணர்ச்சிப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

பழைய இலக்கிய ஏடுகளைத் தேடி அச்சிட்டுப் பதிப்புரைகள் வெளியிட்டு வெளிக்கொணர்ந்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர். அவர் பதிப்பித்த நூல்கள் வெளிவந்தபின் பழைய இலக்கியங்கள் பலரும் படிக்கக் கூடிய வகையில் பரவலாயின.

நாடக வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கியவர்களுள் பம்மல் சம்பந்த முதலியார் குறிப்பிடத்தக்கவர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பலவற்றைத் தழுவிப் புதிய தமிழ் நாடகங்கள் தமிழில் எழுதியுள்ளார். சபாபதி போன்ற பல புதிய நகைச்சுவை நாடகங்கள் எழுதிச் சிரிப்பைத் தந்து சிந்தனை ஊட்டியுள்ளார். நாடகத் தந்தை என்று நடிகர்களாலும் நாடகத்துறையில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்களாலும் இவர் பாராட்டப்படுகின்றார். இவர் நாடகங்களுள் மொழிபெயர்ப்பும் தழுவலுமே மிகுதி.

தமிழ் எல்லாத் துறைகளிலும் இயங்கிச் சிறந்து விளங்குகிறது. புதிய தேசீயப் பாடல்களும், சமூகச் சீர்திருத்தப் பாடல்களும் எளிய இனிய தமிழில் இயங்குகின்றன. பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும் ஒன்றி இயைந்து உயிர்த்துடிப்போடு விளங்கி நெகிழ்வும், நுட்பமும் பெற்று வளர்ந்து வருகிறது. சிறப்பாக நாடகம், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை என்ற பிரிவுகளில் தமிழ் பிரிந்து இயங்கி இலக்கியச் சிறப்புப் பெற்று வளர்ந்து வருகிறது.

**நாடக வளர்ச்சி**

இயல், இசை கூத்து என்று இயம்பப்படும் இம் மூன்றனுள் இறுதியாகக் குறிக்கப்படும் 'கூத்து' என்பதே இன்று 'நாடகம்' என்ற பெயரில் நாட்டில் வழங்கி வருகிறது.

நாடகம் இடைக்காலத்தில் இழிநிலை பெற்றிருந்த போதும் சங்ககாலத்தில் அது பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டது என்று தெரிகிறது. பல நாடக நூல்களின் பெயர்கள் இன்றும் அறியப்படுகின்றன. மாபுராணம், பூதபுராணம், முறுவல், சயந்தம் குணநூல், செயிற்றியம், பரதம், அகத்தியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் முதலிய பெயர்கள் அறியப்படுகின்றன. கூத்து என்று நடிக்கப்பட்ட நாடகப் பகுதிகள் சிலவற்றைச் சிலப்பதிகாரம் விளக்கிக் காட்டுவதுடன் நாடகமேடை, திரை, ஆடுவோர் இயல்புகள், மெய்ப்பாடுகள் முதலியவற்றையும் சிலப்பதிகாரஉரை விளக்கிக் காட்டுகிறது. இசைப்பாட்டும் உரையாடற் பகுதிகளும் கூத்தும் விரவி நாடகக் காப்பியமாகவும் சிலப்பதிகாரம் விளங்குகிறது. பழங்காலத்தில் தெய்வங்களை நினைவில் வைத்தே கூத்துக்களை அமைத்தனர் என்பது சிலப்பதிகாரத்தால் பெறப்படுகிறது.

காலம் மாற மாற நாடகக் கதையமைப்பும் எழுத்து நடையும் மாறிக்கொண்டே வந்தன. இராசராசன் காலத்து நாடகம் அரசனைப்பற்றி எழுந்தது குறிப்பிடத்தக்கது. இராசராசேசுவர நாடகம் என்பதைப் பற்றிய குறிப்புத் தஞ்சைப் பெரியகோயிலின் கல்வெட்டொன்றில் கிடைக்கிறது. அரசர்களைப்பற்றியும் நாடகங்கள் அமைத்தனர் என்று தெரிகிறது.

கி. பி. பதினேழாம் நூற்றூண்டில் நொண்டி நாடகங்களும், குறவஞ்சி நாடகங்களும் சில எழுதப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து 18, 19 ஆம் நூற்றூண்டுகளில் இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட 'இராம நாடகம்', 'பாரத விலாசம்' என்ற நாடகங்களை அருணசலக் கவிராயரும் இராமசந்திரக் கவிராயரும் முறையே எழுதினர். இதன் பிறகு குறவஞ்சி, விலாசம் முதலான பெயர்களில் பல

நாடகங்கள் எழுதப்பட்டன. குறவஞ்சிகளுள், குற்றாலக் குறவஞ்சியும், அழகர் குறவஞ்சியும், சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும் சிறப்புமிக்கன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தமிழ் நாடக உலகின் மறுமலர்ச்சிக் காலம் என்று கூறலாம். வடமொழி நாடக நூல்கள், ஆங்கில நாடக நூல்கள், ஆகியவற்றைத் தழுவித் தமிழில் பல நூல்கள் வெளிவரத் தலைப்பட்டன. தமிழ்நாடகங்களின் மரபான பலவகைத் துதிகள், அவையடக்கம், மங்களம் முதலானவற்றை நீக்கி, மேனாட்டு முறையிலேயே அங்கம், களம் என்ற பிரிவுகளுடன் நாடகம் எழுதினர் பல ஆசிரியர்கள்.

புராணநாடகங்கள் குறைந்து புதிய முறையில் மக்களைப் பற்றியும் சமுதாயத்தைப் பற்றியும் ஆசிரியர்கள் நாடகங்களை எழுத முற்பட்டனர். இம் முயற்சிக்கு முன்னோடியாக நின்றது காசி விசுவநாத முதலியார் எழுதிய 'டம்பாச்சாரி' நாடகம் ஆகும்.

நாடக உலகில் நடிக்கும் நாடகத்தினின்று படிக்கும் நாடகம் எழுதிக் கவிதைப் புரட்சி செய்தவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள். உலகம் புகழும் உயர்பெருங் கவிஞன் ஷேக்ஸ்பியரின் சீர்மைமிகு நாடகங்களைப் போல் செந்தமிழில் எழுத வேண்டுமென்ற வேணவா வினால் மனோன்மணியம் என்ற மங்காப் புகழ் மிகுந்த இனிய நாடகத்தை அகவற்பாவில் எழுதித் தமிழன்னைக் குப் படைத்துள்ளார். 'The Secret way' என்ற ஆங்கில நூலொன்றின் தழுவலாகிய இந்நாடகம் படிப்பதற் கென்று எழுதப்பட்டது. இக்காலத்தில் இது உரை நடையாக்கப்பட்டு நடிக்கவும்பட்டுள்ளது.

அவரைப் பின்தொடர்ந்து பரிதிமாற் கலைஞர் 'ரூபாவதி' 'கலாவதி' ஆகிய நூல்களை மேனாட்டு முறை யில் எழுதித் தமிழுலக்குத் தந்தார். இவை உரை

நடையில் அமைந்துள்ளன. பின், 'மானவிஜயம்' என்ற நாடகம் ஒன்றையும் அகவற்பாவில் எழுதினர்.

பரிதிமாற்கலைஞர் தமிழுக்கும் நாடகத்திற்கும் செய்த பெருந் தொண்டு அவர் எழுதிய 'நாடக வியல்' என்ற இலக்கண நூலாகும். இவர்களைப் பின்தொடர்ந்து ஷேக்ஸ்பியர் நாடங்கள் சில தமிழில் மொழி பெயர்க்கப் பட்டன; அவை மேடைகளிலும் நடிக்கப்பட்டன. காளி தாசனின் சாகுந்தலம், விக்ரமோர்வசியம், மாளவிகாக்னி மித்திரம் ஆகிய இவை தமிழாக்கப்பட்டன. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் 'மிருச்சி கடிகம்' என்ற வட மொழி நாடகநூலை 'மண்ணியல் சிறுதேர்' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். மறைமலையடிகள் 'சாகுந்தலம்' என்ற நாடகத்தைத் தமிழாக்கியதோடன்றிச் சிறந்த ஆய்வுரையும் எழுதினர்.

இப்பெரும் நாடகவாசிரியர்களுக்குப் பிறகு தமிழ் நாடக உலகில் பெருமையோடு குறிப்பிடத்தக்க பெரியார் பம்மல் சம்பந்த முதலியார் ஆவர். ஏறத்தாழ எழுபதுக்கு மேற்பட்ட ஏற்றமிகு நாடகங்களை எழுதிக் குவித்த தோடன்றி அத்துணை நாடகங்களையும் தாமே முன்னின்று மேடையில் நடித்தும் காட்டினர். தமிழ் நாடகஉலகில் பலவகை நாடகங்களை எழுதி அதன் போக்கையே மாற் றியவர் பம்மல் சம்பந்த முதலியார். சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், இதிகாச நாடகங்கள், புராண நாடகங்கள், கற்பனை நாடகங்கள் என்ற பலவகையான நாடகங்களையும் எழுதித் தலைசிறந்த நாடகப் பேராசிரியராகத் திகழ்கிறார் அவர் எழுதிய நாடகங்களுள் ஒரு சில பின்வருமாறு: மனோகரா, மகபதி, சபாபதி, காதலர் கண்கள், சிறுத் தொண்டர், வேதாள உலகம், சந்திரஹரி, கொடையாளி கர்ணன், பேயல்ல பெண்மணியே, ரத்தினவளி.

பம்மல் சம்பந்த முதலியார் தூண்டிய அந்த நாடக விளக்குப் பிறகு பலரால் ஒளிவீசத் தலைப்பட்டது. பல புதிய நாடகவாசிரியர்கள் தமிழுலகிற்கு அறிமுகமாயினர். சங்கரதாஸ் சுவாமிகள் பல புராண நாடகங்களையும் மொழிபெயர்ப்பு நாடகங்களையும் எழுதினர். நவாப் இரஜமாணிக்கம் நாடகக் குழுவினர் எண்ணற்ற நாடகங்களை நடத்தினர். பிறகு திரு. டி. கே. சண்முகம் இத் துறையைப் பெரிதும் வளர்த்தார் என்று கூறலாம்.

நாடக வகைகளுள் புதியதோர் வகை ஓரங்க நாடகம் எனலாம்; இவை ஏட்டிலும் வானொலியிலும் இடம் பெற்றுள்ளன. பொதுவாக இவை மேடைகளில் நடிப்பதற்கு வாய்ப்புப் பெறுவதில்லை. ஓரங்க நாடகங்கள் மிகுதியாக வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

புலவர்கள் உரிமையாக இருந்த நாடகங்கள் உரை நடை எழுத்தாளர்களின் கரங்களுக்கு வந்துவிட்டன. இக்கலை திரைச் சீலைக்கு வந்த பிறகு மிக விரைவில் வளர்ந்துவிட்டது. நாடகங்களில் கற்பனைக்குவிட வேண்டிய காட்சிகளை நேரில் காட்டும் சிறப்பே திரைக் கலையின் சிறப்பாகும். திரையின் வளர்ச்சியால் தனிநாடகங்கள் குறைந்துவிட்டன என்றாலும் தமிழ் நடிகர்கள் அவற்றைப் போற்றிக் காக்கும் வகையில் சிறந்த நாடகங்களை அவ்வப் பொழுது நடித்து வருகின்றனர். திரைப்படங்களைவிட நாடகங்களே இப்பொழுது மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்கின்றன.

**நாவல்கள் :**

உரைநடையின் வேகமான வளர்ச்சியோடு நாவலும் உடன் வளர்ந்தது; காவியத் தொடர்நிகழ்ச்சிகளும், பண்பு நலன் பொருந்திய பாத்திரப் படைப்பும், வருணனையாலும் உரைநடையில் நாவலாக உருவெடுத்தன. இந்த

இருபதாம் நூற்றூண்டின் இலக்கியவளர்ச்சியில் நாவல் சிறந்த இடம் பெற்றுள்ளது.

ஒருவன் தன்வாழ்வில் கண்டு அல்லது கேட்டு அனுபவித்து உணர்ந்த உணர்வைக் கதைவடிவில், பாத்திரங்களையும், சுவை மலிந்த நிகழ்ச்சிகளையும், அளவுக்கு மீருத உரையாடல்களையும் கொண்டு அழகிய நடையில் எழுதிக் காட்டுவதே நாவல் என்பது இக்காலத்தவர் நாவல் என்ற சொல்லுக்குக் கொள்ளும் பொருளாகும். நாவல் என்பது புதுமை என்ற பொருளில் தோன்றிய ஆங்கிலச் சொல். இச்சொல் லத்தீன் மொழியிலிருந்து படைக்கப்பட்ட ஒன்று ஆகும்; இதனைத் தமிழில் 'புதினம்' என்று சொல்லாக்கம் செய்துள்ளனர். ஒவ்வொரு படைப்பிலும் ஏதாவது புதுமையமைந்தால்தான் அவை நாவல் என்பதற்குத் தகுதியும் சிறப்பும் பெறுகின்றன.

நாவல் தோன்றுவதற்கு வேண்டிய அடிப்படைகள் இந்நாட்டில் ஏற்கனவே பொதிந்து கிடந்தன. இராமாயண பாரதக் கதைகளும், பஞ்சதந்திரக் கதைகளும், விக்கிரமாதித்தன் கதைகளும், புராணக் கதைகளும் தொடர்கதைகளாக விளங்கின. மேலைநாட்டுத் தொடர்பால் நாவல் எழுதும் பழக்கம் தமிழ்நாட்டிலும் தோன்றி வளர ஆரம்பித்தது. தமிழ்நாவலின் தந்தையாகப் போற்றப்படும் வேதநாயகம் பிள்ளை 1876-ல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலை எழுதினுர். இதுவே முதல் தமிழ்நாவல்.

இதில் வரும் கதைமாந்தர் யாவரும் அன்றுட வாழ்வில் நாம் கண்டு பழகும் மனிதரைவிட உண்மையானவராய் இருக்கின்றனர். நடையும் நகைச்சுவை மலிந்ததாக உள்ளது. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் கதையாக இது விளங்குகிறது. 'நாவலில் காணக்கூடாத

கதைகளும் விடுகதைகளும் தெய்விகமாய் நேரும் நிகழ்ச்சி களும் காணப்படுவதால் சில இடங்களில் விக்கிரமா தித்தன் கதை போன்ற பழைய காலக் கதைகள் போலத் தோன்றும்; ஆயினும் நல்ல நயமான உரைநடையும் பொருட்செறிவும் நகைச்சுவையும் உடையது.'*

வேதநாயகம் பிள்ளை எழுதிய மற்றொரு நாவல் 'சுகுண சுந்தரி' என்பதாகும்.

இதனையடுத்துச் சுமார் இருபது ஆண்டுகட்குத் தமிழில் நாவல்கள் தோன்றவில்லை. எனினும் இந்தக் காலத்தில்தான் ஏனைய இந்திய மொழிகளிலெல்லாம் நாவல்கள் பூத்துக் குலுங்கத் தொடங்கின.

'விவேக சிந்தாமணி' என்ற இதழில் 1893—ல் தொடர்கதையாக வெளிவந்த 'கமலாம்பாள் சரித்திரமே' தமிழில் எழுந்த அடுத்த நாவலாகும். இதன் ஆசிரியர், பி. ஆர். ராஜமையர் ஆவார். இந்த நாவலில், நிகழ்ச்சி கள் ஒழுங்கும், கதைமாந்தர் படைப்பும், கதையோட்டமும் சிறப்புற அமைந்துள்ளன. மதுரையை மையமாக வைத்து எழுதப்பட்ட இந்நாவலில்வரும் கமலாம்பாள், முத்துசாமி, லட்சுமி முதலிய கதைமாந்தர் படிப்போர் நெஞ்சில் நிற்பர்; நகைச்சுவையும் வேண்டிய அளவு உள்ளது. அக் காலத்துச் சமுதாயச் சூழ்நிலையை இந்நாவல் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. ராஜமையர் எழுதிய கமலாம் பாள் சரித்திரம் என்னும் நாவல்தான் நாவல் பண்பு களுடைய முதல் தமிழ்நாவல் என்று கூறலாம்.

இவருக்குப் பின் அ. மாதவையா எழுதிய 'பத்மாவதி சரித்திரம்,' 'விஜய மார்த்தாண்டம்' ஆகிய நாவல்களும், பண்டித நடேச சாஸ்திரி எழுதிய 'தீனதயாளு,' 'திக் கற்ற இரு குழந்தைகள்,' 'மதி கெட்ட மனைவி' முதலிய

---

*கலைக்களஞ்சியம்—நாவல்.

நாவல்களும், பரிதிமாற் கலைஞர் எழுதிய 'மதிவாணன்' என்ற சிறு நாவலும் தமிழ்நாவல் உலகை அணிசெய்ய வந்தன.

ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், ரங்கராஜு, வை. மு. கோதைநாயகி அம்மாள் ஆகியோர் மேலைநாட்டு நாவல்களைத் தழுவித் துப்பறியும் நாவல்கள்போல் நிறைய எழுதிக் குவித்தனர். இவை தமிழ்நாவல் படிப்போரின் எண்ணிக்கை உயரக் காரண மாயின.

இவர்களுக்குப் பின்வந்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி தமிழ் நாவல் உலகுக்குத் தரமான வாசகர்களை மிக்க அளவில் தேடித் தந்தவர் ஆவார். இவருடைய 'கள்வனின் காதலி', 'கல்கி' என்ற வார இதழில் தொடர்கதையாக வந்தபோது ஆயிரக்கணக்கான வாசகர்கள் ஆவலுடன் வாரந்தோறும் படித்துவந்தனர். பல சிறந்த தமிழ் நாவல் கள் தொடர்ந்து வெளிவர இது காரணமாயிற்று.

இதற்குப்பின் தமிழ் நாவல்கள் எழுதுவோரின் எண் ணிக்கையும், படிப்போரின் எண்ணிக்கையும் பெருமளவில் பெருகத் தொடங்கின.

**நாவல் வகைகள் :**

எதையும் பாகுபடுத்திக் காண்பதிலேயே மனித அறிவு பெருமிதம் கொள்கிறது. நாவல்களையும் சில வகைகளாகப் பகுத்துக் காணமுடியும். (1) சமூக நாவல் கள், (2) வரலாற்று நூல்கள், (3) துப்பறியும் நாவல்கள், (4) பிறமொழி நாவல்கள்.

**சமூக நாவல்கள் :**

சமூகத்தில் நிலவும் பலப்பல சிக்கல்களைப் பின்னணி யாகக் கொண்டு, நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கதைமாந் தரைப் படைத்து எழுதப்படுவன சமூக நாவல்கள் ஆகும்.

இவ்வகை நாவல்களில் வாழ்க்கையின் பல்வேறு நிலை களும் விளக்கப்படுகின்றன. இளம் விதவைகளின் கொடுமைகளைக் காட்ட எழுந்தது வ. ரா. வின் 'விஜயம்'; சமூகச் சிக்கல்களை அடிப்படையாகக்கொண்டு எழுந்த டாக்டர் மு. வரதராசனாரின் நாவல்கள் கள்ளோ காவி யமோ, கரித்துண்டு, பெற்ற மனம், நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு முதலியன. 'அகல் விளக்கு' சாகித்திய அகாடமியின் பரிசு பெற்றுள்ளது. குறையுள்ள வாழ்வைச் சித்திரித்து நிறையுள்ள குறிக்கோள்களைக் காட்டுவன இவர் நாவல்கள். 'பெண்' 'வாழ்வு எங்கே' 'சிநேகிதி' 'நெஞ்சின் அலைகள்' முதலியன அகிலனின் சமூக நாவல் களாகும். 'பாவை விளக்கு' இவருடைய நாவல்களில் தலைசிறந்ததாகும். விடுதலை பெறுவதற்கு முன்னும் பின்னும் உள்ள காலத்தை மையமாக வைத்து எழுதப் பட்ட நாவல் 'புது வெள்ளம்' ஆகும். திரு. நா. பார்த்த சாரதியின் 'குறிஞ்சி மலர்' 'பொன் விலங்கு' சிறந்த நடையில் எழுதப்பட்ட நாவல்களாகும்.

குடும்பச் சூழ்நிலையை வைத்தே பல நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. 'லட்சுமி' இதில் தலைசிறந்தவர் எனலாம். 'காஞ்சனையின் கனவு', 'பெண் மனம்', 'அடுத்த வீடு', 'மிதிலா விலாஸ்' முதலியன இவருடைய சில நாவல்கள்.

ஏழைகளின் வாழ்வைச் சித்திரித்துக்கொண்டிருந்த நிலைமை மாறிச் செலவர்களின் வாழ்வும் உயர்வும் காட்டுகின்ற நாவல்களே இப்பொழுது பெரும்பாலும் வெளிவருகின்றன. எழுத்தால் ஏழைகளின் வாழ்வை உயர்த்த முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது; அது வெறும் கற்பனையாகிவிட்டது. பணக்காரர்களின் வாழ் விலேயே புதுமைகள் பல நிகழ்கின்றன. அப்புதுமைகள் கதை எழுதுவோருக்குப் புதுமை அனுபவங்களைத் தரு கின்றன.

**வரலாற்று நாவல்கள் :**

சமூக வாழ்வில் தோன்றும் சிக்கல்களை நாவல்கள் தீர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டதாலும், கதை யெழுது வதற்கு வேண்டிய தொடர்நிகழ்ச்சிகளில் புதுமை தோன் ருமையாலும் தமிழ் நாவலாசிரியர்கள் சரித்திரக்கதைகள் எழுதுவதில் திரும்பினர்; அவற்றில் அவர்கள் கற்பனை முழுவதும் பயன்படுத்த முடியும். வீரம், காதல், சூழ்ச்சி, போர் முதலிய காவிய நிகழ்ச்சிகளை அவற்றில் அமைத் துக் காட்ட முடிகிறது. அவர்கள் விரும்பும் பாத்திரங் களைப் படைக்க முடிகிறது. சரித்திர நாவல்கள் எழுதி நாவல் சரித்திரத்தில் இடம்பெற்றவர்களுள் கல்கி தலைமையானவர். 'தமிழ் வரலாற்றுநாவல்களின் தந்தை' என்று போற்றப்பெறும் கல்கி அவர்கள் 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்', 'பார்த்திபன் கனவு' ஆகிய மூன்று சிறந்த வரலாற்று நாவல்கள் எழுதியுள் ளார். திரு. அரு. ராமநாதனின் 'வீரபாண்டியன் மனைவி' யும், ஜெகசிற்பியனின் 'நந்திவர்மனின் காதலி' 'திருச்சிற் றம்பலம்' முதலிய நாவல்களும், சாண்டில்யனின் 'மன்னன் மகள்', 'கன்னிமாடம்,' 'யவன ராணி' முதலிய நாவல் களும், அகிலனின் 'வேங்கையின் மைந்த'னும் குறிப்பிடத் தக்க சிறப்பு வாய்ந்தனவாகும்.

**துப்பறியும் நாவல்கள் :**

தமிழில் இவ்வகை நாவல்கள் மலிந்துள்ளன. குற்ற மும் அதனைச் செய்வோரின் மறைவும், அக்குற்றங்களைத் துப்புக் கண்டு வெளிக் கொணர்தலும், கொலை, காதல், சூழ்ச்சி முதலியன அமைய விறுவிறுப்போடு செல்லும் இயல்பினவாம்; திடுக்கிடும் சம்பவங்களும், அதிர்ச்சி தரும் வருணனைகளும் இவற்றில் இடம் பெறுகின்றன. மேதாவி, சிரஞ்சீவி, ஆர். எஸ். மணி முதலியோர் அநேக

நாவல்கள் எழுதியுள்ளனர். வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமே இவ்வகை நாவல்கள் பயன்படுகின்றன.

**பிறமொழி நாவல்கள் :** பிறநாட்டு நல்லறிஞர் நாவல்களும், பிறமொழி நாவல்களும் தமிழில் பல, மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருகின்றன. மராத்தி நாவலாசிரியரான திரு. காண்டேகர் எழுதிய 'சுகம் எங்கே' 'வெறும் கோயில்,' 'புயலும் படகும்,' 'வெண்முகில்', 'இரு துருவங்கள்', 'கிரௌஞ்சவதம்' முதலியன தமிழர் உள்ளத்தில் சிறந்த இடம்பெற்றுள்ளன. திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. இவற்றை மொழிபெயர்த்துள்ளார். உருவகக் கதைகளில் உயர் புகழ் பெற்றவர் காண்டேகர். இவையேயன்றி மலையாள, கன்னட, வங்க, ஆங்கில, ருசிய, பிரஞ்சு நாவல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன.

**சிறுகதை**

மேனாட்டுத் தொடர்பால் தமிழ் இலக்கிய வளர்ச்சி புதுமைவளம் பெற்றது. புதுப்புது இலக்கிய வடிவங்கள் எழுந்தன; அவை நாவல், சிறுகதை, ஓரங்க நாடகம் என விரிந்தன. அவற்றுள் சிறுகதையும் ஒன்று.

எட்கார் ஆலன் போ என்ற அமெரிக்க அறிஞரே தற்காலச் சிறுகதைக்குத் தந்தையெனப் பாராட்டப்படுகின்றார். என்றாலும் சிறுகதையின் கூறுகள் மிகப் பழங்காலந் தொட்டே மக்கள் உள்ளத்திலும் இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளன. கதை சொல்வதும் கதை கேட்பதுமாகிய பண்பு மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே நிலவி வருகின்றது. நம்நாட்டு மொழிகளில் உள்ள இலக்கியங்களில் கலித்தொகை அகநானூறு முதலிய பாடல்கள் சிறு நிகழ்ச்சிகளைக் கதை வடிவில் கூறின. வடமொழியில் எழுந்த இராமாயணம், பாரதம், பாகவதம், பஞ்சதந்திரம் போன்றவைகளைக் கதைச் சுரங்கங்களென்று கூறலாம். இவைகளெல்லாம்

நம் நாட்டுப் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு எழுத்திலும் செவிவழியும் வழங்கப்படுகின்றன. புராணங்களும் காவியங்களும், சிறுகதைகளையும் நெடுங்கதைகளையும் உதவின. மிகப் பண்டைக்காலம் தொட்டே கதை கூறும் இயல்பும், சிறுகதையின் கூறுபாடுகளும் மக்களிடத்தில் இடம்பெற்றிருந்தன ; என்றாலும் தனக்கெனத் தனிப் பண்பும், வடிவும் பெற்றது தற்காலத்தில்தான் என்று துணிந்து கூறலாம்.

" சிறுகதை என்பது வாழ்க்கை உண்மைகளின்மேல் செய்யப்பட்ட ஒட்டுவேலை" என்பது ஒருசிலர் கோட்பாடு.

"வாழ்க்கையை ஒட்டிப் பொய்சொல்வதே சிறுகதை" இது வேறுசிலர் கொடுத்த விளக்கம்.

"சிறுகதை உரைநடையில் அரைமணி முதல் இரண்டுமணிக்குள்ளாகப் படித்து முடிக்கக்கூடிய இலக்கிய வடிவம்" என்பது ஆலன்போவின் கூற்று.

தொகுத்துக் கூறினால், ஒரு நோக்கமும், ஒரு விளைவும் உடையதாக இருக்க வேண்டும். இவையே சிறுகதையின் இரண்டு இன்றியமையாத அடிப்படைகள் என்கிறார் அட்சன்.

இந்த அடிப்படையில், அமெரிக்காவில் எட்கார் ஆலன்போவும் ஓ'ஹென்றியும், இங்கிலாந்தில் ஸ்டீவன்ஸனும், பிரான்ஸில் மாப்பசானும், ருஷியாவில் செக்காவ்வும் டால்ஸ்டாயும் சிறுகதைகளை எழுதிக் குவித்தனர். இதே இலக்கண அடிப்படையோடு தமிழ் இலக்கிய வளர்ச்சியில், சிறுகதையும் தலையெடுத்து வளரலாயிற்று. ஆனால் முதன்முதலில் சிலர் எழுதிய கதைகளில் முற்றிலும் இந்த ஒழுங்குமுறை இல்லாது போயினும், இன்று வெளிவருகின்ற பண்பட்ட சிறுகதைகளுக்கு அவை வழிகாட்டியாகவும் வளர்வதற்கேற்ற உரமாகவும் அமைந்தன.

முதன் முதலில் சிறுகதைப் போக்கில் தம் கருத்துக்களை வெளியிட்டுச் சென்றவர் என வீரமாமுனிவரைக் குறிப்பிடலாம். கிருத்துவ வணக்கம், கிருத்துவ வேத உபதேசம், பரமார்த்த குரு கதைகள் ஆகியவை அவர் எழுதிய சிறுகதைப் போக்கில் அமைந்த நூல்களாம். முன்னவை இயேசு பெருமானின் பெருமைகளை விளக்குகின்றன. பரமார்த்த குரு கதை நகைச்சுவை நிறைந்து பஞ்சதந்திரம் போன்று பல நீதிகளை உரைக்கின்றன. இக்கதைகளில் நீதிகளே முதலிடம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து மறைந்த வ. வே. சு. ஐயர், ஆங்கிலநாட்டுச் சிறுகதைகளைக் கண்டு தமிழிலும் அவைபோன்ற சிறுகதைகள் முகிழ்க்க வேண்டுமென விழைந்தார். தாமே வழிகாட்டியாக நின்று, 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டார். பாரதியாரும் சில சிறுகதைகளை எழுதியுள்ளார். எனினும் அவர் அத்துறையை வளர்க்கவில்லை.

மாதவையர் சிறுகதைத் துறைக்கு ஓரளவு தன் பங்கைச் செலுத்தியுள்ளார். சீர்திருத்த மனப்பான்மையுடன் எழுந்தவை அவரது 'குசிகர் குட்டிக் கதைகள்'. அவருடைய கதைகளில், கலைத்திறன் குறைவு. ஆனால் சீர்திருத்த வேகம் மிகுதி.

புதுமைப்பித்தன் காலத்துக்குப்பின் தான், சிறுகதைகள் வேகமாகவும், விறுவிறுப்பாகவும், சிறுகதைக்குரிய அமைதிகளுடனும் வெளிவரலாயின. நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள புதுமைப்பித்தன், ஓர் இலக்கியப் புரட்சியே செய்கிறார். கடவுளைக் கந்தசாமிக்காகக் கடைத்தெருவிற்கு இழுத்துவருகிறார். காப்பியக் கதைகளைச் சற்று மாற்றி மெருகூட்டி

'அகலிகை'யை எப்பொழுதும் கல்லாகவே கிடக்கு மாறு செய்கிறார். 'எனக்குப் பிடித்தவர்களையும், பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்துகொண்டிருக்கிறேன்' என்று துணிந்து கூறித் தன் தனிப்போக்கை நிலைநாட்டுகிறார். மனித வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு அவற்றுக்காக மனம் உருகுகிறார் புதுமைப்பித்தன். மக்கட்குலத்தின் அறியாமையும், மனமாசும், ஏற்றத் தாழ்வுகளும், முரண்பாடும், துயரங்களின் அவலமும் இவருடைய கலைநோக்கிலே கதையூற்றுக்களாகத் தோற்றமளிக்கின்றன. இவற்றைத் தமது எழுத்திலே தேக்கி மனிதனைச் சிந்திக்க வைக்கிறார் புதுமைப்பித்தன். இவருடைய நகைச்சுவையிலும் மனிதகுலத்தின் துன்பம் மறைந்திருக்கிறது. இவருடைய நடையில் வடசொற்களும், ஆங்கிலச் சொற்களும் பின்னிப் பிணைந்துள்ளன. எனினும் அவை நடையின் ஓட்டத்தைத் தடைசெய்யவில்லை. திருநெல்வேலிப் பகுதி வழக்குச் சொற்கள் இவருடைய நடையில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

புதுமைப்பித்தனோடு ஒருசேர வைத்து எண்ணத்தக்க சிறுகதை எழுத்தாளர் கு. ப. ராஜகோபாலன் ஆவார் இவர் உணர்ச்சிமிக்க சிறுகதைகளை எழுதியவர். நெஞ்சை அள்ளும் தொடக்கமும் நினைவை விட்டகலா முடிவும் கொண்ட பல கதைகளை இவருடைய எழுதுகோல் உருவாக்கியுள்ளது. உள்ளத் துடிப்பை மிகச் சிறப்பாகத் தீட்டுவதில் முதன்மையில் நிற்கிறார் என்று சொல்லலாம். கதை செல்லும் உணர்ச்சிக் கேற்ப நடையும் செல்கிறது.

"ரெயில் வண்டி வெறி பிடித்தது போல் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தது. எங்கேயோ சென்னையில் விடியப் போகும் ஒரு காலையை நோக்கிக் கனவேகமாகப் போய்க் கொண்டிருந்ததுபோல் இருந்தது" என்பது 'விடியுமா?'

என்னும் கதையில் இடம்பெறும் ஒரு பகுதி. கதையில் துயர உணர்ச்சிக்கேற்ப நடையும் அமைந்துள்ளது.

கடிதங்களைக் கொண்டே சிறுகதைகளை எழுதும் போக்கும் முதன்முதலில் இவருடைய கதைகளில் காண முடிகின்றது. மிகச் சாதாரண நிகழ்ச்சிகளைக்கூடக் கதையாக ஆக்குவதில் வல்லவராகத் திகழ்கிறார் இவர். "மிருதுவான பாஷையில் கம்பீரமான உணர்ச்சியை வளர்ப்பதில் ராஜகோபாலன் தனிப்பட்ட கலைஞன்" என்பது வ. ரா. வின் கருத்து.

சிறந்த வரலாற்று நாவல் ஆசிரியராகத் திகழ்ந்த கல்கி பல சிறுகதைகளை எழுதியுள்ளார். கல்கியின் கதைகளில் சிக்கலை வளர்த்துச் செல்லும் முறையும் அவற்றை விடுவிக்கும் போக்கும் சிறப்பாக உள்ளன. சாரதையின் தந்திரம் என்ற சிறுகதை இளைஞர்களைச் சீர்திருத்திச் சமூகத்தொண்டு செய்யும்படி தூண்டுகிறது. நகைச்சுவை இடையிடையே தோன்றப் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் அமைந்துள்ளன.

தற்பொழுது வாழும் சிறுகதை ஆசிரியர்களில் ஜெய காந்தன், ஜெகசிற்பியன், அகிலன், கருணாநிதி முதலிய வர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜெயகாந்தனின் கதைகள் உலகத்துச் சிறுகதைக ளோடு போட்டியிடவல்லன. "யாருக்காக அழுதான்?"— இது மிகச் சிறந்ததாக விளங்குகிறது. நாயின் உள்ளத் தைக்கூடக் கதையாக வடிக்கும் திறமை வியந்து பாராட் டற்குரியது. உணர்ச்சிச் சிறப்பும் தெளிவும் உடையது இவருடைய கதைகள். புதிய கருத்துக்களையும், கொள் கைகளையும் புகுத்தும் இயல்பினர் இவர்.

ஜெகசிற்பியனை 'நரிக்குறத்தி' இலக்கிய உலகத்தில் நல்ல சிறுகதை ஆசிரியராக அறிமுகப்படுத்தியுள்ளது

ஒவ்வோர் இனமக்களின் வாழ்க்கையையும் நன்கு அறிந்து சிறுகதைகளாக வடித்துள்ளமை சிறப்புடையதாகும்.

அகிலனின் 'குழந்தை சிரித்தது நல்ல சிறுகதைத் தொகுதி. அரியலூரில் புகைவண்டி கவிழ்ந்ததை அடிப் படையாகக் கொண்டு 'குழந்தை சிரித்தது' என்ற சிறுகதையை உருவாக்கியுள்ளார். நல்ல கற்பனை வளமும், கைவண்ணமும் இவருடைய சிறுகதைகளில் தெரிகின்றன. தந்தச் சிமிழுக்குள் சிற்ப வேலை செய்வது போன்றது சிறு கதை என்ற இவருடைய கருத்துக்கு இவரே சான்றாக விளங்குகிறார்.

கருணாநிதி சிறுகதைஉலகிலே புதிய நடையைக் கையாண்டு புதுமைவிளைவித்துள்ளார். அவருடைய நடை ஓரளவு பாட்டைப் போன்றே உள்ளது. அவருடைய 'தேனலைகள்' என்ற சிறுகதைத் தொகுதி அவர் எழுத் தின் அலைகளாம்.

தற்போது எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றியுள் ளனர். ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், குமுதம் முத லிய இதழ்களில் சிறுகதை எழுதுவதை இவர்கள் தம் பொழுதுபோக்காகக் கொண்டு சிறந்த கலைப்படைப்புகளை அளித்து வருகின்றனர். வேறு பிற தொழில்களிலும் துறைகளிலும் ஈடுபட்டவர்கள் தம் அனுபவங்களை வடித் துச் சிறுகதையாக்கிப் பொழுதுபோக்கான ஒரு கலையாக வளர்த்து வருகின்றனர்.

மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் பல தோன்றியுள் ளன. க. ந. சுப்பிரமணியம் 'கடல் முத்து' என்ற மொழி பெயர்ப்புச் சிறுகதை ஒன்று எழுதியுள்ளார். புதுமைப் பித்தன் சில வெளிநாட்டுக் கதைகளை மொழிபெயர்த் துள்ளார். காண்டேகர் சிறுகதைகள் ஒருசில தமிழில் மலர்ந்து மணம் பரப்புகின்றன. சிறுகதைகள் பெரும்

பாலும் காதலினையே கருவாகக் கொண்டு எழுதப்படு கின்றன. இப்போக்குத் தற்போது சற்று மாறத் தொடங்கி யுள்ளது.

**கவிதை**

ஏனைய துறைகளில் புதுமையும் பொதுமையும் பெற்றுத் தமிழ் வளர்ந்ததைப் போலவே கவிதையிலும் ஒரு திருப்பு நிலையை இருபதாம் நூற்றாண்டில் பெற்றுள்ளது.

இக்காலக் கவிதைகள் ஏனைய துறைகளைப் போல மக்கள் வாழ்வின் சீர்மையை எடுத்துப் பேசுகின்றன. அரசர்களின் அரியாசனத்தில் அமர்ந்த கவிதை மக்கள் உள்ளத்தில் சரியாசனம் பெற்று விளங்குகிறது.

வாழ்க்கையோடு இயைந்த வளமான கற்பனைகளும், கருத்துக்கிசைந்த கனிந்த நடையும், இனிமை தவழும் எளிய சொற்களும், பண்ணொடு கலந்து படிப்பதற்கேற்ற சிறிய வடிவமைப்புகளும் இந் நூற்றாண்டுக் கவிதைகளின் சிறப்பியல்புகளாகும். வாழ்வின் குறைகளை எடுத்துக் காட்டி நிறைவுபெறுவதற்கு வேண்டிய வழிகளைக் கூறி மறுமலர்ச்சிக் கவிதைகளாக இவை விளங்குகின்றன.

மறுமலர்ச்சிக் கவிதைகளின் தந்தையாக பாரதி (1882—1921) விளங்கிப் புத்தம் புதிய கவிதைகளை நித்தம் வளரும் அறிவோடு இயைத்து, இசையோடு இயைந்த சந்தக் கவிதைகளை இயற்றி எழுச்சியும் விழிப்பும் ஊட்டியது குறிப்பிடத்தக்கது. பாரதி பிறந்தார்; கவிதை புத்தொளிபெற்றுக் களிநடம் புரிந்தது. கற்றோரும் மற்றோரும் அழகு மிக்க இக்கவிதைகளில் தம்உள்ளத்தைப் பறிகொடுத்தனர்.

தமக்கு முன்பு வாழ்ந்து மறைந்த தமிழ்க் கவிஞர்கள் ஏடுகளில் விட்டுச் சென்ற உணர்ச்சியாற்றலையும், கருத்துக் குவியலையும் வகையாகப் பயன்படுத்திக்கொண்டார்

கவிஞர் பாரதி. தமது பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டுமென்று அவர் துடியாய்த் துடித்தார். "ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்று அவர் மயங்குகிறார். "நமக்குத் தொழில் கவிதை" என்ற குறிக்கோளை அவர் உயிரென ஓம்பிக் காத்தார். கவிஞர் பாரதியின் இந்த உணர்ச்சித்துடிப்பும் உள்ள மயக்கமும், உயர்க்கொள்கையும் தமிழ்க் கவிதை மறுமலர்ச்சிக்கு ஆக்கம் அளித்தன.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் மறுமலர்ச்சிக்குப் பாரதியே முழுப்பொறுப்பாளி என்று கூறிவிடலாம். என்றாலும் பழமையின் பின்னணி அவருக்குப் பெரிதும் உதவியது என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. பழமையில் ஊறித் திளைத்துப் பெற்ற கவிதை அனுபவத்தைத் தாம் அமைக்கப்போகும் புதுமைப்போக்குக்கு உரமாகப் பயன்படுத்திக்கொண்டார். அதன் காரணமாகவே புதுமைக் கவிதைகள் செப்பமும் உரமும் பெற்று உயர்ந்து விளங்குகின்றன. இதற்கு ஒரு சான்று பின்வருமாறு :

கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துளே

என்பது சிவவாக்கியர் பாடல் முழக்கம். சிவவாக்கியரின் சீர்திருத்தக் கவிதை பாரதியாரின் கவிதையில் புதிய வடிவம் பெறுகிறது.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்—பல்
லாயிரம் வேதம் அறிவு ஒன்றே தெய்வம் உண்டு
ஆமெனில் கேளீரோ ?

பாரதி அதே கேள்வியைக் கேட்கக் காண்கின்றோம்.

அந்நியரின் அடிபணிந்து குற்றேவல் புரிந்து உணர்ச்சி அற்றுக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பி உரிமை வேட்கையை உணர்த்தியவை பாரதியாரின் பாடல்கள்.

'விதந்தரு கோடி யின்னல் விளைந்துஎனை
நலிந்திட்டாலும்
சுதந்திரதேவி உன்னைத் தொழுதிடல் மறக்கிலேனே'

என்பது போன்ற பாடல்கள் உரிமை வேட்கை உணர்த்தும் பாடல்களாம்.

'வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ'

என்று தாய்மொழிப்பற்று அற்றுக் கிடக்கும் கடையரை ஓட ஓட விரட்டுகிறார்.

'' நீதி நூறு சொல்லுவாய் கா சொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ'

என்று கயவர்களின் கயமையைக் கடிந்து ஓட்டுகிறார்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் இந்தப் போராட்டப் பண்பு பாரதியோடு மங்கிவிடவில்லை. அது மேலும் ஓங்கியது. பாரதிதாசன் எழுதுகோலிலும் தீப் பொறிகள் பறந்தன. பாரதி பாடத் தவறிய சமுதாயக் கேடுகளை அவருடைய சீடர் சாடத் தவறவில்லை. இளங் கைம்பெண்களின் துயரத்தைப் பாரதிதாசன் படம் பிடித்துக் காட்டுகிறார். அந்தத் துயரத்தைக் களைய வேண்டியது அறிவு படைத்த ஆண் சமுதாயத்தின் கடமையல்லவா என்று கேட்கிறார். கன்னிப் பெண்களுக்குக் கருத்து மிக்க அறிவுரைகள் கூறுகிறார்.

கலியாணம் ஆகாத பெண்ணே—உன்
கதிதன்னை நீ நிச்சயம் செய் கண்ணே

என்று தொடர்ந்து பல அறிவுரைகள் கூறுகின்றார்.

கல்லென உன்னை மதிப்பார்—கண்ணில்

கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார் ;
வல்லி உனக்கொரு நீதி—தந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்சவேண்டாம்
...........................
...........................
சுற்றத்திலே முதியோர்கள்—இவர்
சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்.
கற்றவளே ஒன்று சொல்வேன்—உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன் !"

அளவுக்கு மீறி அதிகமான குழந்தைகளைப் பெற்றுத் தவிக்கும் தரித்திரர்களுக்குத் தகுதியான அறிவுரை கூறுகின்றார் :

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம் ?

என்று வினா எழுப்புகிறார். காலத்துக்கேற்ற கருத்துக்களை உணர்ச்சிக் கனல் மணக்க அள்ளி வீசுவது பாரதிதாசன் கவிதைகளின் தனிப்போக்காகும். சமுதாயப் புரட்சி விளைவிக்கும் கவிதைகளில் இதனினும் மேலான கவிதையைப் பார்க்க முடியாது :

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
    உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
    ஒப்பப்ப ராகிவிடுவார் உணரப்பா நீ

இவர் பாடிய நூல்களுள் ஒருசில இவை: **புரட்சிக் கவி, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, குறிஞ்சித் திட்டு, எதிர்பாராத முத்தம்** முதலியன.

இவ்விருவரே யன்றிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, காமக்கல் இராமலிங்கம் பிள்ளை, கவி யோகி சுத்தானந்த பாரதி ஆகியவர்களும் இந்த நூற்றாண்டுக்

கவிஞர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்; நாட்டின் அரசியல் குமுறலையும் சமுதாயச் சீரமைப்புப் புரட்சியையும் பாரதியும் பாரதிதாசனும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்; அதனால் அவர்கள் உயர்வு பெற்றார்கள். அவர்களுடைய கவிதைகள் மக்கள் உள்ளத்தில் வெள்ளம் போல் பாய்ந்து தேங்கின. அங்கிங்கெனாதபடி எங்கும் பொங்கிப் பரவும் வாய்ப்பையும் வானில் பறக்கும் வண்ணப்பறவைகளின் சுதந்திர உணர்ச்சியும் பெற்று வட்டமிட்டு உலவின. தமிழ்க் கவிதை எளிய நடை பயின்றது; இனிய சுவை பொழிந்தது; புரட்சிக் கோலம் பூண்டது; இக்கோலத்தில் திளைத்துப் பூத்துப் பொலிவு பெற்றவர் பாரதியும் பாரதிதாசனுமே எனலாம்.

அரசியல் சூழ்நிலையைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும் பயன்படுத்தினர். என்றாலும் பாரதியைப்போல் பாரதிதாசனைப்போல் கொந்தளித்து எழ அவரால் இயலாது போயிற்று. அவர்கள் இருவரிடமும் கிளர்ந்து எழுந்து முழுமை பெற்ற ஒரு தனி வேகம் இராமலிங்கம் பிள்ளையிடத்து அரைகுறையாகவே நின்றுவிட்டது. என்றாலும் அவர் கவிதைகளும் படித்து உணர்ந்து மகிழத் தக்கனவாம். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது என்று சத்தம் மிகச் செய்து பாடிய நாமக்கல் கவிஞர் நாட்டுப் பேரவைக் கவிஞர் எனப் பாராட்டுதல் பெற்றுள்ளார். அவர் இயற்றிய நூல்கள் **அவளும் அவனும், பிரார்த்தனை, தமிழன் இதயம், கவிதாஞ்சலி** முதலியனவாம்.

கவிமணி ஒரு தனிமணி. இவருடைய கவிதைகள் மிகமிக எளியவை; இனியவை. இவருடைய சொந்தக் கவிதைகளைவிட இவர் பிறமொழியிலிருந்து தமிழில் பெயர்த்து அளித்துள்ள கவிதைகள் மிகுதியான சுவையும் மயக்க வைக்கும் அழகும் கொண்டவையாகத் திகழ்

கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக 'உமர்கய்யாம் பாடல்'களைக் கூறலாம். இதில் கவிமணி பாராட்டத் தக்க வெற்றியை அடைந்துள்ளார். பிறமொழிக் கவிதைகள் சில சிந்தாமல் சிதறாமல் அழகு நந்தாமல் அப்படியே தமிழ் ஏட்டில் ஏற்றிய பெருமை கவிமணியைச் சாரும்.

கவிமணியின் கவிதைகளில் மென்மைத் தன்மை கொஞ்சி விளையாடுகிறது; தொட்டால் துவண்டுவிடுமோ என்ற அளவுக்கு அவ்வளவு மென்மை! பூவின் கனவுகளையும் கண்ணீரையும் கவிமணி சித்திரிப்பதைப் பார்த்தால் அந்த நெளிவு அவருக்கே உரியது என்ற எண்ணம் தோன்றாமல் இருக்காது. மலரின் மென்மையையும் அதன் வாழ்வின் தன்மையையும் எடுத்துக் கூறும் எழில் நிறைந்த பாடல்களுள் ஒன்று பின்வருமாறு:

முள்ளுடைச் சிறுசெடியின்—கனவாய்
மூண்டு சிரித்த மலர்
கள்ளென்னும் பொக்கிஷத்தால்—விம்மியே
கர்வம் அடைந்த மலர்

பனித்துளி மணிசூடித்—தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன் கீழ்—மௌனமாம்
கல்வியைக் கற்ற மலர்

அந்திச் சிவப்பினையும்—வான்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர்—மணமே
செய்து திளைத்த மலர்

வீழ்ந்து கிடக்குதையே—உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை—மண்ணிலே
வரைந்துளதோ வண்டே.

இவருடைய கவிதைகள் 'மலரும் மாலேயும்' என்ற தொகுப்பில் வெளிவந்துள்ளன.

சுத்தானந்த பாரதி மக்களோடு ஒட்டாமல் உறவாடாமல் தூரத்தே விலகிவிடுகிருர்; அவருடைய எண்ணமும், எழுச்சியும் உணர்ச்சியும் உயிர்த்துடிப்பும் பராசக்தியையே சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன. எனவே அவருடைய உணர்ச்சி வடிவமான கவிதைகள் அனைத்தும் மக்களைச் சுற்றி வட்டமிட அடியோடு மறுத்துவிட்டன. அவருக்கும் மக்களுக்கும் இடைவெளி மிகுதியாக உள்ளது. அவருடைய பாடற்றிரட்டு பாரத சக்தி மகா காவியம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

புதிய இளங் கவிஞர்கள் அவ்வப்பொழுது நூல்வடிவாகவும் செய்தித் தாள்கள் மூலமும் புத்தம் புதிய கவிதைகளை இயற்றி வெளியிடுகின்றுர்கள். பாரதி தோற்றுவித்த புதிய மரபை அணையாமல் போற்றி வரும் தொண்டை இவர்கள் செய்துவருகின்றனர். மாணவர்கள் பலர் உயர்ந்த கவிதைகளை எழுதி அவ்வப்பொழுது இதழ்களில் வெளியிட்டுவருகின்றனர். கவிதை இப்பொழுது வளரும் கலேயாக விளங்குகிறது; திரைப்படங்கள் லும் கருத்துப்பொலிவு கொண்ட கவிதைகள் பல இப்பொழுதுவெளிவந்து கொண்டிருக்கின்றன. இழிந்த பாட்டுக்களும் ஒருசில இசைக்கப்படுகின்றன. தமிழ்ப் பாடல்களால் திரைப்படங்கள் சிறப்புப் பெற்று வருகின்றன; கவிதை பொதுமக்கள் உடைமையாகிவிட்டது.

## திறனுய்வும் மொழியாய்வும்

இருபதாம் நூற்றுண்டில் இலக்கிய வளர்ச்சியோடு திறனய்வு வளர்ச்சியும் உடன் இயைந்து வருகின்றது. இலக்கண விளக்கம் இருந்த இடத்தில் மொழியியல் ஆய்வுகள் பெருகிவருகின்றன.

மேலைநாட்டுத் தொடர்பால் இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்து வரும் மரபு பெருகி உள்ளது. சிலப்பதிகாரத்தைப் பற்றிய திறனாய்வு நூல்கள் பல வெளிவந்துள்ளன. டாக்டர் மு. வ. வின் இளங்கோவடிகள், கண்ணகி, மாதவி ஆகியவையும், திரு. மார்க்கபந்துசர்மா அவர்களின் சிலம்பின் இரசனை, சிலம்பின் பூக்கள் முதலியனவும், விபுலானந்த அடிகளின் யாழ்நூலும், தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் குடிமக்கட் காப்பியமும் கானல் வரியும் குறிப்பிடத் தக்கன. வ. வே. சு. ஐயர், டி. கே. சி.. சேதுப்பிள்ளை முதலியோர் கம்ப இராமாயண ஆய்வுக் கட்டுரைகள் பல நல்கியுள்ளனர். இவ்வாறே பல பழைய நூல்களுக்கு ஆய்வு நூல்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன.

மொழியியற்றுறை மிகவேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. டாக்டர் கால்டுவெல் விட்டு வைத்த இடத்திலிருந்து இத்துறை மிக முன்னேற்றம் பெற்றுள்ளது. சிறப்பாகப் பேச்சு மொழிகளின் இயல்பையும், அமைப்பையும் பலர் ஆராய்ந்து வருகின்றனர்.

ரா. பி. சேதுப்பிள்ளை சொற்களின் பிறப்பியலும் சிறப்பியலும் பற்றிச் சீரிய கட்டுரைகள் நூல்கள் வடிவில் தந்துள்ளார். செக் நாட்டு மொழியியல் அறிஞர் கமீல் சுவலபில் பேச்சுத் தமிழின் திரிபுகள் இடத்துக்கு இடம் பெறும் இயல்பினைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழ் மொழிவரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியும் பேசியும் மொழியியல் அறிவைப் பரப்பி வருகின்றார். இவருடைய கட்டுரைகள் நுட்பமும் செறிவும் வாய்ந்தவை. இவர் சிறந்த மொழியியல் அறிஞராகவும் இலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்கி மொழிக்கும் இலக்கியத்திற்கும் சிறந்த ஆராய்ச்சிப் பணிகள் செய்து வருகின்றார்.

தமிழ் பல்வகைத் துறையிலும் வளர்ந்து பண்டைப் பெருமையும் புதிய வளர்ச்சியும் பெற்றுத் தனக்கென ஒரு தனிவரலாற்றை உருவாக்கிக் கொண்டது. தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவும் உரைநடையும் பெற்றுத் திட்ப நுட்பமும் செறிவும் நெகிழ்வும் கொண்டு காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றங்களைத் தாங்கிப் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கித் தமிழரின் பண்பாட்டையும் கலைச் சிறப்பையும் காட்டி உணர்வுக்கும் அறிவிக்கும் விருந்து அளித்து வருகிறது.